புலவரும் புரவலரும்

எஸ்.எம்.ஜெகநாதம்.

கர்கோவில்

புலவரும் புரவலரும்

கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை அவர்களின்
மதிப்புரை பெற்றது

ஆசிரியர் :
வித்துவான் ஈ. பண்டார நம்பியார்

எஸ். எம். ஜெகநாதம்
நாகர்கோவில்

 1954 [விலை ரூ. 1–0–0

First Edition—October 1952
Revised Edition—July 1953
Second Edition—April 1954

APPROVED FOR CLASS USE
BY THE MADRAS TEXT-BOOK COMMITTEE
[*Fort St. George Gazette dated* 13-1-1954
Supplement to Part I-B, Page 6]

Kabeer Printing Works, Madras (2483)

மதிப்புரை

'புலவரும் புரவலரும்' என்ற நூலில் உள்ள பல பாகங்களையும் படித்துப் பார்த்தேன். அவை ஒவ்வொன்றிலும் பண்டைப் புலவர்களுடையவும் மன்னர்களுடையவும் சரித்திரங்கள் தற்காலத்திற்கு ஏற்ற முறையில் இனிய தமிழில் அழகாய்க் கூறப்பட்டிருக்கின்றன. நம் நாட்டுச் சிறுவர் சிறுமியர்கள் இந்நூலை விரும்பிக் கற்பார்கள் என்று நம்புகிறேன்.

ஆசிரியர் அவர்களுடைய முயற்சிகளெல்லாம் வெற்றியடையுமாறு திருவருள் உண்டாவதாக!

புத்தேரி,
28—7—51

தேசிகவிநாயகன்

முகவுரை

'ஒரு நாட்டின் சிறந்த செல்வம் பொருட்செல்வ மன்று; அந்நாட்டு மக்கள் பெற்றுள்ள இலக்கியங்களில் காணப்படும் கருத்துச் செல்வமேயாகும்,' என்பர் அறிஞர். இம்முறையில் தமிழ் மக்களாகிய நாம் பெரும்பாக்கிய சாலிகளேயாவோம். நாம் பெற்றுள்ள சங்கநூற்களை நமது தனிப்பெருஞ்சொத்து என்று பாராட்டலாம். அந் நூற்களில் புலவர்களும், புரவலர்களும், உழவர்களும், உத்தமர்களுமாகிய நன் மக்கள் காட்சியளிக்கின்றார்கள்; இளவுள்ளங்களில் அரும்ப வேண்டிய அரிய கருத்துக்கள் நிறைந்து காணப்படுகின்றன.

ஆதலின், சங்கநூற்களை மாணவர் உலகிற்கு அறி முகஞ்செய்து வைப்பதன் மூலம், மாணவர்கள் மாண்புறு வதற்கு வழி வகுக்கலாம் என்பது எனது எண்ணம். அவ் வெண்ணத்தால் சங்கநூற் கருத்துக்களுக்குப் புதிய உருவங் கொடுத்து இந்நூல் எழுதப்பட்டுள்ளது.


இதனைக் கற்கும் மாணவர்கள் அன்பு, அறிவு, ஈகை, இரக்கம், தியாகம் முதலிய நல்லியல்புகளை நன்குணர்ந்து, நன்னடையில் நாட்டங்கொண்டு, அறநெறி ஒழுகுவதோடு, இனிய தமிழ் நடை எழுதும் வன்மையும் பெற்றுத் திகழ் வார்கள் என்று நம்புகிறேன்.

இந்நூல் தோன்றுவதற்குத் தூண்டுகோலாய் இருந்தவர், திருவனந்தபுரம் சர்வகலாசாலைத் தமிழ்த் துறைத் தலைவராய் இருந்து தமிழ்ப்புலமை நடாத்திய காலஞ் சென்ற உயர்திரு. சி. பன்னிருகைப் பெருமாள் முதலியார் அவர்கள், M. A., B. L. என்பதைத் தெரிவித்து, அவர்களுக்கு அஞ்சலி செய்கிறேன். இந்நூலிற்கு மதிப்புரை தந்து ஆசீர்வதித்த அன்புப்புலவர், கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை அவர்கட்கு எனது அன்புசால் வணக்கம் உரியதாகுக!

நாகர்கோவில்,
28—7—51

ஈ. ப. ந.

பொருளடக்கம்


தமிழகம்
வட பெண்ணை
திருவேங்கடம்
தொண்டைநாடு
பாலாறு
தென் பெண்ணை
காவேரி
கொங்கு நாடு
சோழநாடு
உறையூர்
வைகை
வஞ்சி
மதுரை
சேரநாடு
பாண்டியநாடு
குமரிமுனை
ஈழநாடு
குடகடல்
குணகடல்

புலவரும் புரவலரும்

I. தமிழகம்

தமிழ்த்திருநாடு :

“ தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற—எங்கள்
தாயென்று கும்பிடடி பாப்பா !
அமிழ்தி லினியதடி பாப்பா !—எங்கள்
ஆன்றோர்கள் தேசமடி பாப்பா !”

என்ற பாரதியார் பாடலை உற்று நோக்குவோம். நாட்டுப்பற்று மிக்க பாரதியார், தமிழ் மொழி வழங்கும் நாட்டைத் ‘தமிழ்த் திருநாடு’ என்று பாராட்டுகிறார்; இளங்குழந்தைகளின் உள்ளங்களிலும் நாட்டுப்பற்றை ஊட்டுவதற்கு அதைத் தாயென்று கும்பிடுமாறு உபதேசிக்கிறார்; தமிழ் மொழி அமிழ்தம் போல இனியது என்று கூறி, தமிழ் நாடு ஆன்றோர்கள் தேசம் என்று நினைவூட்டுகிறார். ஒருவனுக்குத் தன்னை ஈன்ற அன்னையிடம் எத்தகைய அன்பு இருத்தல் வேண்டுமோ, அத்தகைய அன்பு, பிறந்த நாட்டினிடத்தும் வளர்த்த மொழியினிடத்தும் குழந்தைப் பருவம் முதற்கொண்டே தோன்றி வளர்தல் வேண்டும் என்பது பாரதியார் கருத்து. நாட்டுப் பற்றும் மொழிப் பற்றும் இல்லாத மக்கள் வாழும் நாடு வீழ்ந்து படுமன்றோ ?

தமிழகத்தின் தொன்மை :

தமிழ் நாடு, ‘தமிழகம்’ என்றும் வழங்கப்படும். தமிழகத்தின் தொன்மையை அறிவதற்குரிய சான்றுகள் பலவாய் இல்லை; ஆங்காங்கு வரும் சிறு

குறிப்புக்களைக் கொண்டே ஒருவாறு உணர்தல் வேண்டும்; அவையும் இலை மறை காய்போலக் காணப் படுகின்றன. ஆரிய மக்களுக்கு மிகப் பழமையான நூல் இருக்கு வேதம்; அதைப் போலவே தமிழ் மக்களுக்கு மிகப்பழமையான நூல் தொல்காப்பியம். அந்நூல் தோன்றிய காலத்தைத் திட்டமாக அறிவதற் கில்லை; ஆராய்ச்சியாளர்களிடையிலும் பல மாறு பட்ட கருத்துக்களே காணப்படுகின்றன. பரம்பரை வரலாறு, அந்நூல் சுமார் கி. மு. 5000-ல் தோன்றிய தென்று தெரிவிக்கின்றது. தமிழகத்தின் தொன்மையை அறிவுறுத்தும் நூற்களுள் தொல்காப்பியமும் ஒன் றுகும். அந்நூலில், தமிழகத்தை முன்னுளில் முடி மன்னர் மூவர் ஆண்டு வந்தனர் என்ற செய்தி காணப் படுகின்றது. ‘வண்புகழ் மூவர் தண்பொழில் வரைப்பு’ என்பது தொல்காப்பியம். ‘வான்மீகம்’ போன்ற ஆதி காவியங்களிலும், அசோகர் காலத்துக் கல்வெட்டுக் களிலும் மூவேந்தர்களின் பெருமை பேசப்படுகிறது. மெகஸ்தனிஸ், பிளினி, தாலமி, மார்க்கோ போலோ, பெரிப்புளுஸ் ஆசிரியர் முதலியவர்களின் செலவு நூற்குறிப்புக்களும் தமிழகத்தின் தொன்மைக் குச் சான்று பகர்கின்றன. இலங்கை வரலாற்று நூலா கிய மகாவமிசத்தில், கி.மு. நான்காம் நூற்றுண்டுக்கு முற்பட்ட தமிழகத்தைப் பற்றிய செய்திகள் காணப் படுகின்றன. சுருங்கக்கூறின், தமிழகத்தின் தொன் மையும், தமிழ் மக்களின் பழமையும் சரிதகாலத்தை யுங் கடந்து ஒளிர்வனவாம்.

எல்லைகள் :

இன்று நாம் வதியும் தமிழகம் பன்னிரண்டு மாவட்டங்களை மட்டும் தன்னகத்துக் கொண்டு

குறுகிக் கிடக்கின்றது. பல நூற்ருண்டுகளின் முன்பு, கன்னடம், தெலுங்கு, மலையாளம் என்னும் மொழிகள் பேசப்படும் நாடுகளும் தமிழகத்தின் ஒரு பகுதியாய் இருந்து வந்தன. அக்காலத்தில், வடக்கே வேங்கடமலையும், தெற்கே குமரியும், மேற்கிலும் கிழக்கிலும் கடலும் தமிழகத்தின் எல்லைகளாய் விளங்கின. தொல்காப்பியத்திற்குப் பாயிரங்கூறப்புகுந்த ஆசிரியர் பனம்பாரனர்,

"வடவேங்கடம் தென்குமரி
ஆயிடைத்
தமிழ்கூறு நல்லுலகத்து."

என்று தமிழ் நாட்டின் எல்லை கூறிப் போந்தார். எனவே, அவர் காலத்துக்குப் பின்னரே, தமிழ் நாட்டைக் கன்னடம் முதலிய பிற மொழிகள் கவர்ந்தன என்று கருத இடமிருக்கின்றது. தொல்காப்பியர் காலத்திற்கு முன்னர், தமிழகத்தின் வடவெல்லை விந்தியமலை வரை விரிந்திருந்ததென்றும், அதற்கு அப்பாலும் அகன்றிருந்ததென்றும் ஆராய்ச்சி வல்லுநர் கூறுகின்றனர்.

கடல் கொண்ட தமிழகம் :

தென்னெல்லையாகக் கூறப்பட்ட 'குமரி' என்பது இன்றுள்ள குமரி முனையைக் குறியாது, ஓர் ஆற்றினைக் குறிப்பதாகப் பழந்தமிழ் நூல்கள் பகர்கின்றன. அவ்வாற்றிற்கும் தெற்கே, 'பஃறுளி' என்னும் மற்ருேர் ஆறு ஓடியதாகப் புறநானூறு முதலிய நூல்கள் அறிவிக்கின்றன. சிலப்பதிகாரம், 'குமரிக் கோடு' என்னும் மலையையும், பஃறுளியாற்றையும் கடல் கொண்டதாகத் தெரிவிக்கின்றது.

"பஃறுளி யாற்றுடன் பன்மலை அடுக்கத்துக்
குமரிக் கோடுங் கொடுங்கடல் கொள்ள."

என்பது சிலப்பதிகாரம். இந்நூலுக்கு உரை கண்ட அடியார்க்கு நல்லார், கன்னியா குமரிக்குத் தெற்கே நாற்பத்தொன்பது நாடுகள் இருந்தன என்றும், அவை கடலால் கொள்ளப்பட்டன என்றும் கூறுகின்றார். இந்நிலப் பரப்பு, 'குமரி நாடு' என்று குறிக்கப்பட்டுள்ளது. 'இலெமூரியாக் கண்டம்' என்பதும் இதுவே. இப்பொழுதுள்ள இந்து மகா சமுத்திரம் என்னும் பெருநீர்ப் பரப்பு, ஒரு காலத்தில் நிலப்பரப்பாய் இருந்தது என்றும், அந்நிலப்பரப்பு ஆப்பிரிக்காவின் தென்கோடியிலிருந்து ஆஸ்திரேலியாவின் தென்கோடி வரையில் பரந்திருந்தது என்றும், அக்காலத்தில் இமயமலை கடலுக்குள் ஆழ்ந்திருந்தது என்றும் நில நூல் வல்லுநர் ஆராய்ந்து கண்ட முடிபுகள், அடியார்க்கு நல்லார் கூற்றுக்கு அரண் செய்கின்றன. கூர்த்த மதியினரான எர்னஷ்டு ஹெக்கல் என்பவர், 'படைப்பு வரலாறு' (History of Creation) என்ற நூலிலும், ஸ்காட்டு எலியட்டு என்பவர், 'மறைந்த இலெமூரியா' (Lost Lemuria) என்ற நூலிலும் இவ்வுண்மையை உலகிற்கு உணர்த்தியிருக்கின்றனர். கடல் கொண்ட குமரி நாடே மக்கள் தோன்றிய முதலிடம் என்றும், அங்கேயே ஆதித் தமிழ் மக்கள் வாழ்ந்தார்கள் என்றும், கடல் கொள்ளக் கொள்ள அங்குள்ள மக்கள் வடக்கு நோக்கி வந்து இப்போதுள்ள தமிழ் நாட்டில் தங்கினார்கள் என்றும் கருதப்படுகிறது. இவ்வாறு பிற மொழிகளும் கடலும் கவர்ந்தன போக, எஞ்சிய சிறு பாகமே நமது தாய்த் தமிழகமாய் இருக்கின்றது. இவ்வெல்லையுங்

குறைவுபடாமல் காப்பது தமிழ் மக்களின் தலையாய கடமையன்றோ ?

முன்னாள் மன்னர் :

தொன்னலம் வாய்ந்த இத்தமிழகத்தை முன்னாளில் முடி மன்னர் மூவரேயன்றிச் சிற்றரசர்களான குறுநில மன்னர்களும் ஆண்டு வந்தார்கள். அவர்கள் பைந்தமிழின் சுவை கண்ட புரவலர்களாய் விளங்கினார்கள். அவர்களின் அவைக்களங்களில் முக்காலமும் உணர்ந்த புலவர்கள் எக்காலத்திலும் இருந்து வந்தார்கள். அவர்கள் இலக்கிய அறிவோடு அரசியலறிவும் பெற்று விளங்கினார்கள் ; தங்களை ஆதரித்த புரவலருக்கு அமைச்சராயும், ஆருயிர் நண்பராயும் இருந்து வந்தனர் ; தத்தம் புலமை தோன்றப் பாக்கள் புனைந்து புரவலர்களை மகிழ்விப்பதுமுண்டு. புரவலர்களும் தமிழ் மொழியின்பால் வைத்த தலையாய அன்பால், அம்மொழியில் ஆழங்கண்ட அருந்தமிழ்ப் புலவர்களைத் தம்முயிரினும் இனிது போற்றினார்கள் ; அவர்களைக் காணுந்தோறும் தாயைக்கண்ட சேயைப் போல உள்ளம் பூரித்தார்கள் ; அவர்கள் தங்களைப் புகழ்ந்து பாடுவதைப் பெரிதும் விரும்பினார்கள் ; அவர்கள் பாடாத நாட்களெல்லாம் தாங்கள் வாழாத நாட்கள் என்றே கருதினார்கள். 'புலவர் பாடும் புகழுடையோர், விசும்பின் வலவனேவா வான வூர்தி எய்துப,' என்பது அக்காலத்தவர் நம்பிக்கை. இவ்வுண்மைகளை எல்லாம் உணர்வதற்கு இலக்கியங்களில் எண்ணற்ற சான்றுகள் காணப்படுகின்றன. அவற்றுள் ஒரு சில இந்நூலுள் எடுத்துக் கூறப்படுகின்றன. படித்துப் பயன் பெறுவது தமிழ் மக்கள் கடனாகும்.

II. ஔவையாரும் அதியமானும்

சேர நாடு :

பண்டைக் காலத்தில் தமிழ் நாட்டைச் சேர சோழ பாண்டியர்கள் என்னும் மூவேந்தர்கள் ஆண்டு வந்தார்கள் என்பதைக் கண்டோம். அம் மூவேந்தர் நாடுகளும் முறையே சேரநாடு, சோழநாடு, பாண்டி நாடு என்று வழங்கப்பட்டன. அம்மூந் நாடுகளிலும் முதன்மை பெற்று விளங்கியது சேர நாடு. தமிழ் நாடுகளைப்பற்றிக் கூறும் போதெல்லாம் சேர சோழ பாண்டி நாடுகள் என்று சேரநாட்டை முதலில் வைத்துக் கூறி வருவது இச்சிறப்புப்பற்றியே என்பர். சேரநாடு என்பது இன்றுள்ள மலையாள மாவட்டமும், கொச்சி திருவிதாங்கூர்ச் சீமைகளும் சேர்ந்த நிலப்பரப்பாகும். மேற்குத் தொடர்ச்சி மலைக்கும் அரபிக் கடலுக்கும் இடைப்பட்ட இந் நாடு, நீர் வளமும் நிலவளமும் நிறைந்து, மலை வளமும் கடல் வளமும் செறிந்து விளங்கிற்று. இந் நாட்டிற்கு வஞ்சி மாநகரம் தலை நகராய் இருந்து வந்தது; தொண்டி, முசிறி என்பன துறைமுக நகரங்களாய் விளங்கின. வேற்று நாடுகளிலிருந்து வியாபாரிகள் கப்பல்களில் வந்திறங்கித் தங்கள் பண்டங்களை விற்றுச் சென்றார்கள். உள் நாட்டிலுள்ள மிளகு, அகில், சந்தனம், யானைத்தந்தம் முதலிய பொருள்கள், பிற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப் பட்டன. வாணிபம் அதிகமாக நடைபெற்றமையால், சேரநாடு செல்வத்திற் சிறந்திருந்தது. செல்வஞ் சிறந்த சேரநாடு, கல்வியிலும் சிறந்து விளங்கிற்று. அக்காலத்தில் ஆடவர்க்கும் பெண்டிர்க்கும் வேற்

றுமையின்றிக் கல்வி அளிக்கப்பட்டு வந்தமையால் பெண் கல்வி எங்கும் பரவியிருந்தது. மகளிரும் ஆடவர்களைப்போலப் பல துறைகளிற் பயின்று, கல்வி சிறந்து, நூல்கள் இயற்றிச் சம உரிமை பூண்டு வாழ்ந்தனர். கொடை, வீரம், தியாகம் முதலிய அருங்குணங்களும் அவர்களிடம் அமைந்திருந்தன.

ஔவையார் :

சேரநாட்டில், சுமார் ஆயிரத்தெண்ணூறு ஆண்டுகளுக்கு முன்னர், ஔவையார் என்னும் பெண்பாற் புலவர் தோன்றினர். அவர் சேரநாட்டில் பிறந்த காரணத்தாலேயே அந்நாட்டு மக்கள் அவரைத் தெய்வமாக வழிபடுகின்றனர் போலும்! சேரநாட்டின் ஒரு பகுதியான நாஞ்சில் நாட்டில் ஔவைத் தெய்வத்தின் ஆலயங்கள் பல காணப்படுகின்றன. அவ்வாலயங்களுக்குக் குறித்த நாட்களில் மக்கள் சென்று, கூழும் கொழுக்கட்டையும் படைத்து, ஔவைத் தெய்வத்தை வழிபடுகின்ற வழக்கம் இன்றும் இருந்து வருகின்றது.

ஔவையார், பாணர் குடியைச் சார்ந்தவர். பாணர் என்பவர், தமிழ் நாட்டுப் பழங்குடிகளில் ஒரு பிரிவினர்.

> "துடியன், பாணன், பறையன், கடம்பனென்று
> இந்நான் கல்லது குடியு மில்லை."

என்று புறநானூறு தெரிவிக்கின்றது. அவர்கள் பண்ணில் வல்லவர்களாய், பாட்டுப் பாடுதலைத் தங்கள் தொழிலாகக் கொண்டிருந்தமையால், பாணர் என்று பெயர் பெற்றனர்கள். அவர்களில் ஆண்மகன் **பாணன்**, **பாண்மகன்** என்றும், பெண்மகள் **பாடினி**, **பாட்டி**, **பாணிச்சி**, **பாண்மகள்**, விறலி என்றும் வழங்கப்

பட்டனர். அவர்கள் ஆடல் பாடல்களிலும், யாழ் வாசிப்பதிலும் வல்லவர்கள். அவர்களது பாட்டு, கேட்பாரைப் பிணிக்கும் தன்மையது. அவர்கள் தமிழ் நாட்டுப் பேரரசர்களையும் சிற்றரசர்களையும் பாடி, அவர்கள் தரும் பரிசிலால் வாழ்க்கை நடத்தி வந்தார்கள்; போர்க் காலங்களில் அரசருடன் போர்க் களம் சென்று, அவர் அருகிருந்து உதவுவார்கள்; அரசர்களும் அவர்களுக்குப் பொற்பூவும், அவர்கள் மனைவியர்க்கு ஆபரணங்களும் பரிசிலாகக் கொடுத்து மகிழ்வார்கள்; பாணர் பசித்திருத்தலைக் காணப் பொறார்கள். அரசன் ஒருவனைப் 'பாணர் பசிப் பகைஞன்' என்று மதுரைக்குமரனார் என்னும் புலவர் பாடியுள்ளார். சேரமன்னர்களைப் 'பாணர்ப் புரவலர்' என்று பதிற்றுப்பத்து என்னும் நூல் பகர்கின்றது. பாணர் குடியில் தோன்றிய ஔவையார், தம் குலத்திற்குரிய ஆடல் பாடல்களில் தேர்ந்து, நினைத்த பொருளைக் கவிதையாகப் புனையும் புலமை பெற்று விளங்கினார்.

ஒரு நாள் ஔவையாருக்குத் தமிழ் நாடெங்கணும் சென்று, தம் புலமை தோன்றப்பாடி, பரிசில் பெற்று வரவேண்டும் என்ற எண்ணம் எழுந்தது. அப்பொழுது அவர் முதலில் யாரிடம் செல்வது என்று ஆலோசித்தார். தமிழ் நாட்டுப் புரவலர் பலரும் அவர் கண்முன் காட்சி அளித்தனர். என்றாலும், அதியமான் நெடுமானஞ்சி என்ற மன்னவன் ஒருவனே அம்மையாரின் உள்ளத்தைப் பெரிதும் கவர்ந்து நின்றான். அவனிடமே முதற்பரிசில் பெற வேண்டும் என்று அம்மையார் முடிவு கட்டினார்.

அதியமான் :

சேரநாட்டின் ஒரு பகுதியாய் விளங்கியது கொங்கு நாடு. இப்போதுள்ள சேலம், கோயம் புத்தூர், நீலகிரி மாவட்டங்களைக் கொண்ட நிலப் பகுதியே பழைய கொங்கு நாடு என்பது. அந்நாட் டைச் சிற்றரசர் பலர் ஆட்சி புரிந்து வந்தனர். தகடூர் அந்நாட்டின் தலைநகராய்த் திகழ்ந்தது. இன்று சேலம் மாவட்டத்தில் உள்ள தருமபுரியை அடுத்து அதமன் கோட்டை என வழங்கும் இடமே அன்று தகடூர் என்று வழங்கி வந்தது என்பர். அந்நகரிலிருந்து அதியமான் என்னும் மன்னன் கொங்கு நாட்டை ஆண்டு வந்தான். அவன் சேரமானுக்கு உறவினன்; கடையெழுவள்ளல்களுள் ஒருவன் ; வீரமிக்க மழவர்களுக்குத் தலைவன் ; அரசர் எழுவரோடு பகைத்துப் போர்மேற்சென்று அவர்களை வென்ற பெருவீரன் ; புலவர் பெருமக்களை நன்கு வரவேற்று உபசரித்துப் பரிசில் வழங்கும் பண்பு மிக்க புரவலன்.

அதியமானது அவா :

அதியமானிடம் பரிசில் பெற விரும்பிய ஔவை யார், நன்னாள்கொண்டு, நன்னிமித்தம் பார்த்துத் தக டூரை நோக்கி வழி நடந்தார் ; அதியமானது அரண் மனையை அடைந்தார் ; அரசனைக்கண்டு அவன் பெரு மையினைப்பாடி, தம் வறுமையினை எடுத்துரைத்தார். அதியமான் அம்மையார் தன் அவைக்களம் வந்தது தவப்பயனே என்று எண்ணினான் ; அவரை அன் புடன் வரவேற்று இன்புடன் உபசரித்தான். அம்மை யாரைத் தம் அவைக்களப் புலவராக அமர்த்த வேண்டும் என்பது அவனது அவா. வரிசையறிந்து

பரிசில் அளித்தால் அம்மையார் அகன்றுவிடுதல் கூடு மல்லவா? ஆதலின், அதியமான் காலம் தாழ்த்தினன். தன் முக்கிய அலுவல் முடிந்ததும் தன் மனக்கருத்தை அம்மையாரிடம் அறிவிக்க வேண்டும் என்பது அவ னது எண்ணம்.

ஔவையாரின் முனிவு :

ஔவையார் பொறுத்திருந்து பார்த்தார். அரசன் பரிசில் அளித்தானில்லை. அவர் மாறுபட உணர்ந் தார்; மன்னவன் மதிக்கவில்லை என்று கருதினர். அவர் உள்ளத்தில் வெறுப்புத் தோன்றியது; சினம் மிகுந்தது. அவர் மன்னனை நேரில் பார்க்கவும் மனங்கொள்ளாது, எதிரே நின்ற வாயில் காவலனை நோக்கி, "வாயில் காப்போய், வாயில் காப்போய், பரிசிலர், கொடைக் குணமுடையாரது செவியாகிய விளைநிலத்தில் பொருள் செறிந்த சொற்களாகிய விதையை விதைத்துத் தாம் எண்ணிய பரிசிலாகிய தானியத்தை விளைவிக்கும் உறுதிப்பாடு உடைய வர்கள்; பரிசிலைக்கொண்டு வாழும் வாழ்க்கையை உடையவர்கள். இத்தகைய பரிசிலர்க்கு அடையா நெடுங்கதவுடைய வாயிலைக் காப்போய், விரைந்து செல்லும் குதிரையையுடைய நெடுமானஞ்சி தன் தரத்தை அறியாவிடினும், என் தரத்தையேனும் அறி யானே? இவ்வுலகம், அறிவும் புகழுமுடையார் அனைவரும் இறந்தொழிய வெற்றிடத்தை உடைய தாகிவிடவில்லையே! ஆதலின், இப்பொழுதே புறப் படுகின்றேன். இவனன்றிப்போக்கில்லையோ எனக்கு? யான் எத்திசைச் சென்றாலும் அத்திசையில் எனக் குச் சோறுளது; என்னை வரவேற்று உபசரிப்பா ருளர். இதனை நும்மரசனுக்கு அறிவிப்பாயாக!"

என்று முனிவு தோன்றப் பேசிவிட்டு வேற்றிடம் செல்ல விரைந்தெழுந்தார்.

அஞ்சியின் அச்சம் :

வாயில் காப்போன், விரைந்து சென்று ஔவையாரின் சினமிகுதியை அதியமான் நெடுமானஞ்சிக்கு அறிவித்தான். எழுவேந்தரின் சினத்திற்கும் அஞ்சாத அஞ்சி, தமிழ்மூதாட்டியாரின் சினத்திற்கு அஞ்சினான்; நடுங்கினான்; 'என்ன நேருமோ!' என்று மனங் கலங்கினான்; அம்மையாரின் எதிரில் சென்று, பரிசில் கொடாது காலந்தாழ்த்தமைக்குக் காரணங்கூறி, தன் கருத்தை வெளிப்படுத்தினான்; அவைக்களம் வருமாறு அடி பணிந்து வேண்டினான். அதியமானது மனக்கருத்தை உணர்ந்த அம்மையார், சினந் தணிந்து, அவனது அவைக்களம் சென்றார். அரசன் அன்பு ததும்பப் பேசி, அளவு கடந்த பரிசில் அளித்தான்.

பண்புடையாளர் தொடர்பு :

அதியமானது வள்ளன்மையையும் அன்புள்ளத்தையும் கண்ட ஔவையார், அகமிக மகிழ்ந்தார். "அறியாது முனிந்தோமே!" என்று வருந்தினர்; அவனது வண்மையை வாழ்த்தி, அன்பைப் புகழ்ந்து, அவனது விருப்பப்படி அவனது அரண்மனையில் வசித்து வருவாராயினர். வறுமையால் வாடிய மக்கள் பல நாட்கள் பலருடன் வந்தாலும், அவர்களை என்றும் போலவே வரவேற்று, இன்முகங்காட்டி, இன்னுரை இயம்பி, பரிசளித்து அனுப்பும் அவ்வள்ளலின் பெருமையை ஔவையார்,

"ஒருநாள் செல்லலம் இருநாள் செல்லலம்
பலநாள் பயின்று பலரொடு செல்லினும்
தலைநாள் போன்ற விருப்பினன் மாதோ."

என்று பாராட்டினர். அவர்களது நட்பு,

"நவிறொறு நூனயம் போலும் பயிறொறும்
பண்புடை யாளர் தொடர்பு."

என்ற வள்ளுவர் வாய்மொழிக்கு இலக்கியமாய் ஒருகாலைக்கொருகாலை வளர்ந்துகொண்டே வந்தது.

அமிழ்து விளை தீங்கனி :

இங்ஙனம் இருக்குங்கால் ஒரு நாள், அதியமான் மலைச்சாரல் ஒன்றை அடைந்தான்; அம்மலை உச்சியில் ஓங்கி வளர்ந்த மரச்செறிவின் மத்தியில், நெல்லி மரம் ஒன்று நிற்பதாகவும், அம்மரத்தில் பழுத்து விளங்கிய அருங்கனி ஒன்று இருப்பதாகவும் கேள்வியுற்றான். அமிழ்து விளை தீங்கனி அது. அதனை உண்டார் நீண்ட ஆயுளைப் பெறுவர் என்பதை அறிந்தான். அக்கனியைப் பெறுவது எளிதன்று. என்றாலும், அதியமான் அதனைப் பெறுதற்குரிய முயற்சியில் தலைப்பட்டான். முயற்சியுடையார் இகழ்ச்சி அடைதலுமுண்டோ? கனி கைக்குக் கிடைத்தது. அதனைத் தானே உண்டு நெடிது வாழ்ந்திருக்கலாம் அல்லவா? ஆனால், அதியமான் அவ்வாறு செய்தானில்லை.

தமிழ் நெஞ்சம் :

அதியமானது தமிழ் நெஞ்சத்தில் தன்னலத்திற்கு இடமேது! அவன் பலவாறு சிந்திக்கத் தொடங்கினான், "நான் ஒரு புவியரசன்தானே! என்னைப் போன்று எத்தனையோ மன்னர்கள் ஆண்டு மாண்டிருக்கிறார்கள். அவர்களால் உலகிற்கு என்ன நன்மை

விளைந்தது! நானும் பன்னூறுண்டுகள் ஆண்டாலும், உலகிற்கு என்ன நன்மை செய்துவிடப் போகிறேன்! கவியரசர்களால் நாட்டிற்கு விளையும் நன்மைகளுக்குக் கணக்குமுண்டோ? நம் கவியரசியார் — கல்விக் களஞ்சியம் — கலைச்செல்வியார் — ஔவையாரன்றோ நீடு வாழ வேண்டும்! இவ்வுலகு கற்றறிந்தாராலேயே நிலைத்திருக்கிறது. அவரே உலகிற்குக் கண்ணுவர். கற்றறிவுடைய ஒவையார் நெடிது வாழ்ந்தால், மக்கள் ஒழுகலாறு இதுவெனத் தீஞ்சுவை கனிந்த கவிதைகளால் உலகிற்கு அறிவுறுத்துவர்; தம் அறிவின் மாட்சியாலும் நாவன்மையாலும் உலகை நல்வழியில் நடத்திச் செல்வர்; தம் நூல்களாலும் ஒழுக்க முறையாலும் உலகிற்கு வழி காட்டுவர். அவர் தமிழ்த் தாயின் தவப் புதல்வியரல்லரா? அவருக்கு இக்கனியை நான் கொடுப்பது தமிழ்த் தாய்க்குக் கொடுப்பதற்கன்றோ ஒப்பாகும்? இதுவே நான் செய்யத்தக்கது,'' என்று பலபல எண்ணி ஒரு முடிவிற்கு வந்தான்.

கனியின் பெருமையை வெளிப்படக் கூறினுல், ஔவையார் கனியை உண்ண மறுத்து விடுதல்கூடும் என்பது மன்னவனுக்குத் தெரியும்; ஆதலால், கனியின் ஆற்றலைக் கூருது, சாதாரணமான கனியொன்றைக் கொடுப்பதைப்போல அம்மையாருக்கு ஈந்தான். அம்மையார் அதியமானது அன்புப் பரிசிலாக அதனை வாங்கியுண்டார். அதியமானே, அடங்கா இன்பத்தில் ஆழ்ந்து நின்ருன். என்னே! அதியமான் ஔவையாருக்கு நெல்லிக்கனியை ஈந்தான் என்ரு இயம்புவது? தனது வாழ்நாளை ஈந்தான் என்றன்ரோ கூறுதல் வேண்டும்? தமிழ் நெஞ்சத்தின் தன்மை அது.

ஆசி மொழி :

கவியரசியார் பிறகு கனியின் ஆற்றலை உணர்ந்தார்; 'புரவலன் என்ற பெயருக்கு உரிய புனிதன் இவனே!' என்று வியந்தார்; உள்ளத்தில் தோன்றிய உவகையால் வாய் மணக்க வாழ்த்தி ஆசி மொழிந்தார், அம்மையாரின் ஆசி மொழியே அதியமான் அழியாப் புகழ் பெறுவதற்கு ஏதுவாயிற்று.

"பொன்னாரம் பொலியும் அழகிய மார்பினையுடைய புரவல, உயர்ந்த மலையுச்சியில் பெறுதற்கரிய நெல்லிக்கனி ஒன்றை முயன்று பெற்று, அதன் பயனை வெளிப்படக் கூறாது மனத்தடக்கிக்கொண்டு, சாதல் நீங்குமாறு அதனை எனக்கு அன்புடன் அளித்தனை! உன் பெருமையினை என்னென்று புகழ்வேன்! தேவரும் அசுரரும் அமிர்தம் பெறும் பொருட்டு மந்தரகிரியை மத்தாகவும் வாசுகியை நாணாகவுங் கொண்டு பாற்கடலைக் கடைந்த காலத்தில் வாசுகி நஞ்சை உமிழ்ந்தது. அந்நஞ்சைச் சிவபெருமான் உண்டு, கடலிலே தோன்றிய சாவா மருந்தாகிய அமிர்தத்தைத் தேவர்களுக்கு அளித்தார். நீயும் அப் பெருமானைப் போல, நெடுங்காலம் உயிர் வாழ்வதற்குரிய நெல்லிக்கனியைப் பெற்றும், அதனை உண்ணாது எனக்கீந்தாய்; கடவுள் குணமன்றோ உன்னிடம் காணப்படுகின்றது? ஆதலின், நீ நஞ்சுண்டும் நிலை பெற்ற பிறை அணிந்த கறைமிடற்று அண்ணலான சிவபெருமானைப்போல என்றென்றும் இவ்வுலகில் நிலைபெற்று வாழ்வாயாக!" என்பது அம்மையாரின் ஆசி மொழி. "நீலமணிமிடற்று ஒருவன் போல மன்னுக பெரும!" என்று கவியரசியார் கூறியது போலவே, அதியமானும் அழியாப் புகழுடம்பு பெற்று விளங்குகின்றான்.

பாராட்டுரை :

ஆசி மொழிந்தும் ஔவையாரின் ஆர்வம் அடங்கவில்லை. அவர் அதியமானது பண்பாட்டையும், தனக்கென வாழாத் தகைமையையும் எண்ணி எண்ணி வியந்தார். ஒரு சமயம் தாம் பசிப்பிணியால் துன்புற்ற பொழுது, தம்மை அன்புடன் அழைத்து விருந்து தந்த வேளாண் மரபினனான 'பூதன்' என்பானது நினைவு அம்மையாருக்கு வந்தது. அப்போது அவர், "அவன் வரகரிசிச் சோறும், வழுதுணங்காய் வரட்டும், முரமுரெனவே புளித்த மோரும் கலந்த அமுதளித்தவன் அல்லவா? அன்று அவன் என்னை அன்பினால் அடிமையாக்கினான்; எனது உள்ளத்தில் முதலிடம் பெற்றான். இன்று இவனது செயல் அவனையும் மறக்கும்படி செய்துவிட்டதே?" எனப் பலவாறு எண்ணமிடலானார். அப்போது அவர் உள்ளத்தில் ஊற்றெடுத்துப் பொங்கிய ஆர்வத்தில் தோன்றிய

> " பூங்கமல வாவிசூழ் புள்வேளூர்ப் பூதனையும்
> ஆங்குவரு பாற்பெண்ணை ஆற்றினையும்—ஈங்கே
> மறப்பித்தாய் வாழதிகா ! வன்கூற்றின் நாவை
> அறுப்பித்தாய் ஆமலகம் தந்து. "

என்ற கவிதையால் அதியமானைப் பாராட்டி மகிழ்ந்தார்.

தொண்டைமான் :

பண்டைத் தமிழகத்தில் தொண்டை நாடு என்பது ஒன்றுண்டு. அது 'தெண்ணீர் வயல் தொண்டை நன்னாடு சான்றோர் உடைத்து,' என்று ஔவையாரால் புகழ்ந்துரைக்கப்பட்ட பெருமையுடையது. பால் போலத் தெளிந்த நீரையுடைய

பாலாறு பாய்ந்து அந்நாட்டை வளமுறச் செய்து வந்தது. இப்போதுள்ள தென்னூர்க்காட்டு மாவட்டத்தின் ஒரு பகுதியும், வடவார்க்காடு, சித்தூர், செங்கற்பட்டு மாவட்டங்களும், நெல்லூர் மாவட்டத்தின் தென் பகுதியும் சேர்ந்த நிலப் பரப்பே பழைய தொண்டை நாடு. காஞ்சி மாநகர் அந்நாட்டின் தலைநகராய் விளங்கிற்று. அந்நகரில் இருந்து தொண்டைமான் இளந்திரையன் என்னும் மன்னர் பெருந்தகை செங்கோலோச்சி வந்தான். அவன் கரிகாற்சோழனுக்குப் பீலி வளை என்னும் நாககன்னிகையிடம் பிறந்தவன்; வீரத்தில் சிறந்தவன்; மூவேந்தருக்கும் நிகரான பெருமையுடையவன்; தமிழறிந்த புலவன். அவன் பாடிய பாடல்கள் நற்றிணையிலும் புறநானூற்றிலும் காணப்படுகின்றன. பத்துப்பாட்டுள் ஒன்றான பெரும்பாணாற்றுப்படை அவன்மீது பாடப்பட்டதே. அவன் அதியமானைப் பற்றி அறிந்திருந்தான்; என்றாலும் தன் படைப் பெருக்கின் இறுமாப்பால், அதியமான் தனக்கு எம்மாத்திரம் என்று எண்ணினான்; அவனைப் போரில் வென்று தனது வீரப் புகழை நிலை நாட்ட வேண்டும் என்று விருப்புற்றான்; அதற்கெனப் போர்ப் படைகள் சேகரித்தான்; புதிய வேற்படைகள் செய்வித்தான்; அவைகளைத் தன் படைக்கலக் கொட்டிலில் அழகுற அடுக்கி வைத்துக்கொண்டு, படை எழுச்சிக்குரிய காலத்தை எதிர் பார்த்திருந்தான்.

அரசியல் தூது :

தொண்டைமானது எண்ணம் எங்கும் பரந்தது; ஒற்றர் அறிந்தனர்; அதியமான் காதுக்கும் எட்டிற்று. அவன் அடங்காக் கோபங்கொண்டு, அரியேறெனச்

சினந்தெழுந்தான்; அப்பொழுதே போருக்குப் புறப் பட எண்ணினான்; சிந்தித்தான். சினம் சிறிது அடங்கிற்று. அப்பொழுது அவன், "தொண்டைமான் என்ன அவ்வளவு பெருவீரனா? நான் அவனுடன் போருக்குச் சென்றால் அவனும் எனக்கு நிகரானவன் என்று பெயர் பெற்றுவிடுதல் கூடுமல்லவா? அவனு டன் போருக்குச் செல்வது எனது வீரப்புகழுக்கே மாசாகும். புலி, எலியோடு போருக்குப் புறப்படுதலு முண்டோ? ஆதலின், ஒரு தூது மூலம் அவன் செருக் கினை அடக்கிவிடுதலே சாலும். அதுவே செய்யத் தக்கது," என்று முடிவு கட்டினான். ஆனால், அதிய மான் யாரைத் தூதனுப்புவது என்று எண்ணிய வனாய், "ஔவையாரே என்னிடம் அன்பு மிக்கவர்; சொல்லின் செல்வியார்; அரசியல் அறிவு படைத்தவர்;

'அன்பறி வாராய்ந்த சொல்வன்மை தூதுரைப்பார்க்
இன்றி யமையாத மூன்று.'

என்றவாறு, தூதவர்க்குரிய முக்குணங்களும் வாய்க் கப் பெற்றவர்; அவரையே தூதனுப்புதல் வேண்டும்," என்று தீர்மானித்தான்.

அம்மையாரும் அதியமான் கருத்திற்கு ஆதர வளித்துக் காஞ்சி மாநகருக்குப் பிரயாணமானார். போகும் வழியில் ஔவையாரின் சிந்தனை உள்ளம் பலவாறு எண்ணமிடலாயிற்று. அவர், "தொண்டை மானும் சிறந்த தமிழ் மன்னன்; புலவர்களைப் புரப்பவன்; தமிழ்க் கலையை வளர்ப்பவன்; அதிய மானும் பேரறிவு படைத்தவன்; தமிழையும் என்னை யும் காப்பவன்; இருவரும் சிறந்த வீரர்; முன் வைத்த காலைப் பின் வையாதவர். இவ்விருவரும் போரில் ஈடுபடுவது நாட்டிற்கு நாசம்; தமிழிற்குத் தாழ்வு. ஆதலின், எவ்வாறேனும் போர் நிகழாது


தடுத்துவிடுதலே தக்கதாகும்,'' என்று உறுதி கொண்டு காஞ்சி மாநகரில் காலெடுத்து வைத்தார்.

ஔவையாரின் வரவுணர்ந்த தொண்டைமான், எதிர் சென்று அழைத்தான்; நல்வரவு கூறி உபசரித்தான்; தன் விருந்தினராய் இருக்குமாறு வேண்டினுன்; அறுசுவை உண்டியை அன்புடன் அளித்துத் தானும் உடனிருந்து உண்டான். அம்மையாரும் உணவு உண்டு, அவனோடு தங்கியிருந்தார். விருந்தால் மயங்குபவரா ஔவையார்? அவர் தாம் கருதி வந்த காரியத்தை முடிப்பதற்குரிய காலம் நோக்கி நின்ருர்.

ஔவையாரின் அங்கதம் :

மறுநாள் தொண்டைமான் தனது பேராற்றலையும் படைப்பெருக்கையும் அம்மையாருக்கு அறிவிப்பதன் மூலம், அதியமானுக்குத் தெரிவிக்க வேண்டும் என்று எண்ணினுன். ஔவையார் தனது படைக்கலக் கொட்டிலை ஒரு முறை நோக்கினுல், தனது போர் வலிமையைத் தாமே உணர்தல் கூடும் என்பது அவனது எண்ணம். ஆதலின், ஔவையாருக்கு அரண்மனைக் காட்சிகளை எல்லாம் காட்டிக் கொண்டே வந்தவன், அப்படியே ஆயுதச்சாலைக்கு அழைத்துச் சென்ருன்; போர்க்கருவிகளை எல்லாம் காட்டி மகிழ்ந்தான். அம்மையார் படைக்கலங்களை எல்லாம் பார்வையிட்டார்

அங்குப் பல வகையான படைக்கலங்கள் அழகாக அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. அவை நெய் பூசப்பட்டுப் பளபளப்புடன் விளங்கின; மாலை சூட்டி மயிற்பீலி அணிந்து அழகு செய்யப் பட்டிருந்தன. அவற்றை எல்லாம் பார்த்துக்கொண்டே



ஔவையாரின் அங்கதம்

வந்த ஒளவையாருக்குத் தாம் வந்துற்ற காரியத்தை முடித்தற்குரிய காலம் வந்துற்றதாகத் தெரிய வந்தது. உடனே, அவர் தொண்டைமானை நோக்கி, "அரசே, உன்னுடைய ஆயுதங்கள் எல்லாம் எவ்வளவு நேர்த்தியாக வைக்கப்பட்டுள்ளன! புதுமை மாறவில்லையே! நெய் பூசி இருப்பது எவ்வளவு பளபளப்பைக் கொடுக்கிறது! மாலை சூட்டி, மயிற்பீலி அணிந்து, காம்பு திருத்தி அடுக்கி வைத்திருப்பது கண்ணைக் கவர்கின்றது! ஆனால், இவ்வாயுதங்கள் பாதுகாப்புடைய அரண்மனையில் பயனின்றிக் கிடக்கின்றன. அவ்வளவுதான்! எம்மரசன் பகுத்துண்டு பல்லுயிர் ஓம்பும் பண்பினன்; வறிஞர் சுற்றத்திற்குத் தலைவன். அதியமான் ஆயுதங்களைப்பற்றி என்ன சொல்வது! அவை எப்பொழுதும் பகைவரைக் குத்துதலால் பழுதுபட்டு, புலால் நாற்றம் வீச, செந்நிறந் தாங்கிச் செப்பனிடுதற்காகக் கொல்லனது உலைக்களமாகிய சிறிய இடத்தில் கிடக்கின்றன!" என்று பேசி முடித்தார்.

தொண்டைமான் தருக்கடங்கல் :

தொண்டை மன்னன் அறிவற்றவனா? அம்மையாரின் அங்கதம் அவனுக்கு விளங்காது போகுமா? "நீ ஆயுதங்களை வைத்து அழகு பார்க்கும் பேடி; அதியமான் போரில் பயன்படுத்தும் வீரன்; அவ்வளவுதான் உங்கள் இருவரிடை காணப்படும் வேற்றுமை," என்ற பொருள் தோன்றப் பேசி இகழ்ந்து உரைத்தனரே ஒளவையார் என்று எண்ணினான் தொண்டைமான்; என்றாலும், தன்னைப் புகழ்வது போலப் பேசி முடித்த ஒளவையாரின்

நயவுரையில் உள்ளத்தைப் பறிகொடுத்தான். அவன் தமிழ்ச்சுவை அறிந்தவன் அல்லவா !

'இறுதி பயப்பினும் எஞ்சாது இறைவற்
குறுதி பயப்பதாம் தூது.'

என்று வள்ளுவர் வகுத்த தூதுவர் இலக்கணம் அம்மையாரிடம் அமைந்திருத்தலைக் கண்டு வியந்தான். பின்னும் அவன் ஔவையாரை நோக்கி, "ஒளி மிக்க நுதலினை உடைய விறலியீர், அப்படியாயின், நும் நாட்டில் எம்மோடு போர் செய்யும் வீரரும் உளரோ ?" என்று வினவினான்.

"அரசே, நீ போரை விரும்பினால், எமது நாட்டில் அஞ்சாது எதிர்த்துப் போர் செய்யும் பாம்பு போன்ற இளவீரர் பலர் உளர் ; அன்றியும், காற்றடித்தலால் மத்தளத்தில் எழும் ஓசையைக் கேட்ட அளவில் போர்ப்பறை என்று விருப்போடு போருக்கெழும் வீரம் மிக்க எங்கள் தலைவனும் உளன்," என்று பதில் மொழிந்தார் ஔவையார்.

அதியமானது போர் விருப்பத்தை அறிந்த மாத்திரத்தில் தொண்டைமானது தருக்கு அடங்கிற்று. அதனைக் குறிப்பாக உணர்ந்த ஔவையார், தம் மனக்கருத்து முற்றுப் பெற்றமையால், தொண்டைமானிடம் விடை பெற்றுத் தகடூரை அடைந்தார் ; அதியமானிடம், நடந்தவற்றை எடுத்துக் கூறினார். அதியமான் தன் அரசியல் தூதரைக் கௌரவமாக நடத்திய தொண்டைமானின் பெருந்தன்மையைப் பாராட்டி, அம்மையாரின் நாவன்மையைப் போற்றிப் புகழ்ந்தான்.

கோவலூர் முற்றுகை :

அக்காலத்தில் பெண்ணையாற்றங்கரையில் அமைந்

திருந்த மலையமானாட்டைத் திருமுடிக்காரி என்னும் அரசன் ஆண்டுவந்தான். அவனை மலையமான் திருமுடிக்காரி என்றும், மலையன் என்றும் வழங்குவார்கள். அவன் முடி வேந்தர் மூவரது நட்பைப் பெற்றிருந்தான் ; கடையெழு வள்ளல்களில் ஒருவன் ; சிற்றரசர் பலரைப் போரில் வென்று தனக்கு ஒப்பாவார் ஒருவருமிலர் என்று செருக்குற்றிருந்தான்; பெருவீரனான அதியமானையும் மதித்தானில்லை. ஒற்றர் மூலம் செய்தி அறிந்த அதியமான், அவனது ஆற்றலை அடக்கி ஒடுக்கி ஆணவத்தை அழித்து வர எண்ணிப் புறப்பட்டான் ; போர்ப்பறை முழங்க, எண்டிசை அதிர, நால்வகைப் படைகளோடு சென்று, அவன் தலைநகரான திருக்கோவலூரை முற்றுகை இட்டான்.

அருள் உள்ளம் :

போருக்குப் பயந்தவனா மலையமான் ; அவனும் சிறந்த வீரன் ; கூற்றுடன்று மேல் வரினும் எதிர்த்து நிற்கும் ஆற்றல் படைத்தவன். அவன் நெடுமானஞ்சி தன் மதிற்புறத்தே போருக்கு வந்துள்ளான் என்பதை அறிந்தான் ; படை வலிமையைப் பெருக்கிக்கொண்டு அஞ்சாது முன் வந்து எதிர்த்தான். இருவர் படைகளும் கை கலந்தன ; போர் கடுமையாய் நடந்தது ; இரத்தம் ஆறெனப் பாய்ந்தது ; பிணங்கள் குன்றெனக் குவிந்தன. மன்னர்களின் பகைமையினால் மக்கள் மடிந்து விழுவது அம்மையாரின் நெஞ்சை உருக்கியது. அப்பொழுது ஔவையார், " இப்போர் தொடர்ந்து நடந்தால் விளையும் கேட்டிற்கு அளவுமுண்டோ ! நாட்டில் வேளாண்மை குன்றும் ; கைத்தொழில் சிதையும் ; செல்வம் அழியும், போருக்குப்

பின் நாட்டில் வறுமையே நிலவும். அம்மட்டோ? கணவரை இழக்கும் காரிகையரும், தந்தையரை இழக்கும் தனயரும் கணக்கில் அடங்குவரோ?'' என்று நீள நினைத்தார். அக்கொடிய காட்சிகள் அம்மையார் உள்ளத்தில் புதியதொரு திட்டத்தைத் தோற்றுவித்தன. "மலையமான், அதியமானது ஆற்றலை உணராது வீணுகப் போர் செய்கிறுன். ஆதலால், அதியமானது போர் வலிமையை மலையமானுக்கு எடுத்துக்கூறிப் போரைத் தடுத்தல் வேண்டும்,'' என்பதே அத்திட்டம். இப்பொழுது ஔவையாரை மலையமான் முன்னே பார்க்கின்றேம். அம்மையார் ஏதோ பேசுகின்ருர். அரசன் துணை வீரர் அனைவரும் அம்மையாரின் பேச்சை விருப்புடன் கேட்டு நிற்கின்றனர். நாமும் கேட்போம்:

"அதியமான் உறையினின்று உருவிய வாட்கள், பகைவர் உடலில் ஆழமாகப் பதிதலால், வடுக்கள் மிகுந்து வடிவிழந்தன; அவன் வேல்கள், குறும்பர் அரண்களை அழித்து, அவர்களையும் வென்றமையால், ஆணிகள் அசைந்து கெட்டன; அவன் யானைகள், பகைவர் அரண்களைத் தாக்கித் தகர்த்தமையால், தந்தங்களில் கட்டிய பூண்கள் கழன்று விழப்பெற்றன; அவன் குதிரைகள், பகைவர் மார்பை மிதித்தலால், குருதி தோய்ந்த குளம்புகளையுடையவாயின; அதியமானே, நிலவுலகங் கொள்ளாத கடல் போன்ற படையுடையவன்; அவன் சினத்திற்காளானேர் பிழைத்தலும் உண்டோ? வளம் மிக்க உங்கள் ஊர்களை நீங்கள் இழவாதிருக்க வேண்டுமானுல், ஒரு வழி கூறுகிறேன்; கேளுங்கள்: அவனுக்கு முறைப்படி திறை செலுத்துங்கள்; அல்லாவிட்டால் உங்களுக்குரிய ஊர்கள் உங்களை விட்டு நீங்குதல் திண்ணம்;

அதியமான் படையாண்மையை உள்ளவாறு உரைத்தேன் ; மிகைப்படுத்திக் கூறவில்லை. இதனை நீங்கள் நம்பாவிட்டால், நீங்கள் உங்கள் மனைவியரைப் பிரிதலில் வியப்பில்லை. இன்னும் கூறுகிறேன் ; கேளுங்கள் : ஒரு நாளில் எட்டுத் தேரைச் செய்யும் தச்சன் ஒருவன் ஒரு மாதங்கொண்டு செய்த ஒரு தேரின் காலுக்கு நிகரான விரைவும் திண்மையும் உடையவன் எங்கள் மன்னன் ; ஆதலின், இவற்றை எல்லாம் எண்ணிப் பார்த்து, தீர ஆலோசனை செய்து, போர் செய்யுங்கள் ; இதுவே எனது வேண்டுகோள். நான் கூற வேண்டியவற்றைக் கூறி முடித்தேன். இது எனது கடமை. இனி உங்கள் விருப்பம் !'' என்று ஔவையார் அறிவுரை வழங்கினர்.

வாகை புனைதல் :

ஔவையாரின் அறிவுரையால் மனமாற்றம் அடைந்தானில்லை மலையமான் ; உயிர்கள் மடிந்து விழுவதைக் கண்டும் மனம் இரங்காது, தன்னுயிரையும் துச்சமாக மதித்துப் போர் செய்தான். என்றாலும் என்ன ? அதியமானை வெல்லுதல் எளிதோ ? மலையமானே தோல்வியடைந்தான். அவன் படைகள் சிதறுண்டன. மலையமானும் அவன் மறப்படை வீரர்களும் அதியமானுக்கு அஞ்சிப் புறங்காட்டி ஓடி மறைந்தனர். அதியமான் வாகை புனைந்தான் ; வெற்றி வீரனாய் விளங்கினன். திருக்கோவலூர் அவன் ஆட்சிக்கு அடங்கிற்று. அதியமானது இந்த வெற்றியைப் பலருங்கொண்டாடினர். புலவர் புகழ்ந்தனர். பரணர் என்னும் புலவர் பெருமான், தமது புலமையால் அதியமானது வீரப்புகழ் தோன்றத் தமிழ் மாலை தொடுத்து அணிந்தார். ஔவையாரின் மகிழ்ச்

சிக்கு அளவுமுண்டோ! அதியமான் புகழும், அவன் முன்னோர் புகழும் தோன்றுமாறு பாடி மகிழ்ந்தார்; அதியமானது வெற்றியைத் தமது வெற்றியாகவே எண்ணி இன்புற்றார். அதில் ஆச்சரியமில்லை அல்லவா?

மகன் முகங்கண்டு மகிழ்தல் :

வாகை புனைந்த அதியமான், திருக்கோவலூரில் தன்னாட்சியை நிறுவி, அமைதியை நிலை நாட்டிவிட்டுத் தகடூரை நோக்கிப் புறப்பட்டான்; ஔவையாரும் உடன் சென்றார். அதியமான் நல்ல முகூர்த்தத்தில் தகடூர் எல்லையை அடைந்தான்; தனக்குப் புதல்வன் பிறந்திருக்கும் செய்தியை அறிந்தான்; 'இலை தீய்ந்து கொடி வாடி இல்லை என்று போமிடத்தே, சருகுதிர்த்துப் பழம் பழுத்த சாதிப் பலாப்பழம்' போலத் தோன்றிய புதல்வன் அல்லவா! உவகைக் கடலில் ஆழ்ந்தான்; புதல்வனைக் காண வேண்டும் என்னும் வாஞ்சை மீதூர, போர்க்கோலத்தையும் மறந்து அந்தப்புரம் சென்று, அருமை மகன் முகங்கண்டு மகிழ்ந்து நின்றான்.

சொற்சித்திரம் :

இக்காட்சியை அழகிய சொற்களால் படம் பிடித்துக் காட்டுகிறார் ஔவையார்: "கையில் வேல்; காலில் வீரக் கழல்; உடம்பில் வியர்வை; கழுத்தில் படைக்கலம் பட்ட ஈரம் புலராத புண்; பனந்தாரும் வெட்சிப்பூவும் வேங்கை மலருடன் கலந்து சூடிய உச்சி; புலியொடு பொருத யானை போன்ற சினம்; பகைவரை வெகுண்டு நோக்கிய சிவந்த கண்; தன்னருமை மகன் முகங்கண்டும் சிவப்பு மாற

வில்லையே! ஐயோ! இவன் சினத்திற்காளானோர் பிழைத்தலும் உளதோ!" என்று கூறிய ஔவையாரின் சொற்சித்திரத்தில் அதியமானது வீரத்தோற்றம் நம் கண்முன் காட்சி அளிப்பதைப் பார்க்கின்றோம்.

அதியமானது அயர்வு :

திருக்கோவலூரை இழந்த மலையமான் தனது தோல்வியை எண்ணி மனம் புழுங்கினான்; தான் பிறந்த மறக்குடிக்குத் தன்னால் மாசு நேர்ந்ததாகக் கருதினான்; 'எவ்வழியாலும் இழந்த நாட்டை எய்தியே ஆக வேண்டும்!' என்று உறுதி கொண்டான்.

> 'நல்லாண்மை என்பது ஒருவற்குத் தான்பிறந்த
> இல்லாண்மை யாக்கிக் கொளல்.'

என்பது வள்ளுவர் வாக்கன்றோ?

மலையமான் தனது நாட்டை எய்துவதற்கான முயற்சியில் தலைப்பட்டான்; தன் நண்பன் சேரமான் பெருஞ்சேரல் இரும்பொறையை நாடித் தனக்கு உதவுமாறு வேண்டினான். இரும்பொறை மன்னன் ஆற்றல் மிக்கவன்; போர்த்திறம் பொருந்தியவன்; ஆகையால், பெரும்படையோடு நண்பனுக்கு உதவப் புறப்பட்டான். இருவர் படைகளும் திரண்டன; திருக்கோவலூரை நோக்கிப் புறப்பட்டன. வழியில் 'வல்வில்லோரி' என்பானது கொல்லி மலை குறுக்கிட்டது. ஓரி கடையெழு வள்ளல்களுள் ஒருவன்; கொல்லி மலைக்கும் அதனைச் சார்ந்த நாட்டிற்கும் தலைவன்; வீரம் மிக்கவன். அவன் அம்பு ஒரு முறையில் பல பொருள்களை ஊடுருவிச் செல்லும் வன்மை பெற்றிருந்தமையால், அவன் 'வல்வில்லோரி' என்று வழங்கப்பட்டான். அவ்வீரனது மலையரணை இருவர் படைகளும் முற்றுகை இட்டன.

அதனை அறிந்த ஓரி, தன் நண்பன் அதியமானுக்கு ஆள் அனுப்பித் துணை வருமாறு வேண்டினன். அவன் தன் நண்பர்களான சோழ பாண்டியர்களையும் உடனழைத்துக்கொண்டு, கொல்லி மலையைக் குறுகினன் ; ஓரியுடன் சேர்ந்து சேரமானையும் மலையமானையும் எதிர்த்துப் பெரும்போர் நிகழ்த்தினன். பெருவீரனன பெருஞ்சேரல், அதியமானையும் இருபெரு வேந்தரையும் ஒருங்கே வென்று விரட்டினன். வல்வில்லோரி இறந்தான். கொல்லி மலை சேரமான் வசமாயிற்று.

தன் நண்பனை ஓரி இறந்த சோகத்தால் அதியமானது உள்ளம் உடைந்தது ; ஊக்கம் அழிந்தது. அதியமான் அயர்வடைந்தான் ; போரில் மனஞ்செல்லாது தகடூரை அடைந்து, மதிலின் உள்ளே பதுங்கினன். விடாது பின் தொடர்ந்த சேரமான், தகடூர் மதிலை வளைத்தான். அதியமான் சேரனை எதிர்க்கும் எண்ணமின்றி, அயர்வு கொண்டு நின்றான். ஓரியின் பிரிவே, அச்சம் என்பதை அறியாத அதியமானது அயர்வுக்குக் காரணமாயிற்றுப் போலும் !

ஔவையாரின் வீரவுரை :

மலையே புரண்டு வந்தாலும், மறிகடலே திரண்டு வந்தாலும், யமனே எதிர்த்து வந்தாலும் அஞ்சாத அதியமான், அஞ்சி நிற்பது ஔவையாருக்கு அதிசயமாய் இருந்தது. அவர் அவன் நிலைக்கு இரங்கினர் ; ஊக்கமூட்ட எண்ணி அவனை அணுகி, "மழவர் பெருமானே, புலியானது சினந்தெழுந்தால், அதனை எதிர்த்து நிற்கும் மான் கூட்டமும் உளதோ ? காலை ஞாயிறு கதிர் விரித்து எழுந்தால்,

இருளும் இருக்குமோ ? இல்லையன்றே ? நீ போருக்கு எழுந்தால், உன் எதிர் நிற்கும் வீரரும் உளரோ ?'' எனப் பலவாறு வீரவுரை விளம்பி, அவன் உள்ளத்தில் வீரக்கனலை மூட்டி எழுப்பினர்.

விண்ணுலக விருந்து :

அம்மையாரின் வீரவுரையைச் செவி மடுத்த அதியமான், வீறு கொண்டு எழுந்தான்; போர்க்களம் புகுந்து போர் புரியத் தலைப்பட்டான். வீரர் பலர் மடிந்து விழுந்தனர்; யானைகள் பல இறந்துபட்டனர்; குதிரைகள் பல மாண்டு ஒழிந்தன. அதியமானது சேனை சிதறுண்டது. பகைவர் பலபல படைகளை அதியமான் மீது வீசினர். அவை அவன் மார்பிலும் முகத்திலும் தைத்துப் புண்படுத்தின. இந்நிலையிலும் ஒளவையார் சென்று ஊக்கமூட்டினர். அம்மையாரின் ஊக்குமொழிகள் அவனுக்குப் புத்துயிர் அளிக்கும் சஞ்சீவியாய் இருந்தன. அவன் மேலும் மேலும் வீர எழுச்சி கொண்டு போர் செய்தான். என்றாலும் என்ன ? பெருஞ்சேரல் விடுத்த நெடிய வேலொன்று, அதியமான் மார்பை ஊடுருவிச் சென்றது. அவன் ஆவி சோர்ந்து படிமிசை வீழ்ந்தான். அந்தோ! இரவலர் புரவலனும்—போரென்ன வீங்கும் பொருப்பன்ன தோளினனும்—மன்னுயிர்க்கெல்லாம் இனியனும்—ஒளவையாரின் ஆருயிர் நண்பனுமான அதியமான், மண்ணுலக வாழ்வை நீத்து விண்ணுலக விருந்தாயினன்.

அம்மையாரின் அழுகை :

அதியமான் இறந்துபட்டதைக் கண்ட ஔவை யார் கொண்ட சோகத்தின் மிகுதியை என்னென்று உரைப்பது! அவர் ஒப்பற்ற ஒரு மகனை இழந்த தாயென அழுது புலம்பினர்; ஆருகக் கண்ணீர் வடித்தார்; அதியமானின் அருங்குணங்களைக் கூறி அரற்றினர். அவர், "சிறிதளவு மதுக் கிடைத்தால், அதனைத் தானுண்ணுது, எங்களுக்கே கொடுத்து விடுவான்; மிகுதியாகக் கிடைத்தால், அதனை எங்கட் குக் கொடுத்து, நாங்கள் உண்டு எஞ்சியதையே தான் உண்டு மகிழ்வான்; சிற்றளவினை உடைய சோற்றையும் பலரோடு கலந்தே உண்பான்; உண விருக்கும் இடத்தில் எங்களை இருத்தி, வாளும் வேலும் புண்படுத்தும் போர்க்களத்தில் தான் சென்று நிற்பான்; பூமணக்கும் தனது கையால், புலால் நாறும் எங்கள் தலையைத் தடவி அன்பு செய்வான்; அவன் மார்பில் ஊடுருவிச் சென்ற வேல், அவன் மார்பில் மாத்திரம் தைத்ததன்று; அஃது பாண ருடைய உண்கலத்தை ஊடுருவி, இரவலர் கையைத் துளைத்து, பாண் சுற்றத்தாரது கண்ணொளியைக் கெடுத்து, புலவர் பெருமக்களது நாவினையும் புண் படுத்திவிட்டது! எமக்குப் பற்றுக்கோடாகிய எம் இறைவன் எவ்விடத்து உள்ளான்கொல்லோ! இனிப் பாடுவாரும் இல்லை; பாடுவாருக்கு ஒன்று ஈவாரும் இல்லை; குளிர்ந்த நீர்த்துறையில் பூக்கும் பகன்றைப் பூப் பிறர்க்குப் பயன்படாது அழிதல் போல, உலகில் தோன்றியும் பிறர்க்கு உதவாது மாயும் உயிர்கள் மிகப் பல உள்ளனவே! அத்தகையனே எம்மரசன்!" எனப் பலவாறு கூறி அழுது புலம்பினர்.

பின்னும் சோகந்தணியாத ஒளவையார், வாழ்க் கையில் வெறுப்புற்றவராய், "அதியமானை இன்றித் தனித்து இருக்கும் எனக்குக் காலையும் மாலையும் இல் லாது போகட்டும்! யான் உயிர் வாழும் நாளும் எனக்கு ஒரு பயனும் தாராமையால், அஃது விரைந்து ஒழியட்டும்!" என்று கூறி இரங்கினர்.

பின்னர், அதியமானது உடலை ஈமத்தேற்றி எரி யூட்டினர். தீ அவனது உடம்பைப் பற்றி எரித்தது. அது கண்ட ஒளவையார், "ஈமத் தீ எம் வேந்தனது பூதவுடலைச் சுடினும், சுடாது போயினும், ஞாயிற்றை ஒத்த இவனது புகழுடம்பு என்றும் நின்று நிலவும்!" என்று அதியமானது புகழை வியந்து வாழ்த்தி, ஒருவாறு ஆறுதலடைந்து, தகடூரி லேயே தங்கியிருந்தார். ஒளவையார் வாழ்த்திய வாறு அதியமான் பெயர் இன்றும் அழியாது நின்று நிலவுகின்றது.

பொகுட்டெழினி :

அதியமானது அருமைப் புதல்வன், பொகுட் டெழினி என்னும் பெயரினன். அவன் கருவிலே திருவுடையவன்; அஞ்சா நெஞ்சினன்; வளர்பிறை மதிபோல வளர்ந்து, கற்க வேண்டிய கலைகள் அனைத் தையும் கற்றுத்தேர்ந்தவன். அதியமானுக்குப் பிறகு அவனே அரியணை ஏறினன். அவன் மிக இளைஞ னுயிருந்தமையால், ஒளவையார் அவனுக்கு அரசி யல் அறிவு அளித்து வந்தார். அவன் ஆட்சி புரியும் திறமை பெற்றான்; தந்தையைப் போலவே படை யாண்மையும் கொடையாண்மையும் பெற்று விளங் கினன். ஒளவையார் சின்னாள் அவன் அவைக்

களத்தை அலங்கரித்திருந்தார்; பொகுட்டெழினி ஆட்சியில் மக்கள் மகிழ்ச்சியும் அமைதியும் பெற்று வாழ்வது கண்டு, அதியமானை வாழ்த்தியவாறு அவன் தனயனையும் வாழ்த்தி மகிழ்ந்தார்.

பின்னர், தமிழ் மொழிக்கு எல்லை கண்ட ஔவையார், தமிழ் நாட்டிற்கும் எல்லை காண விரும்பி, பொகுட்டெழினியிடம் அரிதில் விடை பெற்று, அங்கு நின்றுமகன்று, தமிழ் நாடெங்கணும் சென்று தமிழ்ப் பணி புரிந்து வருவாராயினர்.

III. மோசிகீரனாரும் பெருஞ்சேரனும்

பாண்டி நாடு :

"முத்தும் முத்தமிழுமுடைய பாண்டி நாடு, தமிழர் நாகரிகத்தின் பிறப்பிடம்," என வெனிஸ் நாட்டு வழிப்போக்கர் ஒருவரால் பாராட்டப்பட்ட பெருமையுடையது பாண்டி நாடு. அந்நாடு மூவேந்தர் நாடுகளுள் முதுமையுற்று விளங்கிய காரணத்தால் அப்பெயர் பெற்றது என்பர். 'பண்டு' என்பதற்குப் 'பழமை' என்பது பொருள். அந்நாடு முதலில் பண்டை நாடு என வழங்கி, பின்னரே பாண்டி நாடு எனப் பெயர் பெற்றிருத்தல் வேண்டும் என்று கருதுகின்றனர். பாண்டி நாட்டைப் பழங்குடியினரான பாண்டியர்கள் பண்டு தொட்டு வழிவழியாக ஆண்டு வந்தார்கள்.

பாண்டி நாடு இன்று மதுரை, திருநெல்வேலி, இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்கள் அளவில் அடங்கிக் கிடக்கின்றது. ஆனால், முன்னாளில் தென்றிசையில் கடல் கொண்ட தமிழகத்தில் நெடுந்தூரம் பரவி இருந்தது. அப்போது அதன் தலைநகர் தென் மதுரை. அந்நகர் கடல்கொள்ளப்படவே, கபாடபுரம் தலை நகராயிற்று. அதுவும் கடல் கொள்ளப்படவே, 'வையை என்னும் பொய்யாக் குலக்கொடி' என்று புலவர்களால் புகழப்பட்ட வையையாற்றின் மருங்குள்ள மதுரை, பாண்டி நாட்டின் தலை நகரானது.

மூவேந்தர்களும் தமிழ் மொழியைப் போற்றி வளர்த்து வந்த போதிலும், முச்சங்கங்களை முறையே நிறுவிச் செந்தமிழைச் செழிப்புறச் செய்த பெருமை பாண்டியர்களுக்கே உரியதாகும். பாண்டியர்கள்,

தென்மதுரையில் முதற்சங்கத்தையும், கபாடபுரத்தில் இரண்டாஞ்சங்கத்தையும் கூட்டித் தமிழை வளமுறச் செய்தார்கள். இப்போதுள்ள மதுரையில் இருந்த சங்கம் மூன்றாஞ்சங்கம். அதுவே கடைச் சங்கம் எனப்பட்டது. கடைச்சங்கத்தில் புலவர் பலர் வீற்றிருந்து தமிழாராய்ந்து வந்தனர். எட்டுத் தொகை, பத்துப்பாட்டு, பதினெண்கீழ்க் கணக்கு என்னும் நூற்கள் எல்லாம் அக்காலத்தில் தோன்றியனவே. கடைச்சங்கமிருந்த மதுரை,

‘ தமிழ்நிலை பெற்ற தாங்கரு மரபின்
மகிழ்நனை மறுகின் மதுரை.’

என்ற புகழ்ச்சிக்கு உரியதாயிற்று.

பிற நாட்டுப் புலவரும் தமிழாராய்ச்சியில் கொண்ட வேட்கையால் அந்நகரில் வந்து கூடினர். ஆதலின், அந்நகர் கூடல் என்று பெயர் பெற்றது. பாண்டியர்கள் தமிழ் வளர்ச்சியின் பொருட்டுச் செய்த முயற்சியால் மிகப் பழமையான காலந் தொட்டே தமிழ் மொழி பாண்டி நாட்டில் சிறப்புற வாழ்ந்து வந்தது. வரந்தருவார் என்ற கவிஞர்,

‘ பொருப்பிலே பிறந்து தென்னன்
புகழிலே கிடந்து சங்கத்
திருப்பிலே இருந்து வைகை
யேட்டிலே தவழ்ந்த பேதை.’

என்று தமிழைக் குறித்துக் கூறியிருப்பது கருதத் தக்கது. இவ்வாறு முப்பெருநாடுகளுள் முதுமை யுடையதாய், தமிழ் மொழியின் தாயகமாய், அருந் தமிழ்ப் புலவர் பலர்க்குப் பிறந்தகமாய்ச் சிறந்து விளங்கியது பாண்டி நாடு.

மோசிகீரனார் :

அந்நாட்டில், மதுரைமா நகரின் தென்கீழ்த்திசையில் மோசி குடி என்னும் மூதூர் ஒன்றுளது. அவ்வூர் முடமோசியார், கண்ணகனார் முதலிய புலவர் பெருமக்களைப் பெற்றெடுத்த பெருமையால், நாற்றிசையும் புகழ்பெற்றுத் திகழ்ந்தது. அவ்வூரில், சுமார் ஆயிரத்தெண்ணூறு ஆண்டுகளுக்கு முன்னர்க் கீரனார் என்னும் புலவர் ஒருவர் வாழ்ந்து வந்தார். அவர் ஊர்ப் பெயரோடு 'மோசிகீரனார்' என்று வழங்கப்பட்டார்; இளமையிலேயே கற்றற்குரிய நூல்களை எல்லாம் கற்றுத் தேர்ந்தார். கவிதை உணர்ச்சி அவர் உள்ளத்தில் கொந்தளித்துக்கொண்டிருந்தது. அவர் அரும்பெறல் அரசியல் உண்மைகளையும் எளிய கவிதைகளாகப் புனைந்து வெளியிட்டார். அவர் கவிதைகளுக்கு நாடெங்கும் நல்ல வரவேற்பு இருந்தது.

அரசியலறிவு :

இற்றை நாள் தமிழ்ப் புலவர்களுட்பெரும்பாலார் அரசியல் அறிவு சிறிதும் இல்லாதவராகவே இருந்து வருகின்றனர். ஆனால், பழந்தமிழ்ப் புலவர்கள் இதற்கு முற்றிலும் விலக்கானவர்கள். அவர்களே அரசியல் சட்டங்களை ஆக்கினார்கள் என்று கூறலும் மிகையாகாது. அரசர்களுக்கு அமைச்சர்களாகவும், அரசியல் தூதுவர்களாகவும் புலவர்கள் விளங்கினார்கள் என்பது, அவர்கள் அரசியலறிவுக்குச் சான்றாகுமன்றோ? மோசிகீரனாரும் சிறந்த அரசியலறிஞர். அக்காலத்தில் தமிழகத்தில் நடைபெற்றது கோனாட்சியாகும். இன்று நடைபெறுவது குடி

யாட்சி. இரண்டும் இரு வேறு வகைப்பட்ட ஆட்சி முறைகள். கோனாட்சியில் மன்னன் செல்லும் வழியில் மக்கள் இயங்குவார்கள். 'அரசன் எவ்வழி அவ்வழிக் குடிகள்,' என்பது அடிப்படைத் தத்துவம். குடியாட்சியில் மக்கள் செல்லும் வழியில் மன்னன் (அரசாங்கம்) இயங்குதல் வேண்டும். 'மக்கள் எவ் வழி அவ்வழி மன்னன் (அரசாங்கம்),' என்று கூறுதல் பொருந்தும். குடியாட்சியில் மன்னன் (அரசாங்கம்) உடல்; மக்கள் உயிர். கோனாட்சியில் மன்னனே உயிரென மதிக்கத்தக்கவன்; மக்கள் உடம்பிற்கு ஒப்பானவர்களே. ஆதலால், கோனாட்சியில் மன்னன் தன்னை ஒழுக்கநெறி தவருதவனுகவும், நீதி நெறி வழுவாதவனுகவும் காத்துக்கொள்வதைப் பொறுத்தே நாட்டில் ஒழுக்கம், நீதி எல்லாம் நிலைக்கும். நால்வகைப் படைகளைப் பொறுத்து எதுவும் நடந்துவிடாது. இவற்றை அறிந்து நடப்பது அரசன் கடமையாகும். அப்பொழுதுதான் கோனாட்சிக்கு இடமுண்டு. அரசன் தன்னை உணர்ந்து நடவாவிட்டால், மன்னராட்சி மாய்ந்து, மக்களாட்சி ஓங்கிவிடும். இவ்வுண்மைகளை எல்லாம் அன்றே தீர்க்கதரிசியைப் போல உணர்ந்து அறிவுறுத்தியிருக்கின்றூர் மோசிகீரனூர். "உலகில் மக்கள் உயிர் வாழ்வதற்கு நெல்லும் நீரும் இன்றியமையாதன. ஆனல், ஆராய்ந்து பார்த்தால், மக்களுக்கு நெல்லும் உயிரன்று; நீரும் உயிரன்று; அவற்றை மக்கள் பெற்று மகிழுமாறு செங்கோல் செலுத்தும் மன்னனே உயிராவான். ஆதலின், 'யானே நாட்டு மக்களுக்கு உயிர்,' என்பதை அறிந்து நடப்பது மன்னனது முதற்கடமையாகும்," என்ற கருத்தமைத்துக் கீரனூர் பாடிய செய்யுள் அவரது அரசியலறிவுக்கும், அவர்

கவிதாதேவியின் அருள் பெற்றவர் என்பதற்கும் ஒரு நல்ல சான்ருய் அமைந்துள்ளது.

> ‘நெல்லு முயிரன்றே ; நீரு முயிரன்றே ;
> மன்ன னுயிர்த்தே மலர்தலை யுலகம் ;
> அதனால், யானுயி ரென்ப தறிகை
> வேன்மிகு தானை வேந்தற்குக் கடனே.’

என்பது கீரனர் பாடிய செய்யுளாகும். கீரனர் உள்ளத்தில் தோன்றிய அரசியல் உண்மையானது, கவிதை உணர்ச்சியாக உரம் பெற்றுப் பெருகித் தோன்றியிருப்பதைப் பார்க்கின்ருேம்.

புலவர் பல காலும் புனைந்து விடுத்த கவிதைகளின் விஞ்சிய சுவையினை மக்கள் மெச்சிப் புகழ்ந்தார்கள். அதனால், அவர் புகழ் பாண்டி நாடெங்கணும் பரவலாயிற்று. இவ்வாறு தாம் பிறந்த செந்தமிழ்ப் பாண்டி நாட்டிற்குப் பெரும்புகழ் விளைத்து நின்ற தமது கவிப்பெருமையைத் தமிழகம் எங்கும் பரப்பித் தாம் பிறந்த திசைக்குச் சிறந்த புகழை ஈட்டுதலோடு, வறுமை தீரப் பரிசிலும் பெற்று வருதல் வேண்டும் என்ற எண்ணம் புலவர் உள்ளத்தில் எழுந்தது, சேரர்கள் செந்தமிழை மதிக்கும் சீரியர்கள் என்றும், வண்மையில் பாண்டியரையும் விஞ்சியவர்கள் என்றும் புலவர் கேள்வியுற்றிருந்தமையால், சேர நாடு செல்வதென்று தீர்மானித்தார் ; வஞ்சி மாநகர் நோக்கி வழி நடந்தார்.

வஞ்சி மாநகர் :

அந்நாளில் வஞ்சி மாநகரம் சேரநாட்டின் தலைநகராய் விளங்கிற்று. அந்நகரம் அக்கால நகர அமைப்புத் திட்டப்படி அழகுற அமைக்கப்பட்டிருந்தது ; பெரிய மதில்களாலும், ஆழ்ந்தகன்ற

அகழிகளாலும் அரண் செய்யப்பட்டிருந்தது; ஆறு போல அகன்ற தெருக்களையும், மலை போல உயர்ந்த மாளிகைகளையும் பெற்றிருந்தது. நகரின் நாப்பண் மன்னன் மாளிகை மாமேருவென உயர்ந்து தோன்றிற்று. அதனை, "நெடுநிலை மேருவில் - கொடிமதில் மூதூர் நடுநின் றோங்கிய - தமனிய மாளிகை" என்று சிறப்பித்தார் இளங்கோவடிகள். அவ் வஞ்சி மாநகர் யாதாயிருக்கலாம் என்பது குறித்து ஆராய்ச்சியாளர்களிடையே மாறுபட்ட பல கருத்துக்கள் உலவுகின்றன. கொங்கு நாட்டுப் பாடல் பெற்ற ஏழு தலங்களுள் ஒன்றான கருவூரே வஞ்சி மாநகரம் என்பர் ஒருசாரார். இவ்வூர் இப்போது திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் கருவூர் என்ற பெயராலேயே வழங்குகின்றது. மேற்குத் தொடர்ச்சி மலையடிவாரத்தில் பேரியாற்றங்கரையிலுள்ள 'திருக்கரூர்' என்பதே வஞ்சி மாநகர் என்று வாதிப்பர் மற்றொரு சாரார். இவ்வூர், இன்று கொச்சிக்கு வடகிழக்கே இருபத்தெட்டு மைல் தூரத்தில் ஒரு பாழூராய்க் காணப்படுகின்றது. இனி, பேரியாறு கடலொடு கலக்கும் இடத்திலுள்ள திருவஞ்சைக் களமே வஞ்சி மாநகரமாகும் என்று சாதிப்பாரு முளர். உண்மை யாதாயினும் ஆகுக. சேரநாட்டிற்கு வஞ்சி மாநகரம் தலை நகராய் விளங்கிற்று என்பதில் எவ்வித ஐயுறவுமில்லை.

பெருஞ்சேரன் :

வஞ்சி மாநகரைத் தலை நகராகக் கொண்டு சேர நாட்டை ஆண்ட மன்னர்களுள் 'பெருஞ்சேரல் இரும்பொறை' என்பான் ஒருவன். அவன் ஆண்மையிலும் வண்மையிலும் ஒப்பற்று விளங்கி

ளுன். அவன் தந்தை செல்வக்கடுங்கோ வாழி யாதன் என்னும் வேந்தர் பெருந்தகை. அவனும் சிறந்த தமிழ் வள்ளல். மாரிக்கு நிகரான பாரி மாய்ந்த பின்னர், பாரியின் உத்தம குணங்கள் பலவும் செல்வக்கடுங்கோவிடம் செறிந்து விளங்குதலைக் கண்ட கபிலர், அவனை அடைந்து, பதிற்றுப்பத்தின் ஏழாம் பத்தைப் பாடி, நூறுயிரம் பொன் பரிசில் பெற்றுச் சென்றுர். அத்தமிழ் வள்ளலுக்குப் புதல் வன் பெருஞ்சேரன் என்றுல், தந்தையின் பண்பு தனயனுக்குமில்லாது போகுமா? அவனை எட்டாம் பத்தில் பாடி மகிழ்ந்தார் அரிசில் கிழார் என்னும் புலவர் பெருந்தகை. அவருக்கு ஒன்பது நூறுயிரம் பொன் பரிசில் அளித்தான் பெருஞ்சேரன். தந்தை யினும் ஒன்பது மடங்கு தமிழ்ச்சுவை கண்டவன் தனயன் என்பதைத் தெளிவாக்குவது போல இருக் கின்றதல்லவா அவனது கொடைத்திறம்! அவன் அதியமானது தகடூரை அழித்து அவனைக் கொன்ற வரலாறு, முன்னதிகாரத்தில் கூறப்பட்டுள்ளது. அவ் வெற்றியைச் சிறப்பிக்கவே, 'தகடூர் யாத்திரை' என்ற நூல் தோன்றியதென்பர். அந்நூல் காணுது போன தமிழ் நூல் வரிசையில் உட்பட்டது, நமது துரதிருஷ்டமேயாகும். அம்மன்னன், தகடூரை அழித்த காரணத்தாலேயே 'சேரமான் தகடூர் எறிந்த பெருஞ்சேரல் இரும்பொறை' என்னும் விருதுப்பெயர் பெற்றுன் என்பர். அவன் புகழ் தமிழகம் எங்கும் பரவியிருந்தது. ஆதலால், பழுத்த மரங்களை நாடிச் செல்லும் பறவைகளைப் போலப் புலவர் பலர், அவனைத் தேடிச்சென்றனர். அவனும் "இல்லை" என்று வந்தவர்களை இனிது வரவேற்று விரும்பிய பொருளைப் பரிசிலாகக் கொடுத்து, அவர்

கட்கு வறுமையே இல்லை என்னுமாறு செய்து வந்தான்.

மோசியார் வருகை :

அம்மன்னன் புகழை முன்னரே அறிந்திருந்த மோசியார், அவனைக் காண வஞ்சி மாநகர் நோக்கி வழி நடந்தார். அவர் பல நாட்கள் நடந்து, கல்லும் முள்ளும் நிறைந்த காடு மலை எல்லாங் கடந்து, வஞ்சி மாநகரை வந்தடைந்தார்; மன்னன் மாளிகையை நெருங்கினார். அப்பொழுது அரசன் நீர் விழாவை நச்சி வெளியே சென்றிருந்தான். அடையா நெடுங்கதவுடைய அரண்மனை வாயில் திறந்திருந்த படியால், கீரனார் தடையின்றி உள்ளே சென்றார்; அரண்மனையின் அமைப்பை உற்று நோக்கினார். அரண்மனை அமைப்புப் புலவரைத் திகைப்புறச் செய்தது. நெடுவழி நடந்து, காடு மலை எல்லாங் கடந்து, களைப்புற்று வந்தவரல்லரா புலவர்? அவர் வழி நடையால் வருந்தி வந்த வருத்தந்தீர இளைப்பாற எண்ணினார்; அருகில் ஓர் ஆசனம் இருக்கக் கண்டு, அதில் ஏறியமர்ந்து, சாய்ந்து படுத்தார். புலவர் களைப்பினை நீக்கக் கருதியது போல மந்த மாருதம் வந்து வீச, அவர் அயர்ந்து நித்திரை செய்தார்.

வீர முரசம் :

புலவர் நித்திரை செய்த ஆசனம், சாதாரண மானதன்று. அஃது, அரசருடைய வீரமுரசம் வீற்றிருத்தற்குரிய முரசு கட்டிலாகும். வீரமுரசம் என்பது, போர்ச் செய்தியை அறிவிப்பதற்கும், வெற்றியைத் தெரிவிப்பதற்கும் வீறுடன் முழங்கும் ஒரு வகை முரசமாகும். இது வேந்தற்குரிய மூவகை

முரசங்களில் ஒன்று. இதனை மன்னர் வெற்றித் தெய்வமாக எண்ணி வழிபட்டு வந்தனர். இம்முரசத்தின் விளிம்பு, தெரிந்தெடுத்த கருமரத்தால் மிகவும் உறுதியுடையதாகச் செய்யப்பட்டிருக்கும். புலியொடு பொருது அதனைக்கொன்ற வீரஞ்செறிந்த ஒரு காளையின் தோல் முரசத்தின்மேல் போர்த்தப்பட்டிருக்கும். இம்முரசினைக் குறித்த நாளில் நீர்த்துறைக்குக் கொண்டு சென்று நீராட்டுவர். அஃது ஒரு விழாவாக நடைபெறும். அவ்விழாவை அரசரும் உடனிருந்து நடத்துவர். முரசினை நீராட்டி, உழிஞைத்தளிரும் மயிற்பீலியும் சேர்த்துக்கட்டிய மாலையை அணிந்து, குருதி கலந்த சோற்றுருண்டையைப் படைத்து வழிபடுவர். அவ்வுணவைக் காகமும் கழுகும் வந்து உண்டு செல்லும். அப்பறவைகளை வெற்றித் தெய்வமே அனுப்புவதாகவும், அவை வருவது நன்மைக்கு அறிகுறி என்றும் அவர்கள் நம்பினர்கள். அப்பறவைகள் வாராவிட்டால், தமக்குத் தீமை நேருதல் கூடும் என்று எண்ணி, அரசர் அஞ்சுவர்; இவ்வழிபாடு முடிந்ததும் முரசினை அரண்மனைக்குக் கொண்டு வந்து அழகிய வெண்மெத்தை விரித்த ஆசனத்தில் வைத்து வணங்குவர்.

முரசு கட்டில் :

அவ்வீரமுரசு வைக்கப்படும் ஆசனமே முரசு கட்டில் என்பது. அக்கட்டில் அரசனது அரியணைக்கு நிகரான பெருமையுடையது. அதனை யாரும் அணுகார். அரசன் அரியணையில் ஏறியமருவாருமுளரோ? முரசு கட்டிலிலும் யாரும் அமரார். அக்கட்டிலில் யாரேனும் ஏறினல், அரசனை அவமதிப்பதற்கே அங்ஙனம் செய்ததாக எண்ணுவர். அப்பால் அவர் தலை

தப்புதல் அரிது. அக்கட்டிலில் பஞ்சு மெத்தையிட்டு, பாலாவி போன்ற பட்டு விரித்து, அதன்மீது வீரமுரசத்தை வைப்பார்கள். வீரமுரசம் வைக்கப்படுதலினலேயே அதற்கு முரசு கட்டில் என்னும் பெயர்வந்தது.

சாமரை வீசிய புரவலன் :

கீரனர் அரண்மனை வந்த பொழுது முரசம் நீர்த்துறைக்குக் கொண்டு செல்லப்பட்டிருந்தமையால், கட்டில் காலியாய் இருந்தது. புலவர் களைப்பு மிகுதியால், அங்கிருந்தது முரசு கட்டில் என்பதை அறியாது, அதில் நித்திரை செய்தார். சிறிது நேரத்திற்கெல்லாம் முரசம் நீர்த்துறையிலிருந்து கொண்டுவரப்பட்டது. அரசனும் விழாவில் கலந்திருந்தமையால், பிரதானிகள் புடை சூழ வந்து சேர்ந்தான். மஞ்சத்தில் ஒருவர் படுத்திருப்பது மன்னன் கண்ணிற்பட்டது. என்றும் கண்டிராத காட்சி அது! மன்னன் உள்ளத்தில் சினம் மிகுந்தது. அவன் கண்கள் கனல் வீசின. அவன் கட்டில் அருகே விரைந்தான்; வாளையுருவி ஓங்கிப்பிடித்தான். எல்லாரும் என்ன நேருமோ என்று திகைத்தனர்; படுத்திருந்தவரது தலை தப்பாது என்று தயங்கினர். ஆனல், மன்னன் இளைத்த மேனியும், வாடிய வதனமும், இடுங்கிய கண்ணுமுடைய ஒருவர் மஞ்சத்தில் படுத்திருத்தலைக் கண்டான். அவரது முகப்பொலிவு, அவர் கலைமகள் அருள் பெற்ற நல்லிசைக் கவிஞர் என்பதைக் காட்டிற்று. அவர் உடையின் தோற்றம், பூமகளால் புறக்கணிக்கப்பட்டவர் என்பதைத் தெரிவித்தது. அவ்வளவுதான். “இவர் வறுமையினைப் போக்க வேண்டிய நான், இவர் உயிரினைப் போக்கத்

துணிந்தேனே!'' என்று எண்ணினான் மன்னன். வாள் கையினின்று நழுவி விழுந்தது. வாள் பிடித்த கையில், கவரி பிடித்தான் அரசன். புலவர் உடல் குளிர வீசி நின்றான் புரவலன். மன்னன் செயல் கண்ட மக்கள், 'இது மாயமோ!' என்று மயங்கினார்கள்.

இந்நிலையில் கவிஞர் கண் விழித்தார்; தாம் மஞ்சத்தில் இருப்பதையும், காவலன் கவரி வீசி நிற்பதையும் கண்டார்; திடுக்கிட்டுப்போனார்.

இங்குக் காந்தியடிகளைப் பற்றிய ஒரு செய்தியைக் குறிப்பிடுதல் பொருத்தமாகும். காந்தியடிகளின் சீடராய் இருந்து வந்தவர்களுள் மகாதேவர் சிறந்தவராவர். அவர் காந்தியடிகளோடு ஒரு சமயம் இரயிலில் பிரயாணம் செய்துகொண்டிருந்தார். வெப்பமும் புழுக்கமும் தாங்க முடியவில்லை. காந்தியடிகள் உறங்க ஆரம்பித்தார். மகாதேவர் அவருக்கு வீசிக்கொண்டிருந்தார். களைப்பு மிகுதியால் சிறிது நேரத்தில் மகாதேவரும் கண்ணயர்ந்துவிட்டார். சிறிது நேரஞ்சென்று விழித்தெழுந்த மகாதேவர், காந்தியடிகள் தமக்கு விசிறியால் வீசிக்கொண்டிருப்பதைக் கண்டு திடுக்கிட்டுப் போனார். அன்பர் தூக்கத்திற்குப் பங்கம் வாராமல் வீசி நிற்பது மகாத்துமாக்களின் இயல்பு போலும்! பெருஞ்சேரனும் புலவரின் தூக்கத்திற்குப் பங்கம் வாராது வீசி நின்றானல்லவா?

விழித்தெழுந்த புலவர், அருகே வீரமுரசம் இருப்பதையும், பிரதானிகள் சூழ்ந்து நிற்பதையும் கண்டார். அப்பொழுதுதான், தாம் ஏறி இருப்பது முரசு கட்டில் என்பது புலவருக்குப் புலனாயிற்று. "அரசனை அவமதிப்பது போன்ற பிழையை அறியாது செய்துவிட்டோமே!'' என்று எண்ணி நடுங்கினார் புலவர்.

அவர் நடுக்கந்தீரப் புரவலன் இன்னுரை இயம்பலானன்: "அறிஞரே, நீவிர் ஏன் அஞ்சுதல் வேண்டும்? அஞ்சுவதற்கு என்ன நேர்ந்துவிட்டது? அதற்கான பிழையொன்றும் நீவிர் செய்துவிடவில்லையே! நான்தான் உமது தூக்கத்திற்கு இடையூருய் வந்துவிட்டேன்! அல்லாவிட்டால், இன்னும் சிறிது நேரம் கண்ணயர்ந்திருப்பீர்!" என்று காவலன் உள்ளங்கனியப் பேசிய பேச்சு, புலவரின் இதயத்தைத் தொட்டு உருக்கிவிட்டது. அவர் அரசனின் பெருந்தன்மையைக் கண்டு அதிசயித்தார். "நாம் செய்த பிழைக்குத் தலையையன்ரே வெட்டி இருக்க வேண்டும்? அது செய்யாது சாமரை வீசி நின்ருனே! அதற்கு மேலுமா இவ்வாறு இன்னுரை இயம்புகின்ருன்!" என்று எண்ணிய புலவர் மன்னன் பெருமையை மனமாரப் புகழலானர்.

புலவர் புகழுரை :

"அரசே, நுரை முகந்தாற்போன்ற மெல்லிய பூம்பட்டு விரித்த வீரமஞ்சத்தில் அடியேன் அறியாது ஏறி அமர்ந்து, சாய்ந்து படுத்து, அயர்ந்து தூங்கினேன். இப்பிழை செய்த என்னை உனது வாளுக்கன்ரே இரையாக்கியிருத்தல் வேண்டும்? ஆனல், தமிழ் படித்தவன் என்ற தன்மையைக் கருதியல்லவா அவ்வாறு செய்யாது விடுத்தாய்! இஃது ஒன்றே தமிழை மதிக்கும் உன் தகைமைக்கும், புலவரைப் புரக்கும் பண்புடைமைக்கும் போதிய சான்ருகுமே! ஆயினும், அவ்வளவில் உன் ஆர்வம் அடங்கிற்ரு? இல்லையே! கடைப்பட்ட எனக்குக் கவரியும் வீசினய்! இப்பணியைத் தமிழ்த் தாய்க்குச்

செய்து ஏற்றம் பெற்றாய்! நின் புகழ் மண்ணுலகி லன்றி, விண்ணுலகிலும் பரவுவதாகுக!'' என்று புக முரை வழங்கினார் புலவர். இதனை அவர்,

'நுரைமுகந் தன்ன மென்பூஞ் சேக்கை
அறியா தேறிய வென்னைத் தெறுவர
இருபாற் படுக்குநின் வாள்வா யொழித்ததை
அதூஉஞ் சாலும்நற் றமிழ்முழு தறிதல்;
அதனொடு மமையா தணுக வந்துநின்
மதனுடை முழவுத்தோ ளோச்சித் தண்ணென
வீசி யோயே! வியலிடங் கமழ
இவணிசை யுடையோர்க் கல்ல தவண
துயர்நிலை யுலகத் துறையு ளின்மை
விளங்கக் கேட்ட மாறுகொல்
வலம்படு குருசினீ யீங்கிது செயலே!'

என்று இனிய சொற்களில் எல்லார் உள்ளமும் உருகுமாறு அருளி நின்றார். மன்னனுக்குப் புலவரிடம் முன்னையிலும் மதிப்பு மிகுந்தது. இதனால், முன்னாளில் புலவரைப் புரவலர் போற்றிய முறை நன்கு விளங்குகின்றதல்லவா? இத்தகைய மன்னர்கள் ஆண்ட காலத்திலேதான் நம் தமிழ் அன்னை, முடி தரித்துக் கோலேந்திச் சீரும் சிறப்புமாக அரசு வீற்றிருந்தாள்.

பரிசில் விடை:

பெருஞ்சேரன், புலவரைத் தன் விருந்தினராய் இருக்குமாறு வேண்டினான். புலவரும் இசைந்தார்; அரசனோடு அளவளாவி இன்புற்று இருந்தார்; புதிய கவிகள் புனைந்து அரசனை மகிழ்வித்து வந்தார். புலவரிடம் அரும்பெருமேதை அமைந்து கனிவு

பெற்றிருப்பதைக் கண்டு மன்னன் மகிழ்ந்தான். புலவர் சின்னாள் அவண் இருந்து, பின்னொரு நாள் தம் வீடு செல்ல விரும்பி, அரசனிடம் விடை கேட்டார். அவனும் அதற்கு இசைந்து, புலவருக்குப் பொன்னும், மணியும், ஆடையும், அணியும் அளவு கடந்தன அளித்து, விடை கொடுத்து அனுப்பினன். புலவர் சேர வேந்தனின் செந்தமிழ்ப் பற்றை வியந்த வண்ணம் வீடு வந்து சேர்ந்தார்.

IV. ஆந்தையாரும் பெருஞ்சோழனும்

பிசிர் :

பிசிர் என்பது பாண்டி நாட்டின் தெற்குப் பகுதியில் கடற்கரையை அடுத்துச் சிறந்திருந்த ஒரு சிற்றூராகும். இன்று அவ்வூர், இராமநாதபுர மாவட்டத்தில் 'பிசுக்குடி' என்னும் பெயரால் வழங்கி வருகிறது என்பர்.

ஆந்தையார் :

அவ்வூரில், ஆந்தையார் என்னும் புலவர் ஒருவர் வாழ்ந்து வந்தார். அவர் கல்வி கேள்விகளில் வல்லுநர்; உண்மை அறிவும், உயரிய ஒழுக்கமும் வாய்க்கப்பெற்றவர்; அன்பு, நாண், ஒப்புரவு, கண்ணோட்டம், வாய்மை என்னும் ஐம்பெருங்குணங்களும் இயல்பாய் அமையப் பெற்றவர். புலவர்கள் என்றால் வறுமைக்குத் தோழமை அதிகமல்லவா? ஆனால், புலவர்களை வாட்டி வந்த வறுமையும் ஆந்தையாரை அணுகவில்லை. அவர் நிலபுலங்களை நிரம்பப் பெற்றிருந்தார். அவற்றிலிருந்து வாழ்க்கைக்குப் போதுமான வருவாய் வந்துகொண்டிருந்தது. ஆதலின், அவர் புரவலர்பால் சென்று பாட்டிசைத்துப் பரிசில் பெற விரும்பாது, தம்மூரிலேயே வாழ்ந்து வந்தார்; தாம் பிறந்த ஊருக்குச் சிறந்த புகழை ஈட்டியமையால் ஊர்ப்பெயரோடு சேர்த்துப் 'பிசிர் ஆந்தையார்' என்று வழங்கப்பட்டார். ஆந்தையார் என்ற பெயரும் அவருக்குக் காரணம் பற்றி வந்ததாக இருக்கலாம் என்று கருதுகின்றனர். தொல்காப்பியத்தில், '**ஆதன் தந்தை**' என்பது ஆந்தை என மருவுதற்குரிய விதி

காணப்படுதலைக்கொண்டு, அவர் ஆதன் என்பானுக்குத் தந்தையாராய் விளங்கிய காரணத்தாலோ, அன்றி ஆதன் என்பானுக்குத் தந்தையராய் இருந்த ஒருவரது வழியில் வந்தமையாலோ இப்பெயர் பெற்றிருத்தல் கூடும் என்பர். நாம் காரணம் காண்பதில் கருத்தைச் செலுத்தாது, அவர் சான்றோர் வரிசையில் முதலிடம் பெற்றவர் என்பதை மனத்திற்கொண்டு மேற் செல்வோம்.

வாழ்க்கை :

ஆந்தையார் தக்க வயதில் மண வாழ்க்கையை மேற்கொண்டார். அவர் மனைவியார், 'தற்காத்துத் தற்கொண்டாற் பேணித் தகைசான்ற சொற்காத்துச் சோர்விலாள் பெண்,' என்ற பெண்மை இலக்கணம் அமையப் பெற்றவர்; காதலர் கருத்தறிந்து நடந்து வந்தார். 'காதலிருவர் கருத்தொருமித்து, ஆதரவு பட்டதே இன்பம்,' என்ற பொன் மொழிக்கு ஏற்ப, அன்பொத்த அவர்கள் வாழ்க்கை, இன்ப வாழ்க்கையாய் இனிது நடந்து வந்தது. 'மங்கலம் என்ப மனைமாட்சி; மற்றதன் நன்கலன் நன்மக்கட் பேறு,' என்று வள்ளுவர் வழுத்தியவாறு, அவர்களுக்கு உரிய காலத்தில் நன்மைந்தர் பலர் பிறந்தனர். அம் மைந்தரும், 'மகன் அறிவு தந்தையறிவு,' என்றவாறு, தந்தையாருக்கு ஏற்ற தனயராய் விளங்கினர். வீட்டில் உள்ள வேலையாட்கள் அவர் குறிப்பறிந்து நடந்து வந்தார்கள். நாட்டை ஆண்ட அரசன், அல்லவை கடிந்து, அறம் காத்து வந்தான். அக்காலத்தில் பாண்டி நாட்டில் சான்றோர் பலர் வாழ்ந்து வந்தனர். அவர்கள் எல்லாரும் ஆன்று அவிந்து அடங்கிய கொள்கையைக் கொண்டவர்கள். அவர்களிடையில்

ஆந்தையார் பழகி வந்தார். அவர்களோடு கலந்து அளவளாவுவதும், ஆன்ம விசாரணை செய்வதும் அவரது பொழுது போக்காய் இருந்தன. இத்தகைய வாழ்க்கையைக் கொண்டிருந்த புலவருக்குக் கவலை ஏது! கவலை இன்மையால், நரை திரை தோன்ற வில்லை; பிணி மூப்பு அணுகவில்லை. ஆந்தையாரே இவ்வுண்மையை அறிவுறுத்துகிறார்.

நரை இன்மைக்குக் காரணம் :

ஆந்தையார், வாழ்க்கையில் பல மைல் கற்களைக் கடந்த நிலையிலும், அவர் தலை முடி ஒன்றுகூட நரைக்கவில்லை. அது அனைவருக்கும் அதிசயமாகவே இருந்தது. அதன் காரணத்தை அறிய வேண்டும் என்ற அவா எல்லாருக்கும் ஏற்பட்டது. ஒரு சமயம் சான்றோர் சிலர் ஆந்தையாரிடம், "உமக்கு ஆண்டு கள் பலவாகியும் நரை தோன்றாமைக்குக் காரணம் யாதோ?" என்று வினவினார்கள். அதற்குப் புலவர், தமது வாழ்க்கை முறைதான் காரணமாகும் என்று எடுத்துக் காட்டி, கவலையற்ற வாழ்க்கை நடத்துபவ ருக்கு நரை தோன்றுவதற்குக் 'காரணமில்லை என்ற உண்மையையும் அறிவுறுத்தினார். இதனைத் தமது உள்ளத்தில் அரும்பித் தோன்றிய

'யாண்டுபல வாக நரையில வாகுதல்
யாங்கா கியரென வினவுதி ராயின்,
மாண்டவென் மனைவியொடு மக்களும் நிரம்பினர்;
யான்கண் டனையரென் னிளையரும்; வேந்தனும்
அல்லவை செய்யான் காக்கும்; அதன்தலை
ஆன்றவிந் தடங்கிய கொள்கைச்
சான்றோர் பலர்யான் வாழும் ஊரே.'

என்னும் கவிதையால் வெளிப்படுத்தினார். இதனால்,

உடல் நலம், மன நலந்தை அடிப்படையாகக் கொண்டு அமையும் என்ற தத்துவம் தெளிவாகின்ற தல்லவா ?

அரசியலறிவு :

பழந்தமிழ்ப் புலவர் பலரைப் போலவே, ஆந்தை யாரும் அரசியலறிவு மிக்கவராய் விளங்கினர். அவர் காலத்தில் பாண்டி நாட்டை ஆண்ட அரசன், அறிவுடை நம்பி என்னும் பெயரினன் ; தமிழறிவும், தாய் மொழிப் பற்றும் உடையவன். அவன் பாடிய பாடல்கள் நற்றிணை, குறுந்தொகை, அகநா னூறு, புறநானூறு என்னும் நூல்களில் காணப்படு கின்றன. அவன் ஆந்தையாரோடு அளவளாவுதலைப் பெரிதும் விரும்புவான். புலவரும் அடிக்கடி அவன் அவைக்களஞ்சென்று அதனை அலங்கரிப்பதுண்டு. ஒரு நாள் ஆந்தையார் வழக்கம் போல அவன் அவைக்களஞ் சென்றார். அரசிருக்கை மண்டபத்தில் அரசன் அரியணையில் வீற்றிருந்தான். அமைச்சர் களும் அதிகாரிகளும் தங்களுக்குரிய ஆசனங்களில் அமர்ந்திருந்தார்கள். அரசன் இறை கொள்ளும் முறையைப் பற்றிய பிரச்சினை ஒன்று அங்கு எழுந்தது. அரசன் வரி வாங்கும் முறையில் சில குறைகள் இருப்பதாகக் கேள்வியுற்றிருந்த புலவர், அதனை அரசனுக்கு அறிவுறுத்த வேண்டும் என்று எண்ணியிருந்தார் ; நல்ல சந்தர்ப்பம் என்று கண்ட தும் பேசலானார் : “ அரசே, ஒரு மாவிற்குக் குறைந்த அளவினையுடைய நிலத்தில் விளைந்த கதிரையும் முறைப்படி அறுத்து அந்நெல்லை உணவாக்கி யானைக்குக் கவளமாகக் கொடுத்தால், பல நாட் களுக்கு உணவாகும். ஆனால், நூறு வயலாக இருந்

தாலும், யானையானது தானே புகுந்து உண்ண ஆரம்பித்தால், என்னுகும்? அதன் வாயில் புகும் நெல்லினும், காலால் அழியும் கதிர் அதிகமாகும் அல்லவா? இதனை வரி வாங்கும் மன்னர்கள் மனத்திற் கொள்ளுதல் வேண்டும். அறிவுடை வேந்தனுய் இருந்தால், வரி வாங்கும் நெறியை அறிந்து நேர்மை யாக நடந்துகொள்வான். அப்பொழுது அவனது நாடு பெரும்பொருளைத் திரட்டிக் கொடுப்பதோடு, தானும் தழைத்து ஓங்கும். அரசன் அறிவு மடம் பட்டு, ஆரவாரம் மிக்க அதிகாரிகளோடு கூடி, அருளின்றி வரி கொள்ளின், மக்களின் வெறுப்பைப் பெறுதலோடு, யானை புகுந்த விளைநிலம் போல, தானும் உண்ணப் பெருன்; உலகமும் கெடும்,'' என்று புலவர் பேசி முடித்தார். எக்காலத்திற்கும் பொருந்துவதான இக்கருத்தைப் புலவர் ஒரு கவிதை யாக வெளியிட்டார் :

'காய்நெல் லறுத்துக் கவளங் கொளினே
மாநிறை வில்லதும் பன்னுட் காகும்;
நூறுசெறு வாயினும் தமித்துப்புக் குணினே
வாய்புகு வதனினுங் கால்பெரிது கெடுக்கும்;
அறிவுடை வேந்தன் நெறியறிந்து கொளினே
கோடி யாத்து நாடுபெரிது நந்தும்;
மெல்லியன் கிழவ னுகி வைகலும்
வரிசை அறியாக் கல்லென் சுற்றமொடு
பரிவுதப வெடுக்கும் பிண்டம் நச்சின்
யானை புக்க புலம்போலத்
தானு முண்ணுன் உலகமுங் கெடுமே.'

என்பது அக்கவிதை. இவ்வாறு புலவர் உள் ளத்தில் தோன்றிய அரசியல் உண்மை ஒன்றைத் தாங்கி வெளிவந்த இக்கவிதை, அங்குக் குழுமியிருந்த அனைவர் உள்ளத்தையும் ஒருங்கே கவர்ந்தது. அர

சன் உண்மை உணர்ந்து, புலவர் அறிவுரைப்படி நடக்கச் சித்தமானுன். தங்கள் செயல்களும் புலவர் கவிதையில் பிரதிபலிப்பதைக் கண்டு அதிகாரிகளும் திருந்திஞர்கள்; குடிகளும் குறைவின்றி வாழ்ந்து வந்தார்கள்; சமூகத்தில் உயர்ந்த நோக்கத்தை உருவாக்குகின்றவன் கவிஞனே என்பதும் உண்மையாயிற்று.

சோழநாடு :

மூவேந்தர் நாடுகளுள்ளும் செழுமை மிக்கது சோழநாடு. 'பொய்யாதளிக்கும் பொன்னி' என்று புலவர்களால் புகழப்பட்ட காவிரியாறு, அந்நாட்டை வளமுறச் செய்கின்றது. காவிரி வளத்தால் அந்நாடு, 'ஒரு பிடி படியும் சீறிடம் எழுகளிறு புரக்கும் நாடு' என்ற புகழுரை பெற்றது. அந்நாட்டு மக்கள் உணவுப் பஞ்சமின்றி வாழ்ந்து வந்தார்கள். பசி அரசனின் பிரஜைகளாக அவர்கள் எக்காலத்திலும் இருந்ததில்லை. 'சோழ வளநாடு சோறுடைத்து,' என்ற பழமொழி அது பற்றி எழுந்ததன்றே! அந்நாட்டை ஆதி காலந்தொட்டுச் சோழ மன்னர் அரசு புரிந்து வந்தனர்; வளம் மிக்க நாட்டை ஆண்ட காரணத்தால், சோழர் 'வளவர்' என்று வழங்கப்பட்டனர். சோழ நாடு என்பது இன்றுள்ள தஞ்சாவூர் திருச்சிராப்பள்ளி மாவட்டங்களும், புதுக்கோட்டையிலும் தென்ஞர்க்காட்டிலும் சில பகுதிகளும் சேர்ந்த நிலப்பரப்பாகும்.

அக்காலத்தில் சோழ நாட்டிற்கு உறையூர், தஞ்சை, திருவாரூர், காவிரிப்பூம்பட்டினம், காஞ்சி என்னும் நகரங்களுள் ஒவ்வொன்று ஒவ்வொரு காலத்தில் தலை நகரமாய் விளங்கிற்று. என்ரு

லும், முதன்முதல் சோழர்களுடைய தலை நகராய் இருந்தது முதன்மை பெற்றது உறையூரே. அஃது, 'அறந்துஞ்சும் உறந்தை' என்ற புகழும் பெற்றது. இன்று அவ்வூர், திருச்சிராப்பள்ளியின் அருகே ஒரு சிற்றூராய்க் காணப்படுகின்றது; அன்று, பாண்டியர்க்கு மதுரை மாநகரும், சேரர்க்கு வஞ்சி மாநகரும் போன்று. சோழர்க்குரிய நகரங்களுள் சிறந்து விளங்கிற்று. 'ஊரெனப்படுவது உறையூர்,' என்று சிறப்பிக்கப்பட்டிருத்தலைக்கொண்டு, அது மதுரை வஞ்சி என்ற நகரங்களைவிட விஞ்சிய புகழுடையதாய் விளங்கிற்று என்று கொள்ளவும் இடமிருக்கின்றது. ஆனால், உறந்தையை நகர் என்று குறியாது ஊர் என்று குறித்திருத்தலால், ஐயுறுவார் சிலர். அவர் அக்காலத்தில் ஊர் என்பதும், நகர் என்பதும் ஒரே பொருளில் வழங்கி வந்தன என்பதை அறிந்துகொள்ளுதல் வேண்டும். முதலிற்சிற்றிடமாய் இருந்த பகுதிகள், மக்கள் பெருக்கத்தால் நகர்ந்து நகர்ந்து நகரங்களாயின; அது போலவே, சிற்றிடங்கள் ஊர்ந்து ஊர்ந்து ஊர்களாயின. ஆகவே, நகர் என்ற பொருளிலேயே, ஊர் என்பதும் வழங்கியிருத்தல் வேண்டும் என்பது தெளிவாகின்றதல்லவா?

உறையூருக்குக் 'கோழி நகர்' என்ற வேறொரு பெயரும் வழங்கி வந்ததாகத் தெரிய வருகின்றது. ஒரு கோழியானது யானையை எதிர்த்துப் போர் புரிந்து வெற்றி கொண்ட இடம் அஃது என்றும், அது பற்றியே அவ்வூருக்குக் கோழி நகர் என்று பெயர் வழங்கலாயிற்று என்றும் கூறுவர்; சோழர்கள் அவ் ஊரைத் தலை நகராகக் கொண்டமைக்கும் இதனையே ஏதுவாகக் காட்டுவர். இம்மாதிரியான வரலாறுகள் இலக்கியங்களில் மலிந்து காணப்படுகின்றன. அவை

களை எல்லாம் சரித நிகழ்ச்சிகளாக ஏற்றுக்கொள்ளு தல் அறிவுக்குப் பொருந்துவதன்று.

கோப்பெருஞ்சோழன் :

உறையூரைத் தலை நகராகக் கொண்டு சோழ நாட்டை ஆண்ட மன்னர்களுள் கோப்பெருஞ் சோழன் என்பான் ஒருவன். அவன் மலையின் மாண்பும், மாரியின் ஈகையும் கொண்டவன்; பரந்த நோக்கமும் விரிந்த சிந்தையுமுடையவன்; ஆட்சி யைச் சீரும் சிறப்புமாக நடத்தித் தன் குடிகளுக்கு எல்லா வகையிலும் நன்மை செய்து நற்புகழ் பெற்ற வன்; ஒழுக்கநெறி வழுவாது நின்று கடமை அறத் திற்கு முதலிடம் தந்து, மக்களையும் அவ்வழியில் நடத்தி வந்தவன்; தமிழ் மொழியினிடத்தும், தண்ட மிழ்ப் புலவரிடத்தும் அன்பு பூண்டு ஒழுகினவன்; தன்னை நாடி வந்த புலவர்கள் மகிழுமாறு அவர்கள் விரும்பிய பரிசிலைத் தெரிந்து கொடுத்து வந்தவன். அவன் அவைக்களத்தில் பொத்தியார், எயிற்றிய ஞர் முதலிய பெரும்புலவர் அகலாது அமர்ந்திருந்து, அவனது ஒப்பற்ற கொடைப் பெருமையையும், கோதற்ற புகழையும் நாடெங்கும் பரப்பினர். மன்னன் புகழ் மாநிலம் எங்கும் பரவியது. மக்கள் யாவரும் மன்னனை மகிழ்ந்துகொண்டாடினர்கள்.

உணர்ச்சி ஒத்த நட்பு :

இத்தகைய கோப்பெருஞ்சோழனுக்கும், பாண்டி நாட்டு ஆந்தையாருக்கும் அரியதொரு நட்பு ஏற்பட்டு வளர்ந்து வருவதாயிற்று. அவர்கள் ஒருவரை ஒருவர் நேரில் பாராமலும் பழகாமலும் நண்பர்க ளானர்கள். இருவரும் மலை போன்ற மாண்பு

உடையராய் விளங்கினமையால், ஒருவர் புகழ் ஒருவர் காதுக்கு எட்டிய மாத்திரத்தில் உணர்ச்சி ஒத்த அவர்கள் உள்ளங்கள் ஒன்று கூடின. பெருஞ் சோழன் ஆந்தையாரின் அரிய குணங்களையும், உலகம் நிலைத்திருத்தற்கு ஏதுவான பண்புடைமை அவரிடம் படிந்திருத்தலையும் அறிந்து, உள்ளம் உருகி, உணர்ச்சியொன்ற, நீங்கா நட்புக்கொண்டான். ஆந்தையாரும், சோழனின் ஆன்ம அறிவினையும் மற்ற அரிய குணங்களையும் அறிந்து, அவனிடம் இணைந்த கேண்மை பூண்டார்; அவனைப் பற்றி அழகிய கவிதைகள் புனைந்து இன்புற்று வந்தார். இவர்கள் நட்பு, உணர்ச்சி ஒத்த நட்பிற்கு இலக்கியமாய் அமைந்தது.

உலகில் ஒருவன் அடையும் பேறுகளுள் நல்ல நண்பன் கிடைக்கப் பெறுவதும் ஒன்ருகும். நம்முடன் நெருங்கிப் பழகுபவர் அனைவரும் நண்பராகிவிடார். உண்மை நண்பன் ஒருவன்கூட இவ்வுலகத்தில் கிடைப்பது அருமை. 'ஊரில் ஒருவனே தோழன்,' என்பது இவ்வுண்மையை விளக்க எழுந்த பழமொழியாகும். அறிஞர் சாக்கிரட்டீஸ் (Socrates) என்பவரைப் பற்றிய ஒரு செய்தியை இங்குக் குறிப்பிடுதல் பொருத்தமாகும். அப்பெரியார், தமது இருக்கையின் பக்கத்தில் வேறோர் இருக்கையை இட்டு வைத்திருந்தார். அதில் யாரையும் அமர விடுவதில்லை. அவர்பால் வழக்கமாகப் போய் வரும் நண்பர் ஒருவர், அவ்விருக்கை என்றும் காலியாய் இருப்பதைக் கவனித்து, அறிஞரிடம் காரணம் கேட்டார். அதற்கு அவர், "எனக்கு மனமொத்த நண்பர் ஒருவர் கிடைத்தால், இவ்விருக்கையில் அமரச் செய்ய வேண்டும் என்ற எண்ணத்தோடு இதனை இங்கு இட்டு வைத்

திருக்கிறேன். ஆனால், இத்தனை ஆண்டுகளாகியும் அத்தகைய நண்பர் ஒருவர் கிடைக்கப் பெறுமையால், இவ்விருக்கை வெற்றிருக்கையாய் இருந்துவருகிறது,'' என்று கூறினராம்! எனவே, வாழ்க்கையில் மன மொத்த நண்பர்கள் வாய்ப்பது அருமை என்பது விளங்குகிறதல்லவா? 'அற்ற குளத்தில் அறுநீர்ப் பறவை' போன்று நீங்கும் நண்பரே பலராவர்.

உலகில் ஒருவரோடு ஒருவருக்கு ஏற்படுகின்ற கேண்மையானது, புணர்ச்சி, பழகுதல், உணர்ச்சி ஒத்தல் என்ற காரணங்கள் பற்றி நிகழ்கின்றது என் பர். புணர்ச்சி என்பது பிறப்பு முறைமையால் உற வினர் மாட்டு நிகழ்வதொரு மனப்பற்று. பழகுதல் என்பது, ஒரு சாலை மாணவராகவோ, ஓர் ஊரின ராகவோ, ஒரு நாட்டினராகவோ இருந்து பலகால் கண்டு பழகுதல் காரணமாக ஒருவருக்கொருவர் ஏற்படும் மனப்பற்று. இவ்விரு வகை நட்பிற்கும் மேலான நட்பே உணர்ச்சி ஒத்த நட்பாகும். இந் நட்பு, எவ்வித வேற்றுமை உணர்ச்சியுமின்றி, இரு வர் மனம் ஒன்று பட்டுக் கலப்பதால் நிகழ்வது; இரு வரை ஒத்த இயல்பினராக மாற்றும் ஆற்றலுடையது. இந்நட்பு ஏற்படுவதற்குப் பிறப்பு முறையோ, பழகு தலோ வேண்டுவதில்லை. உணர்ச்சி ஒத்தல் ஒன்றே போதுமானதாகும். அவ்வாறு இருவரிடை உணர்ச்சி யொக்குமாயின் அதுவே உடனுயிர் நீங்கும் உரிமைத் தாய நட்பினைப் பயக்கும் என்பர் சான்றோர். இதனையே திருவள்ளுவர்,

> 'புணர்ச்சி பழகுதல் வேண்டா ; உணர்ச்சிதான்
> நட்பாங் கிழமை தரும்.'

என்று கூறியுள்ளார். இத்தகைய ஒரு நண்பரையே

அறிஞர் சாக்கிரட்டீஸ் தேடிக்கொண்டிருந்தாரோ என்று எண்ண வேண்டியிருக்கின்றது.

புலவர் ஆந்தையாரும், புரவலன் கோப்பெருஞ் சோழனும் உணர்ச்சி ஒத்த நட்பால் பிணிக்கப்பட்டனர். ஆதலின், ஒருவர் குணத்தை ஒருவர் பாராட்டுதலையே தம் பொழுது போக்காகவும், வாழ்க்கை இன்பமாகவும் கொண்டு வாழ்ந்தனர். பெருஞ்சோழன் ஆந்தையாரைத் தன்னின் வேறென எண்ணாது தலையன்பு பூண்டு ஒழுகி வந்தான். ஆந்தையாரும் அதனை அறிவர். அவர் உள்ளத்திலும் பெருங்கோவை எண்ணும் போதெல்லாம் அன்பின் ஆர்வம் பொங்கித் ததும்பிக்கொண்டிருந்தது.

அன்னச்சேவல் :

இந்நிலையில், ஒரு நாள் மாலைப்பொழுதில் புலவர் உலவிக்கொண்டிருந்தார்; விண்வழி விரைந்து செல்லும் அன்னம் ஒன்றைக் கண்டார். அது வடதிசை நோக்கிப் பறந்துகொண்டிருந்தமையால், புலவருக்குச் சோழநாட்டு நினைவு வந்தது. அவர் பெருஞ் சோழனை நினைத்தார்; அன்பு அவர் உள்ளத்தை ஆட்கொண்டது. ஆர்வம் தூண்ட, அஃது ஒரு கவிதையாய் வெளி வந்தது. அன்னப்பறவை அஃறிணைப் பொருள் என்ற எண்ணமும் அவருக்கு எழவில்லை. அன்னத்தை விளித்து, "அன்னச் சேவலே, அன்னச் சேவலே, நீ தென்றிசையில் உள்ள குமரித் துறையில் அயிரை மீனை அருந்திவிட்டு, வடதிசை இமயம் செல்கிறாய் என்று எண்ணுகிறேன்! அப்படியானால், நான் இயம்புவது ஒன்றுண்டு; அதனைக் கேள் : நீ செல்லும் வழியில் சோழ வளநாடு அமைந்துள்ளது. அந்நாட்டின் தலை நகரான உறந்தைப்

பதி, மாட கூடங்களால் மலிந்து விளங்கும். அப்பதி யில் உயர்நிலை மாடத்தில் சோழ மன்னன் சிறக்க வாழ்கின்றான். அம்மாடத்தில் இறங்கி, வாயிற்காவலனைக் கண்டு கலங்காது, மாளிகையின் உள்ளே நேராகச் சென்றால், மன்னனைக் காண்பாய்; அவன் தான் எம்முடைய கோவாகிய கோப்பெருஞ்சோழன். அவன் முன்னிலையில் சென்று, 'ஐயனே, நான் பிசிர் என்னும் ஊரின்கண்ணுள்ள ஆந்தையின் அடியுறை,' என்று கூறுவையாயின், மன்னன் மனம் மகிழ்ந்து நின் பேடை பூணுதற்குரிய அணிகலனை அன்புடன் அளிப்பான்,'' என்ற கருத்துத் தோன்றக் கவிதை ஒன்றைக் கூறி முடித்தார். ஆந்தையாரின் உள்ளத்தில் புதைந்து கிடந்த அன்பு அவர் வாக்கில் விளங்கித் தோன்றுகின்றதல்லவா?

'அறிவுடைய ஆந்தையார், அஃறிணைப் பொருளான அன்னத்தை நோக்கிப் பேசியது பொருந்துமா?' என்ற எண்ணம் எழுகின்றது. இவ்வாறு பேசுவது 'இலக்கிய மரபு' என்பதை நாம் அறிந்துகொள்ளுதல் வேண்டும். இம்முறையில் அஃறிணைப் பொருள்களை உயர்திணைப் பொருள்களாக உருவகித்துப் பேசுதல் மேனாட்டு இலக்கியங்களிலும் மிகுந்து காணப்படுகின்றது. அதனை இலக்கியத் திறனாய்வாளர்கள் 'பெர்ஸானிபிக்கேஷன்' (Personificatian) என்பர். இதனை நன்னூலார்,

> 'கேட்குந போலவும் கிளக்குந போலவும்
> இயங்குந போலவும் இயற்றுந போலவும்
> அஃறிணை மருங்கினும் அறையப் படுமே.'

என்ற சூத்திரத்தில் கூறியுள்ளார்.

வடக்கிருத்தல் :

நற்குணக் குன்றன பெருஞ்சோழனுக்கு இருவர் புதல்வர் இருந்தனர். அவ்விருவரும் வளவர் குடிக்கே வடுவைத் தேடினர்; விடரும் தூர்த்தருமான கூட்டங்களோடு உறவு கொண்டு, தந்தைக்கு எதிராகப் போர் தொடுக்கவும் துணிந்தனர்; சேரமன்னன் ஒருவனது துணையைப் பெற்று உறையூரின்மீது படை எடுத்தனர். செய்தி அறிந்த மன்னன், ஒரு புறம் சீற்றமும், ஒரு புறம் வருத்தமும் கொண்டான். கோபத்தால் அவனுடல் துடித்தது; இரண்டு கண்களும் கொவ்வைக்கனிபோலச் சிவந்தன. அவன், போருக்கு வந்திருப்பவர்கள் தன் மக்கள் என்பதையும் மறந்து, பெரும்படையோடு போருக்கு எழுந்தான். அப்பொழுது புல்லாற்றூர் எயிற்றியனர் என்ற புலவர் குறுக்கிட்டு, மன்னன் சினத்தை மாற்றினர்; 'மறுமைக்குரிய அறவினையை நாடுவதே உனது கடமையாகும்,' என்று அறிவுறுத்தினர். புலவர் அறிவுரையால் மனந்தெளிந்த மன்னன், நாட்டைத் துறந்து, காட்டை அடைந்து, வடக்கிருக்கத் துணிந்தான். வடக்கிருத்தல் என்பது, யாதேனும் இன்றியமையாக் காரணம் பற்றி உயிர் விடத் துணிந்தவர்கள், ஆற்றின் இடையேயுள்ள தீவு போன்ற தூய தனி இடத்தை அடைந்து, வடக்கு நோக்கி அமர்ந்து, உணவு முதலியன துறந்து, இறைவன் அருளையே நினைந்த வண்ணம் உயிர் விடுதலாம். சத்தியாக்கிரக நெறியை உலகிற்கு அறிவுறுத்திய காந்தி அடிகள், உண்ணு நோன்பு என்ற ஓர் ஆயுதத்தைக் கைக்கொண்டிருந்தமையை நாம் அறிவோம். உண்ணு நோன்பிருந்து உயிர்

விடுதல் போன்றதே வடக்கிருத்தல் என்று கூறுதல் பொருந்தும்.

மக்கள் செயலை எண்ணி மனவெறுப்புக் கொண்ட மன்னன் வடக்கிருந்தான். மானம் இழந்த பின் வாழ்வது தமிழன் தகைமைக்குப் புறம்பல்லவா? பெருங்கோவின் பிரிவுக்காற்ருத பெரியார் பலரும் அவனைச் சூழ அமர்ந்தனர். அப்பொழுது அரசன் அவர்களை நோக்கி, "நண்பர்களே, என் ஆருயிர் நண்பரான ஆந்தையார் இப்பொழுது வருவார்," என்று தன் ஆன்ம உணர்வால் அறிந்து கூறினன்.

சான்ருேர் வியப்பு:

பெருங்கோவின் பேச்சைக் கேட்ட சான்ருேர் வியப்படைந்தனர். பல ஐயப்பாடுகள் அவர்கள் உள்ளங்களில் எழுந்தன. ஆதலின், அவர்கள் அரசனை நோக்கி, "மன்னவ, ஆந்தையார் உனது பெயரைக் கேட்டிருப்பாரே அன்றி, உன்னை நேரில் கண்டறியாரே! பலகால் பழகிய நண்பர்கள்கூட இந்நிலையில் வருதல் இயலாதே! அன்றியும், நீ வடக்கிருக்கும் செய்தியை அவர் எங்ஙனம் அறிதல் கூடும்!" என்று பலபல வினவினர்கள். அதனைக் கேட்ட அரசன், அவர்களை நோக்கி, "அறிஞர்களே, ஆந்தையார் எனக்கு உணர்ச்சி ஒத்த நண்பர். எங்களிடை நான்-அவர் என்னும் வேற்றுமைக்கே இடமில்லை. என் மன எண்ணங்கள் யாரும் அறிவிக்காமலே அவர் மனத்தில் அரும்பித்தோன்றும். எனது நிலையை அவர் இதன் முன்பே உணர்ந்திருப்பார். ஆதலின், சிறிது நேரத்தில் அவர் இங்கு வருதல் திண்ணம். உங்கட்கு இதில் எவ்வித ஐயுறவும் வேண்டா. அவருக்கு என்னருகே இடம் ஒழித்து வையுங்கள்," என்று

தனது உள்ளுணர்வால் உணர்ந்து கூறினன். அரசனது உறுதி மொழி அவர்களுக்கு வியப்பை உண்டு பண்ணிற்று. அவர்கள் நடக்கப்போவதை ஆவலோடு எதிர்பார்த்திருந்தார்கள்.

பொத்தியாரின் உருக்கம் :

கோப்பெருஞ்சோழன் வடக்கிருக்கத் துணிந்ததைப் பாண்டி நாட்டில் இருந்த ஆந்தையார் தம் உள்ளுணர்வால் உணர்ந்துகொண்டார். உழுவல் அன்புடைய நண்பர்களது உள்ளங்கள் சிற்சிலபோது விழித்தெழுந்து நிகழ்ச்சிகளைப் பரிமாறிக்கொள்வது உண்டென்பது உளநூல் வல்லுநர்க்கும் உடன்பாடாகும். வாழ்க்கை நிகழ்ச்சிகளில் இதற்கு எண்ணிறந்த சான்றுகள் உள. கிறிஸ்து நாதர் தம் சீடர்களைப் பல இடங்களுக்கு அனுப்பியபோது அவர்கள் சென்ற இடந்தோறும் பேசிய பேச்சுக்கள் எல்லாம் தமக்கு இயற்கையாகவே விளங்கின என்று அருளியிருப்பது இதனை வலியுறுத்துதல் காண்க. கோப்பெருஞ் சோழன் நாடு துறந்ததை உணர்ந்த ஆந்தையார், வீடு துறந்து, சோழநாடு நோக்கி விரைந்தார்; தம் வருகையை எதிர்பார்த்திருந்த வளவன் முன் வந்து நின்றார். சான்றோர் அதிசயித்தனர். சோழ அரசன் அரச செல்வத்தை விட்டு விலகியதும், பாண்டி நாட்டுப் புலவர் நட்பைத் துணையாகக் கொண்டு வந்தெய்தியதும், 'புலவர் இப்பொழுது வருவார்,' என்று அரசன் அறிந்து கூறியதும், அங்ஙனமே புலவர் வந்து சேர்ந்ததும் எல்லாரையும் வியப்பிலாழ்த்தின.

அப்பொழுது, உறையூர் வாசியும், பெருங்கோவின் ஆருயிர் நண்பருமான பொத்தியார் என்னும்

புலவர் அங்கு அமர்ந்திருந்தார். இந்நிகழ்ச்சிகளை எல்லாம் கவனித்துக்கொண்டிருந்த அவர்,

‘ நினைக்குங் காலை மருட்கை யுடைத்தே
* * * *

இசைமர பாக நட்புக்கந் தாக
இனையதோர் காலை ஈங்கு வருதல் !
‘வருவன்’ என்ற கோனது பெருமையும்
அதுபழு தின்றி வந்தவன் அறிவும்
வியத்தொறும் வியத்தொறும் வியப்பிறந் தன்றே ?’

என்று உள்ளம் உருகிப் பாடினார்.

அன்பின் ஆற்றல் :

ஆந்தையாரைக் கண்ட சோழன் அகமிக மகிழ்ந்தான் ; தன் பிறவிப் பயன் அன்றே நிறைவுற்றதாக எண்ணிக் களித்தான். ஆந்தையார் கொண்ட மகிழ்ச்சிக்கு அளவுமுண்டோ ! அவர் தம் அகக்கண்ணால் கண்டு களித்திருந்த பெருங்கோவின் உருவத்தைப் புறக்கண்ணாலும் கண்டு களித்தார் ; சோழனின் அருகே அமர்ந்து அவன் செல்லும் தேயத்திற்கே தாமும் செல்ல உறுதி பூண்டார். இருவரும் இதயங் களிக்க இன்னுரையாடினர் ; ஆன்ம விஷயங்களைப் பற்றிப் பேசினர். உண்ணா விரதம் பூண்ட அவ்விருவரும் ஒன்ருகவே உயிர் நீத்தனர். தூரதேசத்தினரான இருவரை ஒன்றுபடுத்தி உடனுயிர் நீங்கச் செய்த அன்பின் ஆற்றலை என்னென்றுரைப்பது !

கண்ணகனார் பாட்டு :

இவ்வற்புதத்தைக் கண்ட கண்ணகனார், அன்பின் ஆற்றலை எண்ணி அதிசயித்தார் ; ‘ இனம் இனத்தோடு ’ என்ற உண்மையை உணர்ந்தார். உடனே அவர், “ பொன், பவளம், முத்து, இரத்தினம்

என்பவனவற்றுள் ஒவ்வொன்றும் தூரமான ஒவ்வோ ரிடத்தில் தோன்றிய போதிலும், அணிகலம் அமைக் குங்காலத்து அவை ஓரிடம் வந்து ஒன்று சேர்வதைப் போலவே, எவ்வளவு தூரமான இடத்தில் இருந்த போதிலும் ஒன்று சேரவேண்டிய காலத்தில் சான் ரோர்கள் ஒரிடத்தில் ஒன்ருய்க் கூடிவிடுவார்கள்,'' என்ற கருத்தமைந்த கவிதை ஒன்றைக் கூறி முடித்தார்:

'பொன்னும் துகிரும் முத்தும் மன்னிய
மாமலை பயந்த காமரு மணியும்
இடைபடச் சேய வாயினும், தொடைபுணர்ந்
தருவிலை நன்கலம் அமைக்குங் காலை
ஒருவழித் தோன்றியாங் கென்றுஞ் சான்ரோர்
சான்ரோர் பால ராப ;
சாலார் சாலார் பாலரா குபவே.'

என்பதே அக்கவிதை. அரிய உவமை ஒன்ருல் பெரிய உண்மை ஒன்றை விளக்கியிருக்கும் கண்ணக ஞரின் கவிதை, கற்போர் உள்ளத்தைச் சிலிர்க்கச் செய்கின்றது; சங்ககாலச் செய்யுட்களின் பெரு மைக்கு இஃது ஓர் எடுத்துக்காட்டாகும்.

ஆந்தையாரும் பெருஞ்சோழனும் கொண்ட நட்புக்கு இணையுமுண்டோ? உணர்ச்சி ஒத்த நட்பு உலகில் ஓங்குக!

V. சாத்தனரும் குமணனும்

ஆவூர் :

‘ கோனிலை திரிந்து கோடை நீடினும்
தானிலை திரியாத் தண்டமிழ்ப் பாவை ’

ஆகிய காவிரியாறு வற்ருது பாய்தலால், வளஞ் செறிந்து விளங்குவது சோழநாடு. அந்நாட்டில் காவிரிக்கரையில், ஆவூர் என்னும் அழகிய ஒரூர் அமைந்துள்ளது. அவ்வூர், ஆம்பல், குவளை, முளரி முதலிய மலர்கள் மலர்ந்து தோன்றும் நீர் நிலைகளா லும், மா, பலா முதலிய கனி தரு தருக்களும், கோங்கு, செண்பகம் முதலிய மலர் தரு மரங்களும் மிகுந்த சோலைகளாலும் சூழப்பெற்றுள்ளது; செந் நெற்பயிர்கள் செழித்து வளரும் வயல் வளம் மிகுந்து, சிவாலயங்களால் சிறந்து, பாடல் பெற்ற சிவதலங் களுள் ஒன்ருகப் பாராட்டப்படுவது.

மூலங்கிழார் :

அவ்வூரில் சுமார் ஆயிரத்தெண்ணூறு ஆண்டு கட்கு முன்னர், மூலங்கிழார் என்னும் புலவர் ஒருவர் வாழ்ந்து வந்தார். அவர் கற்றற்குரிய நூல்களை எல் லாம் கற்றுத் தேர்ந்து, கவிப்புலமை கைவரப்பெற்று, மன்னர் மதிக்கும் உன்னதநிலை உற்று விளங்கினர்; ‘ இல்லறமே நல்லறம்,’ என்ற உண்மையை உலகிற்கு உணர்த்துபவரைப் போல, தம் மனைத்தக்க மாண் புடைய மனையாளோடு கருத்தொருமித்து , நல்லறங் களை நாள்தோறும் இயற்றி, நல்லொழுக்க நெறி நின்று இல்வாழ்க்கையை இனிது நடத்தி வந்தார். கல்வி ஒழுக்கங்களில் சிறந்த புலவருக்கு அவர் இயற் றிய தவமே ஓர் உருக்கொண்டாற்போல ஆண் மகவு

ஒன்று பிறந்தது. அவர் பிள்ளைக்குத் தம் குலக் கடவுளான சாத்தனது பெயரைச் சார்த்திச் சீரும் சிறப்புமாக வளர்த்து வந்தார்.

பெருந்தலைச் சாத்தனார் :

சாத்தன் இளமையில் தந்தையாரிடத்தும், கணக்காயர் ஒருவரிடத்தும் கல்வி கற்கத் தொடங்கி, நிகண்டு முதலியவற்றின் நிலை கண்டுணர்ந்து, கலை பயில் தெளிவும் கட்டுரை வன்மையும் பெற்று, மாணவர் எல்லாரினும் மேம்பட்டு விளங்கினன். அவன் கற்குந் திறனைக் கண்ட கணக்காயர், 'பிற்காலத்தில் இவன் பெரும்புலவனாக வீறு பெற்று விளங்குவான்!' என்று வாழ்த்தினர். 'எழுத்தறிவித்தவன் இறைவனாகும்,' என்பது முன்னோர் முதுமொழியன்றோ? கண்கண்ட தெய்வமான கணக்காயர் வாக்குப் பொய்யாகுமா? சாத்தன் பிற்காலத்தில் கல்விக் கடலின் எல்லை கண்டு, ஆழ்ந்த அறிவும் ஆன்ற பண்பும் அமையப்பெற்றுத் திகழ்ந்தான். அதனால், அக்காலத்தில் அறிஞரெல்லாரும் சாத்தன் என்று ஒருமையில் வழங்குவதை விடுத்துச் சாத்தனார் என்று மதிப்புத் தோன்ற மரியாதையாக வழங்கத் தலைப்பட்டனர்.

சாத்தனாரிடம் கவித்துவ உணர்ச்சி கனிந்திருந்தது. அவ்வுணர்ச்சி அவருக்குக் கருவிலே அமைந்த திருவாகும். அவர் நல்ல கவிதைகள் புனைந்து, கற்றோரையும் மற்றோரையும் களிப்பூட்டி வந்தார். அவரது நுண்ணறிவு அவர் வாக்கில் பிரதிபலிப்பதைக் கண்ட மக்கள் மகிழ்ந்தார்கள்; அவரது அறிவு மாட்சி தோன்றப் 'பெருந்தலைச் சாத்தனார்' என்று பாராட்டினார்கள். இக்காலத்திலும் அறிவு மிக்காரைப்

'பெருந்தலையர்' என்று பாராட்டுகின்ற வழக்கம் இருக்கின்றதல்லவா? எனவே, அறிவு மாட்சி பற்றியே அவர் பெருந்தலைச் சாத்தனார் என்று பெயர் பெற்றிருத்தல் வேண்டும் என்பது தெளிவு. ஆனால், உருவத்தால் பெரிய தலையை உடையவராய் இருந்தமையால் இப்பெயர் பெற்றிருத்தல் கூடும் என்று கருதுவர் சிலர். 'மகாகனம்' என்றால் மிகவும் கனமான உடலை உடையவர் என்று பொருள் கொள்ளுதல் இல்லையே! அதுபோலவே 'பெருந்தலையர்' என்பதற்கும் உருவத்தால் பெரிய தலையை உடையவரென்று பொருள் கொள்ளாது, அறிவால் பெரிய தலையை உடையவரென்று கொள்ளுதலே அமையும். மக்கள் அன்புப் பெருக்கால் புலவரது அறிவு மாட்சி தோன்ற அளித்த பட்டமே 'பெருந்தலைச் சாத்தனார்' என்பதாகும்.

வாழ்க்கை :

பெருந்தலைச் சாத்தனார் தக்க பருவமடைந்ததும், நாற்குணங்களும் நனி பொருந்திய நன்னுதலாள் ஒருத்தியை நாடி மணந்து, இல்வாழ்க்கையை இனிது நடத்தி வந்தார். மைந்தர் பலர் பிறந்து மனை வாழ்க்கையை மாண்புறச் செய்தனர். புலவர் எப்பொழுதும் கல்வி கேள்விகளில் கருத்தைச் செலுத்தி, அறிஞர்களோடு சேர்ந்து ஆராய்ச்சி நடத்தி, புத்தம்புதிய கவிதைகள் புனைந்து, பொழுது போக்கி வந்தார். இடைவிடாது இலக்கியங்களைப் பயின்றமையால், அவர் சிந்தனா சக்தி அதிகரித்தது; உள்ளொளி வாக்கில் பிரதிபலித்தது; பொழுது இன்பமாகக் கழிந்தது. செல்வப் பொருளைப் பற்றிச் சிந்திப்பதற்கும் புலவருக்கு நேரமில்லை. புலவர் என்றால் வறுமைக்

குத் தோழமை அதிகமல்லவா? பாவம்! நம் புலவர் மேலும் வறுமை காதல் கொண்டது. புலவர் வீட்டில் வறுமை புகுந்து வாட்டத்தலைப்பட்டது. புலவர்மனைவி உணவின்றி உடல் மெலிந்து எலும்புந் தோலுமாய்க் காட்சி அளித்தாள்; கைக்குழந்தை, பாலின்மையால், தாய் முகம் நோக்கிக் கரைந்தழுதது. குழந்தையின் அழுகையை அமர்த்த முடியாது வருந்திய தாய், தன் கணவனுர் முகம் நோக்கிக் கலங்கி நின்ருள். வீட்டில் பல நாட்களாகச் சமைத்தல் தொழில் நடைபெற வில்லை. அடுப்பில் காளான் பூத்துக்கிடந்தது. இந்தப் பொல்லாத வறுமையைப் போக்குதல் வேண்டும் என்று புலவர் திட்டமிட்டார்.

பரிசில் வேட்கை :

நற்குணம் மிக்க வள்ளலை நாடி, அவர் புகழைப் பாடிப் பரிசில் பெற்று வறுமை நோய் களைதல் வேண்டும் என்பது புலவரது திட்டம். அவர் சோழ நாட்டு அரசர்களை அடைந்து பரிசில் பெறுவதைப் பற்றி ஆலோசனை செய்தார். உறையூர்ச் சோழரும், புகார்ச் சோழரும் தத்தம் தலைமையை நிலை நாட்டப் போர் புரிந்துகொண்டிருந்த காலம் அது. நாட்டில் அமைதியைக் காண்பது அருமையாய் இருந்தது. இந்நிலையில், சோழ வேந்தர்களைச் சென்று காணு தற்குப் புலவர் மனந்துணியவில்லை; சேரநாட்டை எண்ணினுர். அந்நாட்டின் ஒரு பகுதியான கொங்கு நாட்டில், முதிரமலை நாட்டை ஆளும் குமண வேந்த னது நினைவு புலவருக்கு வந்தது. அவர் அந்நாடு நோக்கிப் பரிசில் வேட்கையால் விரைந்தெழுந்தார்.

குமணன் :

கொங்கு நாட்டின் ஒரு பகுதியில் முதிரமலை என்னும் ஓர் மலையுண்டு. இக்காலத்தில் அம்மலை குதிரை மலை என்னும் பெயரால் வழங்கப்படுகிறது. அம்மலையையும் அதனைச் சார்ந்த நாட்டையும் குமணன் என்னும் மன்னன் ஆண்டு வந்தான். அவன் நற்குணக் குன்று; இன்சொல்லே பேசும் இயல்பினன்; 'ஈதல், இசைபட வாழ்தல்,' என்ற இலட்சியமுடையவன்; பாவாணர் மிடிக்குப் பகைவன்; பாவலரைக் கண்டால் அகமலர அழைத்து, அறுசுவை அமுது அளித்து, அவர் வறுமை அடியோடு நீங்கும் வண்ணம் பொன்னும் மணியும் வாரி வழங்கும் புரவலன். அவனது புகழ் தமிழகம் எங்கும் பரவியிருந்தது. சாத்தனாரும் கொண்டல்போலக்கொடுக்கும் குமணனது வள்ளன்மையை அறிந்திருந்தாராதலின், கொங்கு நாடு நோக்கிப் பயணமானார்.

பெருஞ்சித்திரனாரின் பெருந்தன்மை :

கொங்கு நாடு செல்வதற்குக் காடு மலை எல்லாம் கடக்க வேண்டியிருந்தது. புலவர் கால் நடையாகவே நடந்து சென்றார்; நடையால் மெலிந்து ஓரிடத்தை அடைந்து இளைப்பாறினார். புலவர் நெடுவழி நடந்தமையால், மிகவும் களைப்புற்றிருந்தார். அவர் முகம் சோர்வுற்றிருந்தது. அவ்வழியாகப் பெருஞ்சித்திரனார் என்ற புலவர் குமணனிடம் பரிசில்பெற்று யானை மீது வந்துகொண்டிருந்தார். அவரும் சோழ நாட்டுப் புலவரே. அவர் தம் கண்ணெதிரே தோன்றும் காட்சிகளைக் கற்பவர் மனக்கண்முன் தோன்றுமாறு சொற்சித்திரம் புனைவதில் வல்லவராதலின், அப்பெயர் பெற்றார் என்பர் சிலர். அவர் சாத்தனாரிடம் நட்புரிமை

உடையவர். அவர் சாத்தனாரைக் கண்டதும் யானை யினின்றும் இறங்கி வந்து, புலவரை அன்பினால் தழுவி, அளவளாவி, அவர் நலிவிற்குக் காரணம் வினவினார்; தம்மை வாட்டிய வறுமையே சாத்தனாரையும் வாட்டுவதை அறிந்து வருந்தினார்; 'நமது வறுமையைப் போக்கிய வள்ளல் குமணனே, இவர் வறுமைக்கும் மருந்தாவான்' என்று எண்ணி, அவனிடம் சாத்தனாரை ஆற்றுப்படுத்தினார். தாம் பெற்ற இன்பத்தைத் தம் நண்பரும் பெற வேண்டும் என்று எண்ணிய பெருஞ்சித்திரனாரின் பெருந்தன்மையை என்னென்றுரைப்பது! அவர் உள்ளத்தில் பொறாமை, பூசல், அவா முதலிய தீய உணர்ச்சிகளுக்கு இடமிருந்தால் குமணனிடம் புலவரை ஆற்றுப்படுத்தியிருப்பரா? தமிழ்க் கல்வி பயின்றார் தன்மை அது!

> 'உவப்பத் தலைக்கூடி உள்ளப் பிரிதல்
> அனைத்தே புலவர் தொழில்.'

என்றவாறு புலவர் இருவரும் உள்ளம் கலந்து உரையாடினர்; பின்னர், 'இனி என்று காண்போம்!' என்ற எண்ணத்தோடு பிரிந்தனர். பெருஞ்சித்திரனார் தம்மைக் குமணனிடம் ஆற்றுப்படுத்திய முறையால், தாம் எண்ணியவாறு குமணன் தம் வறுமை நீங்கப் பொருள் வழங்குவது உறுதி என்று துணிவு கொண்ட சாத்தனார், முதிரமலை நாட்டை நோக்கி நடந்தார்.

பொறாமையின் விளைவு :

குமணன் வருகின்ற அனைவர்க்கும் வாரி வழங்குவதையும், அவன் புகழ் ஓங்குவதையும் கண்டு பொறாமை கொண்டனர் சிலர்.

'கொடுப்ப தழுக்கறுப்பான் சுற்றம் உடுப்பதூஉம்
உண்பதூஉ மின்றிக் கெடும்.'

என்பதை மறந்து வாழ்கின்றவர் அக்காலத்திலும் இருந்தனர் போலும்! குமணனுக்குத் தம்பி ஒருவன் இருந்தான். அவன் இளங்குமணன் என்னும் பெயரினன்; அமணன் என்றும் அவனை வழங்கு வார்கள். மணமில்லாதவன் என்ற பொருளில் அப் பெயர் வழங்குவதாயிற்று என்று கூறினும் அமையும். பொறாமைக்காரர்கள், இளங்குமணன் மனத்தை மாறுபடச் செய்தார்கள்; அவனைக் குமணனுக்கு எதிராகத் தூண்டினார்கள். தீயாரைத் துணைக் கொண்ட இளங்குமணனும் 'நிலத்தியல்பால் நீர் திரி தல் போல, இனத்தியல்பால் அறிவு திரியப் பெற்று' மனமாற்றம் அடைந்தான்; அண்ணனுடைய அறச் செயல்களைக் கண்டு வெறுப்படைந்தான்; அவன் புகழ் பரவுவதைக் கண்டு பொறாமை கொண்டான்; பொறாமைக்காரர்களோடு சேர்ந்து அரசாட்சியைக் கைக்கொள்வதற்குரிய சூழ்ச்சியிலும் தலைப்பட்டான்.

தம்பி, அரசாட்சியை நச்சி நஞ்சனைய வஞ் சனைச் செயல்களையும் புரியத் தலைப்பட்டான் என் பதை அறிந்த குமணன், அவன் ஆசையை நிறை வேற்றி வைக்கக் கருதி, தானாகவே நாட்டைத் துறந்து காட்டை அடைந்து கரந்துறைத்தான். 'இனிது இனிது ஏகாந்தம் இனிது!' என்றவாறு நாட்டு வாழ்க்கையைவிடக் காட்டு வாழ்க்கையே அவ னுக்கு இனிதாய் இருந்தது.

குமணனது உயர்ந்த நோக்கம் இளங்குமணனது பேதை மதிப்புக்குப் புலனாகாமையால், அவன் தனது சூழ்வினைக்குப் பயந்து அண்ணன் காடு சென்றுவிட்ட தாக எண்ணி இறுமாப்புக் கொண்டான்; தன்னை

முதிரமலை நாட்டிற்கு அரசனாகப் பிரகடனஞ் செய்து கொண்டு, அரியணையில் ஏறி அமர்ந்து ஆட்சியை ஆரம்பித்தான். தன் அண்ணன் சென்ற அற நெறியை விடுத்து மறநெறியில் சென்ற இளங் குமணன், நாட்டில் நடந்து வந்த தானதருமங்களை எல்லாம் தடுத்து நிறுத்தினான்; அதிகார மோகத்தால் அடாத செயல்களைச் செய்து வந்தான். நாட்டில் அமைதி குலைந்து புரட்சி ஓங்கிற்று. புரட்சியின் போதுதான் பொது மக்களின் உணர்ச்சிகள் யாவும் திரண்டு வெளியாகின்றன என்பர். பொது மக்கள் இளங்குமணனுக்கு எதிராகக் கிளர்ச்சி செய்தார்கள். அவன் ஆட்சிக்கு அசைவு ஏற்பட்டது. இந்நிலை ஏற்படுவதற்குத் தனது அறியாமையே காரணம் என் பதை அறிய முடியாத இளங்குமணன், அண்ணன் உயிரோடு இருப்பதே இதற்குக் காரணம் என்று தவறாக எண்ணினான்; தமையன் தலையைக் கொண்டு வருவார்க்குப் பொன் கோடி கொடுப்பதாகப் பறை சாற்றினான். இச்செய்தி அறிந்த நகர மக்கள், பின் னும் பன்மடங்கு இளங்குமணனை வெறுத்தார்கள்; கலகம் செய்தார்கள். அந்தக் கொந்தளிப்பை அடக்க முடியாது இளங்குமணன் தத்தளித்தான். எல்லாம் பொறாமையின் விளைவுதான்.

சாத்தனார் வருகை :

இந்நிலையில் கல்விக் கடலைக் கடந்தும் செல்வக் கடலைக் கடக்கும் வகை அறியாது அல்லலுற்ற பெருந்தலைச் சாத்தனார், முதிரமலை நாட்டை அடைந்தார்; நாட்டு நிலையை அறிந்தார்; அமணன் அரியணையில் அமர்ந்திருப்பதைக் கேள்வியுற்றுத் திடுக்கிட்டுக் கலங்கினார். அமணனைக் காணுதற்குப்

புலவர் மனம் விரும்பவில்லை. 'தீயாரைக் காண்பதுவும் தீதே,' என்பது புலவருக்கு விலக்காகுமா? அவர் அருங்குணச் செம்மலான குமணனைத் தேடி வனத்தை நாடி நடந்தார்; காட்டில் பல இடங்களிலும் அலைந்து தேடி, முடிவாக ஓர் இடத்தில் குமணனைக் கண்டு, "புலவர் குறை தீர்க்கும் புரவலனே, வாழிய! வாழிய!" என்று வாழ்த்தினார். புலவரைக் கண்ட குமணன், அகமகிழ முகமலர்ந்து, "வருக! வருக!" என்று அன்புரை கூறி வரவேற்றான்; புலவரோடு உள்ளம் ஒன்ற உரையாடினான். பின்னர் அவன் புலவரை நோக்கி, "காடுறையும் கடையேனிடம் நீவிர் கருதி வந்தது யாது?" என்று கேட்டான். புலவர் தாம் கருதி வந்த காரியத்தை வெளிப்படுத்தக் கருதி, "குணக்குன்றே, எனது இல்லத்தில் சமையல் நடைபெற்றுப் பல நாட்கள் ஆயின. அடுப்பில் காளான் பூத்துக் கிடக்கின்றது. உணவின்மையால், என் மனைவி எலும்பும் தோலுமாய் மெலிந்துவிட்டாள். பாலின்மையால், குழந்தை கரைந்து அழுகின்றது. இந்நிலையைக் கண்ட நான், என் நிலைக்கு இரங்கும் வள்ளல் நீயென உணர்ந்து, உன் முகம் நோக்கி வந்தேன். உன் நிலையோ, இதுவாயிருக்கின்றது! ஆனாலும் என்ன? ஆறு, பெருக்கற்று அடிசுடும் நாளிலும் ஊற்றுப் பெருக்கால் உலகூட்டுதல் போல, நீயும் நல்ல குடிப் பிறந்தாய் ஆதலால், நல்கூர்ந்தாய் ஆனாலும், இல்லை என்னாதுஈவாய் என்று நம்புகிறேன்," என்ற கருத்தமைந்த கவி ஒன்றை உள்ளுணர்ச்சி வெளிப்படும் முகக் குறிப்போடு கூறி முடித்தார்.

‘தலைகொண்டு விலை பெறுக’ :

புலவர் தம் சொல்லோவியத்திஞல் குமணன் உள்ளத்தில் பலப்பல எண்ணச் சுழல்களை எழுப்பினர்; தாம் மனத்தில் நினைத்தவற்றை எல்லாம் அவனையும் நினைக்கச் செய்தனர். புலவரின் சோக வார்த்தைகளைக் கேட்ட குமணன், புலவரது துன்பத்தைத் தனதாகவே பாவித்து இரங்கிஞன்; “நாடாண்ட காலத்தில் வந்திருந்தால், நாடிய பொருளை வறுமை தீர வழங்கி, வள்ளல் தன்மையை வழுவாது காத்திருக்கலாமே! இன்று என்ன செய்வது!” என்று ஏங்கிஞன். இல்லை என்பதைவிட இறப்பதே மேல் என்பது குமணனது இலட்சியம். இந்நிலையில் தன் இளவலான இளங்குமணன் தன் தலையைக் கொண்டு வருவார்க்குப் பொன் கோடி கொடுப்பதாகப் பறை சாற்றியிருப்பது அவன் நினைவுக்கு வந்தது. தம்பியின் கொலைச் செயலும் தமையனுக்கு அருட்செயலாகவே பட்டது. “ஆபத்தில் உதவுகின்றவஞகவன்றே இருக்கின்ருன் என் தம்பி! இந்நிலையிலும் ‘இல்லை’ என்று கூருத பெரும்பேறு பெறச் செய்த எம்பியினும் இனியர் யார்!” என்று எண்ணி அகமகிழ்ந்த குமணன், புலவரை நோக்கி,

‘அந்தநாள் வந்திலிர் அருந்தமிழ்ப் புலவீர்!
இந்தநாள் வந்துநீர் நொந்தெனை அடைந்தீர்!
தலைதனைக் கொடுபோய்த் தம்பிகைக் கொடுத்ததன்
விலைதனைப் பெற்றும் வறுமைநோய் களைமின்.’

என்று கூறித் தன் உடைவாளை உருவி நீட்டிஞன். என் செய்வார் புலவர் பெருமான்! உள்ளம் துடித்தார்! உடல் நடுங்கிஞர்; நீட்டிய வாளை வாங்காவிட்டால், குமணன் தானே தலையை வெட்டிக்கொண்டால்



‘ தலைகொண்டு விலை பெறுக !’

என்ன செய்வது என்ற அச்சத்தால், உடனே வாளினை வாங்கிக்கொண்டார். ஆனால், நிலையற்ற செல்வத்தை நச்சி, வள்ளல் தலைக்கு விலை வாங்கி, நிலைத்த பழியினை ஏற்கத் துணிவரோ? 'புகழெனில் உயிருங் கொடுக்குவர்; பழியெனில் உலகுடன் பெறினுங் கொள்ளலர்,' என்பது தமிழ் மக்களின் தனிப்பண் பல்லவா? பழியால் வரும் ஆக்கத்தினும், வறுமையால் வரும் வருத்தமன்றோ அவர்க்குச் சிறந்தது?

'பழிமலைந் தெய்திய ஆக்கத்திற் சான்றோர்
கழிநல் குரவே தலை.'

என்பது வள்ளுவர் வாக்கன்றோ! இப்பண்புள்ளம் படைத்த சாத்தனார் குமணனை நோக்கிப் பேசலானார்:

"தலைக் கொடையாளியே, பொருட்செல்வம் நிலையற்றது. அஃது இன்று ஒருவரிடம் நிலைக்கும்; நாளை வேறொருவரை நாடும்; பின் மற்றொருவரை மன்னும்; அது சகடக்கால் போலச் சுழன்று திரியும் இயல்புடையது. அச்செல்வத்தை நச்சியோ நான் நின் தலை துணிப்பது? இதைவிட அழியாப் பழி எனக்கு வேறுமுண்டோ? இக்கொலைச் செயலைச் செய்ய என் மனம் துணியுமோ? ஆனால், அரசே, நின் தலையை எனக்குப் பரிசிலாக அளித்துவிட்டனை யாதலின், அதனை நான் பெற்றுக்கொண்டேன். அஃது இப்பொழுது நின்னிடமே இருக்கட்டும். நான் வேண்டும்பொழுது அதனைப் பெற்றுக்கொள்கிறேன். அது வரையிலும் அதனைக் காத்துக்கொள்ளுதல் உனது கடமை. இதுவே நான் உன்னிடம் வேண்டும் பரிசில்," என்று சாத்தனார் கூறினார். பின்னும் அவர் நாடிழந்த நிலையிலும் வாடும் புலவரின் வறுமைக் கிரங்கி விலை பெறுமாறு தலை கொடுத்த குமணனின் தியாகத்தை, "இந்திரனுக்குத் தம் முதுகெலும்பைக்

கொடுத்த ததீசி முனிவரின் தியாகத்தையும் சிறுகச் செய்துவிட்டதே இவனது தியாகம்!'' என்று பாராட்டினார். பின்னர் அவர் குமணனிடம் சின்னாட்களில் திரும்பி வந்து காண்பதாகக் கூறிவிட்டு அங்கு நின்றுமகன்றார்.

அமணனுக்கு அறிவுரை :

அகன்ற புலவர், முதிரமலை நாட்டை அடைந்து, அமணனைக் காண விழைந்து, அவன் அரண்மனை நோக்கி நடந்தார். இளங்குமணனோ, அண்ணன் தலை கொணர்வாரைக் காணும் ஆசையால், அமைச்சர் சூழ அரியணையில் அமர்ந்திருந்தான். 'வாளொடு ஒருவர் வாசலில் வந்து நிற்கின்றார்,' என்று வாயிற் காவலன் கூறக் கேட்ட இளங்குமணன், அகமிக மகிழ்ந்தான்; தனது கனவு நனவாயிற்று என்று எண்ணி, அவர் வரவை எதிர்நோக்கினான். வருபவர் தமையன் தலையொடு வருவார் என்பது அவனது எண்ணம். அரண்மனையை அடைந்த புலவர், அவனைக் கண்டார். அரசன், அவருக்கு ஆசனமளித்து அமரச் செய்து, அண்ணனைப் பற்றிய செய்தியை அவரிடம் ஆவலோடு எதிர் பார்த்தான். மூடரையும் திருத்தும் மூதறிவு படைத்த புலவர், அவன் குறிப்புணர்ந்து பேசலானார்: "அரசே, எப்பொருளும் நிலைத்தலில்லாத இயல்பினை உடையது இவ்வுலகம். இவ்வுலகில் நிலை நிற்றலை விரும்பினர், ஈதலால் இசைபட வாழ்ந்து, தம் புகழை என்றும் நின்று நிலவும்படி நிறுவிவிட்டுச் சாவு என்னும் திரையில் மறைந்தனர். இறந்தார் அனைவரையும் மறந்த உலகம், புகழ் நிறுவியவரை மட்டும் மறவாது போற்றுகின்றது. புகழ் பெற்றவர் சாவா உடம்பு

பெற்றவரல்லரோ? ஆனால், சிலர் பெருஞ்செல்வராய் இருந்தும், இரப்போர்க்கு ஈந்து இவ்வுலகில் புகழ் நிறுவுதலை அறியாது, மாக்களைப்போல மாய்ந்தொழிந் தனர். அவர் எல்லாரையும் உலகம் மறந்துவிட் டது. ஈதலால் இசைபட வாழ்ந்தவனன்றோ உன் தமையன்! வறுமையால் வாடிய நான், அவன் கரந் துறையும் காடு சென்று அவனைப் பாடி நின்றேனாக, எனது வறுமையை உள்ளவாறு உணர்ந்து, எனக்குக் கொடுப்பதற்குரிய பொருள் தன்னிடம் இல்லாமை யால் வருந்தினான்; தன்னை நம்பி வந்த பரிசிலன் பொருள் பெறாது வருந்திச் செல்வது, தன் நாட்டை இழந்ததைவிட நனி இன்னாதது என்று கருதி, தன் தலையை வெட்டிச் சென்று தம்பியிடம் கொடுத் துச் செம்பொன் கோடி பெற்று வறுமை நோய் களையு மாறு இதோ, இந்த வாளினைக் கொடுத்தான். இத னைப் பெற்றுக்கொண்டு நின்னைக் காண வந்தேன்,'' என்று தமது வளமார்ந்த வாக்காற் பேசினார் புலவர்.

பின்னும் அவர் அவனை நோக்கி, "இத் தகைய குணக்குன்றான—கருணை வள்ளலான— குமணனுக்கு உடன் பிறந்தவனல்லவா நீ? உனது குலமாட்சியைக் குன்றாது காத்து நிற்கும் அவ னோடு நீ பகை கொண்டது ஏன்? ஒரு தாய் வயிற்றில் பிறந்த மக்கள் ஒன்றி வாழ்தல் வேண்டும் என்பது உலக நீதி அல்லவா? சகோதர வாஞ்சை என்பது உனக்குச் சற்றுமில்லாது போயிற்றே! அமரர்க்கும் அரிதான அன்பு, உனது உள்ளத்தில் ஊற்றெடுக்கவில்லையா? அன்றி, அது உனது ஆழ்ந்த உள்ளத்தில் அடங்கிவிட்டதா? அழியும் தன்மைத்தான அரச செல்வத்தை விரும்பி, அன்

பின் செல்வத்தை அழித்து, அழியாப் பழி பூண் டனையே! நீவிர் இருவீரும் ஒருவீராய் ஒன்றி வாழ்ந் தால், பகைவர்கள் பணிந்து நிற்கப் பாரிடத்தை நெடுங்காலம் ஆளலாமன்றோ? ஒன்றுபட்டு வாழ வேண்டிய நீங்கள், பிளவுபட்டு வாழ்ந்தால், உலகம் எள்ளி நகையாடாதோ? பண்புள்ளம் படைத்த பரத னது வரலாறு நீ அறியாததோ? காடு சென்ற அண் ணன் நாடு திரும்பும் வரையில், சடைமுடி தாங்கிக் காய்கனி அருந்தி, நகரம் செல்லாது நந்தியங்கிரா மத்தில் துறவுக்கோலம் காத்து நின்ற பரதனது தூய தன்மையை உனக்கு விளக்குதல் வேண்டுமோ? சகோதரர்களான பாண்டவர்களோடு பகை கொண்டு அழிந்தொழிந்த கௌரவர்கள் வரலாறு உனக்குப் புதியதன்றே? இந்த இறந்த கால வரலாறுகள் உன் இதயத்தைப் பண்படுத்தவில்லையா?'' என்று பலவாறு உணர்ச்சி நிறைந்த குரலாற் பேசினர். அந்தக் குரல், இளகாத இளங்குமணன் உள்ளத்தில் ஊடுருவிச் சென்று, அவன் கல் மனத்தையும் கரையச் செய்தது. நல்லறிவு பெற்றுத் திகழ்ந்தான் இளங்குமணன்.

அமணனது அவா :

புலவரது அறிவுரையால் நல்லறிவு பெற்ற இளங் குமணன் உள்ளத்தில், அன்பு ஊற்றுத் திறந்து சகோதர வாஞ்சை சுரந்தெழுந்தது. அவன் சிறி யார் சேர்க்கையால்—பொறுமைக்காரர் சூழ்ச்சியால்— அண்ணனுக்குச் செய்த அல்லல்களை எல்லாம் நினைத்து அகங்குழைந்தான்; எவ்வாறேனும் அண் ணனை அழைத்து வந்து அரியணையில் அமரச் செய்து அவனடி நின்று பணிபுரிதல் வேண்டும் என்று அவாக்கொண்டான். அவன் புலவரை நோக்கி,

"அருந்தமிழ்ப் புலவீர், பாவியேன் செய்த பிழையை மன்னித்து, அண்ணனை அழைத்து வந்து அரியணையில் அமரச் செய்தல் வேண்டும்!" என்று அடி பணிந்து வேண்டினான். அமணனது உள்ளத்தில் அன்பு ஊற்றெடுப்பதைக் கண்ட புலவர், அவன் அவாவினை நிறைவேற்றக் கருதி, அவனையும் அழைத்துக்கொண்டு குமணன் வாழும் காட்டை அடைந்தார். அமைச்சர்களும், நகரமக்களும் அவர்களோடு சென்றார்கள்.

அன்பின் வெற்றி :

காட்டில் குமணனைக் கண்டதும் இளங்குமணன் பள்ளத்திழியும் நீர் போலப் பாய்ந்தோடிச் சென்று, பார் படியப் பாதத்தில் வீழ்ந்து வணங்கி, "அண்ணா, அடியேன், அகந்தையால் அழிவுற்று, அறியாது செய்த பிழையை மன்னித்தருளல் வேண்டும்! சிறியவர் அறியாது செய்த பிழையை அறிவுடைய பெரியவர் பொறுத்தலன்றோ கடமை! யான் உங்கட்குச் செய்த நஞ்சனைய வஞ்சனையை எண்ணும் போது என் நெஞ்சம் என்னையே சுடுகின்றது! அறியாமையாலும், பொறாமைக்காரர் சேர்க்கையாலும், என்னலம் கருதியும் நான் செய்த தீமையைப் பொறுத்துக் கொள்வதோடு, மறந்துவிடுதலும் வேண்டும்! அதற்கறிகுறியாக நீங்கள் நாட்டிற்கு வந்து மக்கள் மகிழ மணி முடி தாங்குதல் வேண்டும். எளிய எனது இந்த வேண்டுகோளை மறுத்தால், இப்பொழுதே என் உயிரை மாய்ப்பேன்!" என்று துணிந்து கூறினான்.

தீமை செய்தவரும் நாணும்படி நன்மை செய்தலன்றோ சான்றாண்மைக்கு அழகு? அருள் உள்ளம் படைத்த குமணன், தம்பியின் அன்பு நிறைந்த பேச்

சில் உள்ளத்தைப் பறிகொடுத்தான்; தம்பியை மார் புறத் தழுவி ஆறுதல் மொழிந்தான். "வனத்தில் இயற்கையோடு ஒன்றி வாழும் வாழ்க்கையே எனக்கு இன்ப வாழ்க்கையாய் இருக்கின்றது. மனத்தையும் கண்ணையும் ஒருங்கே கவரும் கவின் பெறு காட்சி களைக் கண்டு களித்து வாழும் இவ்வின்ப வாழ்க் கையை நான் அனுபவிப்பதற்குக் காரணமாயிருந்த உன்னருளை என்னென்பேன்! உன்னை எனக்கு இன்னல் செய்தவன் என்று கூற என் மனந்துணி யுமோ? அண்ணன்மீதுள்ள அன்பினுல் இன்ப வாழ்க்கையைத் தேடிக்கொடுத்தவன் என்றே உன்னைப் புகழ்வேன். நீயே நலமுற நாடாள வேண்டும். காட்டு வாழ்க்கையில் பழகிய என்னை நாட்டிற்குத் திரும்ப அழையாதிருப்பதே நீ எனக்குச் செய்யும் அன்பிற்கு அறிகுறியாகும்," என்று கூறி முடித்தான் குமணன்.

புலவர் ஆற்றல் :

குமணன் கூறியவற்றைக் கேட்ட இளங்குமண னும், அமைச்சரும், நகர மக்களும் செய்வதறியாது திகைத்துப் புலவர் முகம் நோக்கி நின்றுர்கள். குறிப் புணர்ந்த சாத்தனர், குமணன் மறு மாற்றம் உரையா வண்ணம் தம் ஆற்றல் தோன்றக் குமணனை நோக்கி, "தலைக்கொடையாளியே, உன் தலையை எனக்கு முன்னரே ஈந்துவிட்டாயன்றே? ஆதலின், உன் தலை என் தலையேயாகும். என் தலையில் முடி புனைய நான் விரும்புகின்றேன். அதைத் தடை செய்யும் உரிமை உனக்கு உளதாமோ? ஆகவே, இப்போது என் பின்னே வருவதே நீ செய்ய வேண்டுவதாகும்," என்று நயமாகக் கூறினர். மன்னன் மறுக்கலாகா

வகையில் பேசி முடித்த பெருந்தலைச் சாத்தனாரின் ஆற்றலை எல்லாரும் போற்றினர்.

முடி சூட்டு விழா :

பின்னர், எல்லாரும் நகரத்தை நண்ணினர். குமணனது வருகையை அறிந்த நகர மக்கள், தாயெதிர்வுற்ற சேயென மனம் மகிழ்ந்தார்கள். குமணன் முடி சூடப் போகின்றான் என்ற செய்தி எல்லாரையும் உவகைக் கடலில் ஆழ்த்தியது. நகரத்தை நன்கு அலங்கரித்தார்கள். முடி சூட்டு விழாவும் சிறப்பாய் முடிவுற்றது. புலவர் சின்னாள் அங்கிருந்து, சகோதரர்கள் ஒற்றுமையாய் ஒன்றி வாழ்வதைக் கண்டு, ஊழி பல வாழுமாறு ஆசி மொழிந்தார்.

பிரிவு உபசாரம் :

பின்னர், புலவர் உள்ளத்தில் வீட்டுணர்ச்சி வீறிட்டெழுந்தது. 'தேசமே எமது பாசம்,' என்று தீர முழக்கம் செய்யும் தியாகிகள் உள்ளத்திலும் வீட்டுணர்ச்சி கொழுந்து விட்டெரிவதைக் காண்கின்றோமல்லவா? 'யாதும் ஊரே,' என்ற புலவருக்கும் 'யாதும் வீடே,' என்று எண்ண முடிவதில்லையே! புலவர் வீடு செல்லத் தீர்மானித்தார். பின்னர், பிரிவு உபசாரம் பெற்று வீடு வந்து சேர்ந்தார். பெற்று வந்த பரிசிலைப்பற்றிப் பேசவும் வேண்டுமோ?

VI. நாகனாரும் வளவனும்

வெள்ளைக்குடி :

சோழ வளநாட்டில் வெள்ளைக்குடி என்னும் ஊர் ஒன்றுள்ளது. அவ்வூரைச் சுற்றி வயல்கள் பச்சைப்பசேலென்று காட்சியளித்தன ; தோப்புக் களும், துரவுகளும் நிறைந்து காணப்பட்டன ; செடி களும், கொடிகளும் மரங்கள் போல உயர்ந்து வளர்ந்து, ஊருக்கு வேலியாய் நின்று நிலவின ; எங்கும் காயும், கனியும், பூவும், பொழிலும் நிறைந்து பார்க்கப் பார்க்க மகிழ்ச்சி தரும் பேரழகொடு பொலிந் தன. அவ்வூர் வேளாண் குடியினர்க்கு நிலைக்களமாய் விளங்கிற்று.

நாகனார் :

அங்கு, உழவர் குலம் உய்யத்தோன்றினார் நாக னார் என்னும் நல்லிசைப் புலவர். அவர் இளமையி லேயே இலக்கிய இலக்கணங்களைக் கற்றுத் தேர்ந்தார். இயற்கையாகவே அவர் உள்ளத்தில் கவிதை உணர்ச்சி கனிவு பெற்றிருந்தது. அவர் தம் உள்ளுணர்வால் தெள்ளிய தமிழில் சொற்செறிவும் பொருட்பொலிவும் மிக்க கவிதைகள் புனைந்து வந்தார். அவர் கவிதை களைப் படித்து மக்கள் மகிழ்ந்தார்கள் ; இன்பக் கடலில் மூழ்கி எழுவது போன்ற புத்துணர்ச்சி பெற்றார்கள். நாடெங்கும் அவர் கவிதைகளுக்கு நல்ல வரவேற்பிருந்தது. என்றாலும், நாகனார் காடு மேடுகளையெல்லாங் கடந்து வள்ளல்களை அடைந்து பாடிப் பரிசில் பெறும் வாழ்க்கையை விரும்பினாரில்லை; புலமை இன்பங்கண்டவராய் இருந்த போதிலும், புலத்துறையிலேயே பொழுது போக்க வேண்டு

மென்று கருதினாரில்லை; தங்குலத்திற்குரிய உத்தம மான உழவுத் தொழிலில் தலை நின்று உழைத்து வந்தார்.

உலகுக்கு அச்சாணி போன்ற உழவர்கள் உயர் வடையவேண்டும் என்பது நாகனாரது பொது நோக் கம். 'உழவர்களுக்கு உயர்வளிக்க மறுக்கும் நாடு, எவ்வளவு வளமுடையதாய் இருந்த போதிலும், உயிர் வாழத் தகுதியற்றதாகிவிடும்,' என்பது அவரது உட் கருத்து. ஆதலின், தாம் வாழ வேண்டும் என்ற தந்நலமின்றி, உழவர்கள் உயர வேண்டும் என்ற எண்ணத்தால் உழைத்து வந்தார். பெரியாரை வியத்தலும், சிறியாரை இகழ்தலும் அவரிடம் இல்லை. அரசனாயினும் ஆண்டியாயினும் ஒப்ப நின்று உண் மையை எடுத்துரைக்கும் உறுதியுள்ளம் அவர்பால் அமைந்திருந்தது. இத்தகைய குணக்குன்றான நாக னாரை வேளாண் குடியினர் தம் தலைவராகக் கொண்ட தில் ஆச்சரியமில்லையல்லவா? அவரால் வெள்ளைக் குடி என்னும் ஊர் விளக்கம் பெற்றமையால் எல்லாரும் அவரை ஊர்ப்பெயரோடு சேர்த்து, 'வெள்ளைக்குடி நாகனார்' என்றே வழங்கி வந்தனர்.

வளவன் :

வளமுடைய நாட்டையாண்ட காரணத்தால் சோழர் 'வளவர்' என்று வழங்கப்பட்டனர் என் பதைக் கண்டோம். அவர்களுக்குக் 'கிள்ளி' என்றொரு பெயரும் வழங்கி வந்ததாக அறிகிறோம். நாகனார், காலத்தில் சோழநாட்டை ஆண்டு வந்த அரசன் கிள்ளி வளவன் என்னும் பெயரினன். அவனைக் குளமுற்றத்துத்துஞ்சிய கிள்ளிவளவன் என்று வழங்குவார்கள். அவன் குளமுற்றமென்னும்

இடத்தில் இறந்தது பற்றி அப்பெயர் பெற்ருன் என்பர். அவன் அஞ்சா நெஞ்சினன்; பகை வேந்தர்களாகிய யானைகளுக்கு அரியேறு போன்றவன்; செஞ்சொற்கவிஞன்; தமிழ்ப் புலவர்களிடம் தண்ணளியுடையான்; பசிப்பிணி மருத்துவனுன பண்ணனைத் தன் நண்பனுகக் கொண்டவன். அவன் புலவர் பெருமக்களால் தமிழ் மாலை சூட்டப் பட்ட புரவலனுய் விளங்கினுன்.

தமிழ் மாலை :

கிள்ளி வளவனது வள்ளன்மையால் வாழ்வு பெற்ற புலவர் பலர். அன்னூர் நன்றி மறவா நன்னெஞ்சினர். அவர்களுள் ஆவூர் மூலங்கிழார் என்பார் ஒருவர். அவர் கிள்ளி வளவனுக்கு என்றும் வாடாத தமிழ் மாலை தொடுத்தணிந்தார்.

'நீ உடன்று நோக்கும்வாய் எரிதவழ
நீ, நயந்து நோக்கும்வாய் பொன்பூப்பச்
செஞ்ஞாயிற்று நிலவுவேண்டினும்
வெண்டிங்களுள் வெயில்வேண்டினும்
வேண்டியது விளைக்கு மாற்றலை."

என்று புலவர் புனைந்தணிந்த தமிழ் மாலையின் சில இதழ்களிலேயே புரவலன் புகழ் மணம் கமழ்கின்றதல்லவா? இன்னெரு புலவரான கோவூர் கிழார் என்பவர்,

'வன்புலக் கேளிர்க்கு வருவிருந் தயரும்
மென்புல வைப்பி னன்னாட்டுப் பொருந!
மலையி னிழிந்து மாக்கட னோக்கி
நிலவரை யிழிதரும் பலயாறு போலப்
புலவ ரெல்லா நின்னோக் கினரே.'

என்று வளவனது வள்ளன்மையை வாழ்த்தி வணங்

கிறார். இவ்வாறு புலவர் பாடும் புகழுடையவனாய் விளங்கிய வளவன், தன் தோள் வலியாலும், வாள் வலியாலும் பகையொழித்து வாழ்ந்தான். சிற்றரசர்கள் கொடுத்த திறைப் பொருளால் அவன் நிதிச் சாலை நிறைந்திருந்தது.

வளவன் நாட்டில் வறுமை :

கிள்ளி வளவன் புலமை உணர்வால் செஞ்சொற் கவிஞனாய் விளங்கினான். கோவூர் கிழார் போன்ற பெரும்புலவர் பலர் அவன் அவைக்களத்தில் அமர்ந்திருந்தனர். அரசன் அவர்களோடு சேர்ந்து புலத் துறையில் பொழுது போக்கத் தலைப்பட்டான். செந்தமிழில் சிந்தை தோய்ந்திருந்தமையால், அவன் பல நூற்பொருள்களையும் சிந்திப்பதில் ஆழ்ந்து கிடந்தான். எண்ணம் பெருகப் பெருகச் செயல் குறையும் என்பது உண்மையல்லவா? புலமை இன்பங் கண்ட புரவலன், எண்ணும் தொழிலுக்கே நேரமின்றி ஏங்கினான். இந்நிலையில் அவன் செய்யும் தொழிலை மறந்தான் ; தன் நாட்டின் உயிர் நாடியாயுள்ள உழவுத் தொழில் உயர்வடைவதற்கான எவ்வித முயற்சியும் செய்தானில்லை. நாளடைவில் உழவுத்தொழில் குன்றியது. வானம் பொய்த்தமையால், வளங் குறைந்தது. வளவன் நாட்டிலும் வறுமை எட்டிப் பார்த்தது; பசி என்னும் தீப்பிணி எங்கும் படர்ந்தது ; அத்தீப்பிணி அலைக்கும் நாட்டில் பண்பாட்டிற்கு இடமேது! மக்கள் அல்லலுற்றார்கள் ; மன்னனைக் கண்டு மனக்குறையை எடுத்துரைக்கும் வகையறியாது வருந்தினார்கள். அரசன் செவ்வி அத்துணை அருமையாயிற்று. மன்னனும் மக்கள்மீது கருத்தின்றி, அவர்கள் குறைகளைக் கேட்டு நிறை

செய்யும் முறை மறந்து வாழ்ந்தான். அரசனை அடுத்திருப்பார், மிகுதிக்கண் மேற்சென்று இடித் துரையாது, பெறும் பொருளே பெரிது என்று கருதி வாளாவிருந்தனர். இந்நிலையில், உயிருக்கு இறுதி பயப்பினும் உண்மையை எடுத்துரைத்து மன்னனை நல்வழிப்படுத்த உறுதி கொண்டார் நாகனார் என்னும் புலவர். அவர் அறிவுலகத்தின் பெருமையைக் காக்கத் துணிவு கொண்டார். அங்கொன்று, இங் கொன்று கூறி அதுவே அறிவின் திண்ணிய நிலை என்று பேசித் திரியும் போலிப் புலவரா நாகனார்? இன்றும் வல்லரசு என்று வாய் மூடாது, உள்ளத்தில் உண்மையெனப் பட்டதை உள்ளவாறு உலகறிய அஞ்சாது எடுத்துரைக்கும் பண்டித நேரு, ஐன்ஸ் டின் முதலானவர்கள் அறிவுலகத்தின் பெருமையைக் காத்து வருவதைக் காண்கின்றோமல்லவா ? இத்தகைய பெரியார்களோடு வைத்தெண்ணத் தகுந்த நாகனார் அறிவுலகத்தின் பெருமையைக் காப்பதோடு, உழவர் குல உயர்வுக்காகவும் உழைக்க உறுதி பூண்டார்.

வரி கொடாமை :

இந்திய மக்களாகிய நமக்கு வரி கொடா இயக் கம் என்பது புதிதன்று. உலக உத்தமர் காந்தி யடிகள் ஆங்கில அரசாங்கத்தின் கொடுமையைப் போக்குவதற்குக் கண்ட முறைகளில் வரி கொடா இயக்கமும் ஒன்றாகும். பர்தோலி என்ற இடத்தில் சர்தார் பட்டேல் தலைமையில் நடந்த வரி கொடா இயக்கம், இந்திய சரித்திரத்தில் இடம் பெற்றுள்ளது. ஆனால், ஈராயிரம் ஆண்டுகட்கு முன்பு நம் தமிழகத் தில் வாழ்ந்த புலவர் ஒருவர், வரிகொடா இயக்கத்திற்கு வித்திட்டிருக்கிறார் என்பதை அறிய வியப்பாகவே

இருக்கின்றது. வருவாய்க் குறைவால் வரி செலுத்தும் வகையின்றி வரி கொடுக்க மறுத்த ஒருவர் செயலை இங்குக் குறிப்பிடவில்லை. பிறர் நலங்கருதித் தந்நலம் துறந்த தமிழ்ச் சான்றோர் ஒருவரின் தூய செயலே இங்குக் கூறப்படுவது.

வளவன் நாட்டில் உழவர் படும் பாட்டைக் கண்டார் வேளாண் குடியினர்க்குக் கண்ணென விளங்கிய நாகனார். பிற உறுப்புக்கள் பிணியால் வருந்துவதைக் கண்டு கலுழ்வது கண்ணின் நீர்மை அல்லவா? வேளாண் குடியினர் துன்பங் கண்டு உள்ளம் உருகினார் நாகனார். அவர் நாட்டு நிலையை மன்னனுக்கு அறிவுறுத்தி, தக்க வழிச் செலச் செய்வதே தம் கடமை என்று தீர்மானித்தார். ஆனால், மன்னனைச் சென்று காண்பது எப்படி? பசு ஒன்று காவலனைக் கண்டு வழக்குரைத்த சோழநாட்டில், நல்லறிவு படைத்த நாகனாருக்கும் மன்னன் செவ்வி கிடைப்பது அருமை என்றால், குடிகள் நிலையைக் கூற வேண்டுமா? இந்நிலை அரசனை அடுத்திருப்போரது பொறுப்பற்ற தன்மையால் நேர்ந்தது என்பது புலவருக்குத் தெரியும். அவர் அரசனை நேரில் பார்ப்பதற்குரிய வழியை ஆராய்ந்தார்; வரி கொடாமையே அதற்குரிய வழியாகும் என்ற முடிவிற்கு வந்தார்; தம் நில புலங்களுக்கு வரி கொடுப்பதை நிறுத்தினார். கருமத் தலைவர்கள் புலவரின் கருத்தறிந்தார்களில்லை. அவர் வரி கொடாமைக்குரிய காரணமும் அவர்கட்கு விளங்கவில்லை. நாகனாரைப் பொறுத்த வரையில் வறுமைக்கு இடமில்லையல்லவா?

வேளாண்குலத் தலைவரான நாகனாரை விசாரிப்பதற்கு அரசனாலன்றி வேறு யாரால் இயலும்? ஆதலின், அதிகாரிகள் அவரை அழைத்துச் சென்று வளவன்

முன் நிறுத்தினார்கள். தம் எண்ணம் நிறைவேறியது கண்டு மகிழ்ந்தார் புலவர், இந்த வாய்ப்பைத்தானே நாகனார் எதிர்நோக்கி நின்றார் ?

வளவன் முன் நாகனார் :

கிள்ளி வளவன் தன் முன் நிற்கும் புலவரைக் கண்டான் ; அவர் நாமகள் அருள் பெற்ற நல்லிசைப் புலவர் நாகனார் என்பதைத் தெரிந்தான். அவர் உழவர் தலைவர் என்பதும் அவனுக்குத் தெரியும். அவர் வரி கொடுக்கவில்லை என்றால் அதற்குத் தகுந்த காரணம் இருக்கவேண்டும் என்று எண்ணிய மன்னன், புலவரை நோக்கி, "நீர் வரிப்பணம் செலுத்தாமைக்குக் காரணம் என்னையோ ?" என்று வினவினான்.

நாகனார் நல்லுரை :

அது கேட்ட நாகனார், தம் நோக்கம் நிறைவேறுவதற்குரிய அற்றம் வந்துற்றதாக எண்ணி எழுந்தார் ; கடமையை மறந்த மன்னனைத் திருத்துவது தம் கடமை என்றுணர்ந்து, அரசனை நோக்கி, "முரசொலிக்கும் படையுடைய மூவேந்தருள்ளும் முதன்மை பெற்று விளங்கும் வளவர் பெருமானே, வான் பொய்ப்பினும் தான் பொய்யாக் காவிரி பாய்தலால், வேலி ஆயிரம் விளையும் விளையுளையுடையது உனது சோழநாடு. இந்நாட்டிற்பொருந்திய செல்வம் மிக்க பீடுகெழு வேந்தே, நான் கூறுவன சிலவுள ; அவற்றைக் கேட்பாயாக : அரசே, எளிய குடியானவர்கள் தங்கள் குறைகளைக் கூறுதற்கு வாய்ப்பளித்து, அவர்கள் குறை முடித்து ஆவன புரிந்து ஆளுவதன்றோ காவலனான உனது கடமை ? அக்கடமையறம்

வழுவாது காக்கும் மன்னன் வாழும் நாட்டிலேதான் காலந்தவருது மழை வளம் சுரக்கும் என்பதை நீ அறிந்துகொள்ளுதல் வேண்டும். அரசன் ஒருவன் செங்கோல் தாங்கி அரியாசனத்தில் அமர்ந்திருப்பது, தன் புகழைப் பரப்ப வேண்டும் என்னும் தன்னலத் திற்காகவா? மன்பதையைக் காத்து மாண்புறுவதற் காகவன்றோ? வெண்கொற்றக் குடை நிழற்றுவது வெயிலை மறைத்தற்காகவா? குடிகளின் துன்பந் துடைப்பதற்காகவன்றோ? கூரிய வேலினையுடைய வளவ, மற்றும் நீ மாற்றரசரை வெற்றி கொள்வது எதனுல் என்று எண்ணுகின்ருய்? வேலின் வலிமையி னுலா? நால்வகைப் படைகளின் ஆற்றலினுலா? இல்லை; இல்லை. உழுகின்ற கலப்பை ஊன்று சாலிடத்து விளைவிக்கும் நெல்லின் வலிமையினுல் என்பதை நீ அறிந்துகொள்வாயாக. வான் பொய்ப் பினும், வளங்குறையினும், மறம் நிகழினும் உலகம் மன்னனையன்ரே பழித்துரைக்கும்? இதனை நன்கு உணர்ந்தனையாயின், நீ புறங்கூறுவாரது பழி மொழியை நம்பிப் பகை கொள்ளாது, உழவர் குலம் உயர வழி வகுத்து, அதனுல் பிற குடிகளையும் பாது காப்பாயாக. அப்பொழுது நின் அரசும் சிறக்கும்; நாடும் நலம் பெறும்; பகைவரும் நின்னடியை வணங்கி வாழ்த்துவர்,'' என்று தம் உள்ளத்தே உறைந்து கிடந்த உண்மைகளை எல்லாம் மன்னன் மனங்கொள்ளுமாறு எடுத்து மொழிந்தார்.

'முரசுமுழங்கு தானை மூவ ருள்ளும்
அரசெனப் படுவது நினதே பெரும!
நாடுகெழு செல்வத்துப் பீடுகெழு வேந்தே!
முறைவேண்டு பொழுதிற் பதனெளி யோரீண்
டுறைவேண்டு பொழுதிற் பெயல்பெற் ருேரே;

கண்பொர விளங்குநின் விண்பொரு வியன்குடை
வெயின்மறைக் கொண்டன்றோ வன்றே; வருந்திய
குடிமறைப் பதுவே; கூர்வேல் வளவ
பொருபடை தருஉங் கொற்றமு முழுபடை
ஊன்றுசான் மருங்கி னீன்றதன் பயனே;
மாரி பொய்ப்பினும் வாரி குன்றினும்
இயற்கை யல்லன செயற்கையிற் றோன்றினும்
காவலர்ப் பழிக்குமிக் கண்ணகல் ஞாலம்;
அதுநற் கறிந்தனை யாயி னீயும்
நொதும லாளர் பொதுமொழி கொள்ளாது
பகடுபுறந் தருநர் பார மோம்பிக்
குடிபுறந் தருகுவை யாயினின்
அடிபுறந் தருகுவ ரடங்கா தோரே.'

என்பது புலவர் வாக்கு.

'உலகம் விளங்கவேண்டும்—உழவர் உயரவேண்டும்,' என்னும் பொது நோக்கம் கொண்ட புலவர் வாக்கில், எக்காலத்தவரும் அறிந்து போற்ற வேண்டிய எத்தனையோ உண்மைகள் அமைந்து கிடக்கின்றன. கிள்ளி வளவன் உள்ளம் உயர்ந்த உள்ளம்; இலக்கியச் சிந்தனையால் பண்பட்ட உள்ளம். அவ்வுள்ளத்தில் புலவர் அருளிய மொழிகள் ஆழப்பதிந்து அருள் விளங்கச் செய்தன. ஆதலின், வளவன் புறங்கூறியும் முகமன் இயம்பியும் பொய்த்துயிர் வாழும் புல்லரைப் போலாது, கண்ணின்று கண்ணறச் சொல்லிய நாகனாரின் கருத்தை வரவேற்று, உழவர்க்கு நேர்ந்த குறையை உடனே நீக்கினான்; புலவரும் பிற உழவரும் கொடுக்கவேண்டிய நிலவரியை நீக்கல் செய்தான்; நாட்டிற்குழைத்த நாகனாரின் நல்லியல்பைப் பாராட்டி, அறம் உணர்த்திய அறிவுரைக்காக அவருக்கு நன்றி கூறி அனுப்பினான்.

அன்று முதல் சோழ வளநாடு நலஞ்சிறந்தது. மக்கள் பசியும் பிணியுமின்றி, வசியும் வளனும் சிறக்க வாழ்ந்தார்கள். அரசனும் வளவன் என்னும் தன் பெயர் விளங்க வாழ்ந்தான்.

இங்ஙனம் புலவர் ஒருவர் பொது வாழ்வில் ஈடு பட்டுழைத்து வெற்றி கண்டது அருமையே. அதனினும் அருமை, புலவர் மொழியைப் பொன்னே போலப் போற்றிப் புது வாழ்வு பெற்ற புரவலனது அருஞ்செயல். இத்தகைய புலவரும் புரவலரும் வாழ்ந்த பண்டைத் தமிழகத்தை நினைத்துப் பெருமித மடைகிறோம் !

வாழ்க தமிழகம் !

குறிப்புரை

I. தமிழகம்

மெகஸ்தனிஸ் : இவர் கிரீஸ் நாட்டைச் சார்ந்த சரித்திராசிரியர்; கி. மு. மூன்ரும் நூற்ருண்டில் வாழ்ந்தவர்; சிரியா நாட்டு வேந்தனை செலூக்கஸ் என்பவனல் சந்திர குப்தனது காலத்தில் இந்தியாவிற்குத் தூதராக அனுப்பப் பட்டவர். இவர் பல இடங்களையும் பார்வையிட்டு இந்திய சரித்திரத்தைப் பற்றியும், பூகோளத்தைப் பற்றியும் ஒரு நூல் எழுதியிருக்கிருர். அந்நூல் 'இண்டிகா' (Indica) என்று வழங்கப்படுகிறது.

பிளினி : இவர் கி. பி. முதல் நூற்ருண்டிலிருந்த யவன ஆசிரியர். இவர் எழுதியுள்ள வரலாற்ருல் ஐரோப்பாவினின்று நம் நாட்டிற்கு வரும் வழி, நம் நாட்டினின்று ஐரோப்பாவிற்குக் கொண்டு சென்ற பொருள்கள், நமது நாட்டிலுள்ள முக்கியத் துறைமுகங்களின் நிலை முதலியன தெரிய வருகின்றன.

தாலமி : இவர் இரண்டாம் நூற்ருண்டினர். இவரது நூலில் முசிறி, கருவூர், கன்னியா குமரி முதலிய ஊர்கள், பேரியாறு, தாமிரவருணி முதலிய ஆறுகள் முதலியவற்றைப் பற்றிய குறிப்புக்கள் காணப்படுகின்றன. முசிறியில் ரோமர்களது ஆலயம் இருந்ததாகவும் குறிக்கப் பட்டுள்ளது.

மார்க்கோ போலோ : இவர் இத்தாலியில் வெனிஸ் நகரத்தில் 1254-ல் பிறந்தார். இவருடைய தந்தையார் ஒரு வணிகர். அவர் 1271-ல் மார்க்கோ போலோவையும் உடன் கொண்டு சீனுவுக்குச் சென்ருர். மார்க்கோ போலோ கீழ் நாடுகளெல்லாம் சுற்றினுர். இவர் நம் தமிழகத்திற்குப் பதின்மூன்ரும் நூற்ருண்டில் வந்தார். இவர் தமிழகத்தைப் பற்றி எழுதிய வரலாறு அக்காலத் தமிழகத்தைப் பற்றி அறிவதற்குத் துணை செய்கிறது.

பெரிப்புளூஸ் : கடற்பிரயாணம் செய்த ஒருவர் எழுதிய குறிப்பு இப்பெயரால் வழங்குகின்றது. ஆசிரியர் பெயர் தெரியவில்லை. தமிழகத்தின் மேற்குக் கடற்கரையில் சிறந்திருந்த முசிறி என்னும் துறைமுகத்தில் ஐரோப்பியர் மரக்கலங்களில் வந்திறங்கி, ஈயம், கண்ணாடி, தகரம், மது முதலியவற்றை விற்று, மிளகு, யானைத்தந்தம், வயிரம், பவளம், வெற்றிலை, பட்டாடை முதலியவற்றை வாங்கிச் செல்வர் என்பது போன்ற செய்திகள் அதில் காணப் படுகின்றன.

II. ஔவையாரும் அதியமானும்

'பூங்கமல......................தந்து' : வாவி-தடாகம்.

பூதன் - புள்வேளூரில் வேளாளர் மரபில் தோன்றிய வள்ளல். ஆமலகம் - நெல்லிக்கனி. வாழதிகா - அதிய மானே வாழ்வாயாக! 'அமிழ்தமயமான நெல்லிக்கனியி ைல் மரணத்தை நீக்கிறாய்,' என்னும் பொருள் தோன்ற, 'கூற்றுவனுடைய நாவினை எனக்கு மரணங் கூறுது அறுத்தாய்,' என்று பாடியிருக்கிறார்.

'ஒரு நாள்.........மாதோ' : யாம் ஒரு நாள் சென்றேம் அல்லேம்; இரண்டு நாள் சென்றேம் அல் லேம்; பற்பல நாட்களும் இடைவிடாமல் பழகி, பலரொடு கூடிச் சென்றாலும் முதல் நாள் நாங்கள் சென்ற போது எம்மிடம் கொண்டிருந்த விருப்பத்தைப்போன்ற விருப்பமுடையவன்.

(புறநானூறு, 101.)

'அன்பறி..............மூன்று' : அன்புடைமையும், அறிவுடைமையும், தெரிந்த சொல் வன்மையுடைமையும் தூதுரைப்பாருக்கு இன்றியமையாத மூன்று குணங் களாம்.

(திருக்குறள்—தூது)

'நவிறொறு............தொடர்பு' : நற்குணமுடைய மக்கள் தம்முள் செய்த நட்பானது, பழகுந்தோறும் அவர்

களுக்கு இன்பஞ் செய்தல், நூலின் பொருளைக் கற்குந் தோறும் கற்றார்க்கு இன்பம் செய்தலை ஒக்கும். (திருக் குறள்—நட்பு)

அங்கதம்-ஒருவர் குறையை அவர் உள்ளத்தில் உறுத் தும் வண்ணம் குறிப்பாகவும் வெளிப்படையாகவும் நகைச் சுவை தோன்றக் கூறுவது. தொல்காப்பியத்தில் இதன் இலக்கணம் கூறப்பட்டுள்ளது. இதனை ஆங்கிலத்தில் Satire என்பர்.

'நல்லாண்மை..............கொளல்': ஒருவனுக்கு மிக்க ஆண்மை என்று சொல்லப்படுவது, தான் பிறந்த குடியை ஆளுதலுடைமையை ஆக்கிக்கொள்ளுதலாம். இல்-நாடு என்று பொருள் கொள்ளுதல் பொருந்தும். (திருக் குறள்-குடி செயல் வகை)

III. மோசிகீரனாரும் பெருஞ்சேரனும்

'பொருப்பிலே...........பேதை': பொருப்பு-அகத் திய முனிவர் அமர்ந்து தமிழ் வளர்த்த பொதியமலை. தென் னவன்-பாண்டியன், பாண்டியர் தமிழ் வளர்த்தவர் ஆத லால், 'தென்னவன் புகழிலே கிடந்து' என்றார். திருஞான சம்பந்தர் சமணர்களோடு செய்த வாதத்தில் 'வாழ்க அந்தணர்' என்ற பாவை ஏட்டில் எழுதி வைகையில் விட, அவ்வேடு எதிரேறி வந்தது என்ற சரித்திரத்தைக் கொண்டு 'வைகை ஏட்டிலே தவழ்ந்த' என்றார். பேதை-தமிழணங் காகிய குழந்தை. (வில்லி பாரதம்)

'நெல்லு........கடனே': பரந்த இடத்தையுடைய உலகம் அரசனாகிய உயிரை உடையது. அதனால், இவ்வுல கத்தார்க்கு நெல்லும் உயிரன்று; நீரும் உயிரன்று; யான் உயிர்,' என்பதை அறிந்து நடத்தல் வேலாயுதத்தால் மிக்க படையை உடைய அரசனுக்குக் கடமையாகும். (புறம். 186)

'நெடுநிலை..........மாளிகை': நீண்ட சிகரங்களை யுடைய மேருமலை போலக் கொடி கட்டிய மதிலினையுடைய

பழம்பதியாகிய வஞ்சி மாநகரின் இடையே நின்று உயர்ந்த பொன் மாளிகை. (சிலப்பதிகாரம்-நடுகற்காதை)

'நுரைமுகந்.........செயலே': 'நுரையை முகந்தாற் போன்ற மெல்லிய பூவையுடைய கட்டிலை முரசு கட்டில் என்று அறியாது அதில் ஏறிக்கிடந்த என்னைச் சினம் தோன்ற இரு கூறுக்கும் நின்னுடைய வாள் வாயை மாற்றியதாகிய அதுவே போதும், நல்ல தமிழ் முழுதும் அறிந்தமைக்கு; அதோடு அமையாது, நெருங்கி வந்து, நினது வலிமையுடைய மத்தளம் போன்ற தோளினால் (சாமரை கொண்டு) குளிர வீசினாய்; இவ்வகன்ற உலகத்தில் பரந்த புகழுடையார்க்கல்லது அவ்விடத்ததாகிய உயர்ந்த நிலைமையை உடைய உலகத்தில் உறைதல் இல்லாமையைத் தெரியக் கேட்ட தன்மையாலேயோ, வெற்றி பொருந்திய தலைவா, நீ இங்கு சாமரையை வீசுதல்?' (புறம். 50)

IV. ஆந்தையாரும் பெருஞ்சோழனும்

'யாண்டு பலவாக............ஊரே': யாங்காகியர்-எவ்வாறாயிற்று? மாண்ட-மாட்சிமைப்பட்ட, மாண் என்பது பகுதி. மாள் என்ற பகுதியடியாகப் பிறந்த மாண்ட என்ப பதற்கு இறந்த என்பது பொருள். நிரம்பினர்-அறிவு நிரம்பினர். இளையர்-ஏவலாளர். அதன் தலை-அதற்குமேல். ஆன்று அவிந்து அடங்கிய-நற்குணங்களால் அமைந்து பணியவேண்டிய உயர்ந்தோரிடத்து ஐம்புலனும் அடங்கிய (கல்வியால் நிறைந்து அதற்கேற்பச் சுவை முதலியவற்றில் செல்லும் அறிவு அவிந்து மனமொழி மெய்களால் அடங்கிய என்றும் பொருள் கூறலாம்.) (புறம். 191)

'புணர்ச்சி.........தரும்': ஒருவரோடு நட்பாவதற்குச் சேர்ந்திருத்தலும், பலகால் கண்டு பேசிப் பழகுதலும் என்ற காரணங்கள் வேண்டாவாம்; இருவருக்கும் காரியங்களில் கொள்கை வேறுபாடில்லாமல் அறிவு ஒத்திருத்தலே சிநேகமாகிற சம்பந்தத்தைத் தரும். (திருக்குறள்-நட்பு)

'கேட்குந............படுமே': கேளாதவற்றைக் கேட்பவை போலவும், பேசாதவற்றைப் பேசுபவை போலவும், நடவாதவற்றை நடப்பவை போலவும், இவையல்லாத வேறு தொழில்களைச் செய்யாதவற்றைச் செய்பவை போலவும் அஃறிணையிடத்தும் உயர்திணை போல வைத்துச் சொல்லப் படும். (நன்னூல், 409)

'நினைக்கும்............தன்றே': மருட்கை-வியப்பு. கந்து - பற்றுக்கோடு. (புறம். 217)

V. சாத்தனாரும் குமணனும்

'உவப்பத்...........தொழில்;: மகிழும்படி கலந்து அளவளாவி, 'இனி இவரை எவ்விடத்து எப்பொழுது எவ்வாறு சேருவோம்!' என்று நினைத்து நீங்குதலாகிய தன்மையை உடையது கற்றறிந்த புலவர்களது தொழில்.

'கொடுப்பது............கெடும்': ஒருவன் மற்றொருவனுக்குக் கொடுப்பதைக் கண்டு பொறாமை கொண்டு விலக்குபவனது சுற்றம், உடுப்பதற்கும் உண்பதற்கும் இன்றிக் கெட்டொழியும். 'சுற்றம் கெடும்,' எனவே, அவன் கேடு சொல்லாமலே விளங்கும்.

VI. நாகனாரும் வளவனும்

'நீ உடன்று.........ஆற்றலை': நீ சினந்து பார்க்கும் இடம் தீப்பரக்க, நீ அருளிப்பார்க்குமிடம் பொன் பொலியச் செஞ்ஞாயிற்றில் நிலவு உண்டாக வேண்டுமானாலும், வெண்ணிறச் சந்திரனில் வெயிலுண்டாக வேண்டுமானாலும் நீ வேண்டிய பொருளை உண்டாக்கும் வலிமை உடையை. (புறம். 38)

'வன்புல...........நின்னோக்கினரே': வன்புலத்தினின்றும் வந்த சுற்றத்தார்க்கு விருந்தாக விரும்பிக் கொடுக்கும் மென்புலத்து ஊர்களை உடைய நல்ல நாட்டுக்கு

வேந்தே, மலையிலிருந்து பாய்ந்து பெரிய கடலை நோக்கி நிலவெல்லையில் பாயும் பல ஆறுகளைப் போலப் புலவர் யாவரும் நின்னை நோக்கினர். புலம் - இடம். (புறம். 42)

'முரசு முழங்கு.........தோரே': முரசங்கள் முழங்கும் படைகளைக் கொண்ட சேரசோழ பாண்டியர்களாகிய மூவேந்தரது அரசுக்குள்ளும் 'அரசு' என்று சிறப்பித்துச் சொல்லப்படும் தகுதியுடையது உன்னுடைய அரசேயாகும். நாட்டில் பொருந்தி விளங்கும் செல்வத்தையுடைய பெருமை வாய்ந்து விளங்கும் அரசே, நீதி முறையை வேண்டுங் காலத்தில் பெற்ற எளியவர், இங்கு மழை வேண்டும்பொழுது மழையைப் பெற்றவர்கள்; கண்ணின் ஒளியுடன் மாறுபட விளங்குகின்ற வான் அளாவும் உனது பெரிய குடை, வெயிலை மறைப்பதற்கென்று அமைந்ததோ? அன்று; வருத்தமுற்ற குடிகளைத் துன்பத்தினின்றும் காப்பதற்காகக் கொண்டது. கூரிய வேற்படையை உடைய வளவனே, போர் செய்கின்ற உனது படையானது கொடுக்கின்ற வெற்றியும் உழவுக் கருவியாகிய கலப்பை பூமியில் பதியும் சாலில் விளைந்த நெல்லின் பயனாகும். மழை பெய்யாமல் தவறினாலும், அதனால் விளைவு குறைந்தாலும், இயற்கை அல்லாதன செயற்கையாகத் தோன்றினாலும் ஆட்சி புரியும் அரசரையே பழிக்கும் இடமகன்ற இவ்வுலகம். அதனை நன்றாக ஆராய்ந்து அறிந்திருப்பாயானால், நீயும், கோள் சொல்வாரது உறுதியற்ற வார்த்தைகளை மேற்கொள்ளாது, ஏரைக் காப்பவரது குடியைப் பாதுகாத்து, அதனால் ஏனைய குடி மக்களையும் காப்பாற்றுவாயானால், உன் பகைவர் உன் அடிகளைப் போற்றி நிற்பர். (புறம் - 35.)